STATE LEGISLATURE, MADRAS
23 JUN 1962

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 13th December 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Sriperumbudur Panchayat

* 2281 *Q.*—SRI K. ANBAZHAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a complaint on mal-administration of Panchayat and high handed action of the President, Sriperumbudur Panchayat, dated 24th March 1961, has been received by the Collector of Chingleput, from one Sri S. E. Natesan;

(*b*) if so, the action taken thereon;

(*c*) whether the Government have sanctioned a sum of Rs. 10,000 to the Panchayat, for constructing a bus stand; and

(*d*) if so, whether the money has been utilised for the said purpose?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir. But the Collector of Chingleput has reported that he has received only the petition, dated 5th September 1960 of Sri S. E. Natesan of Sriperumbudur and also reminders thereon, dated 31st October 1960, 21st November 1960, 28th November 1960 and 7th July 1961.

(*b*) On the allegations made against the President, the Collector made enquiries and pursued the question of removing the President from office under section 150 of the Madras Panchayats Act, 1958. However since the President was found to be not personally blameable for most of the irregularities, the Collector dropped the question, as there was no strong case for removal of the said president from office.

(*c*) Yes, Sir.

(*d*) The Executive Officer, Sriperumbudur Panchayat has since reported that the work was completed on 26th October 1961.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்தில் பார்வையாளராக இருப்பதற்குக்கூட அனுமதிக்கப்படாமல் வேண்டுமென்றே சிலர் வெளியேற்றப்பட்டார்கள் என்ற புகார் கலெக்டருக்கு தெரிவிக்கப்பட்டதா? இதற்கு முன்னால் லோகல்

[13th December 1961

போர்ட் இன்ஸ்பெக்டருக்கும் அனுப்பப்பட்டதா? அப்படியிருந்தால்- அப்படி வெளியேற்றப்பட்டது தவறு என்பதுபற்றி தலைவருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதுபோன்ற புகார் வந்ததாக என்னிடம் தகவல் இல்லை.

SRI K. ANBAZHAGAN: பஸ் நிலையம் கட்டுவதற்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட தொகை அதைக் கட்டுவதற்காக உபயோகப்படுத்தப்படாமல் அதற்கு மாறாக வேறு சில துறைகளிலே செலவழிக்கப்பட்டது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படி செலவழிக்கப்பட்ட 10,000 ரூபாய்க்கு இன்னும் வழிவகை செய்யப்படவில்லை என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: பத்தாயிரம் ரூபாய், பஸ் ஸ்டாண்டு கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை, வேறு இனங்களுக்காகச் செலவழிக்கப்பட்டது. அது தவறான முறையில்தான் நடந்திருக்கிறது. இப்பொழுது அந்தத் தொகையைக்கொண்டு பஸ் ஸ்டாண்ட் கட்டப்பட்டு, ரூ. 247 பாக்கி இருக்கிறது.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட தொகையை கலெக்டர் அனுமதி இல்லாமலும், மேல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமலும் வேறு துறையிலே செலவழித்தது தவறு என்று பஞ்சாயத்திலேயே சில உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அவ்வாறு தவறு செய்த தலைவரை பதவியினின்றும் நீக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: பஞ்சாயத்து பிரசிடண்டை சிறிய தவறு செய்ததற்காக ஆரம்ப காலத்திலேயே நீக்குவதென்றால் கடைசியிலே கஷ்டமாக வந்து சேரும். அவர்கள் தவறு செய்தால் திருத்தப் பார்க்கவேண்டும், அப்படித் திருத்த முடியாமல் தொடர்ந்து தவறுகள் செய்வார்களேயானால் அவர்களை நீக்கவேண்டும். அவர்களை நீக்குவதற்கு சர்க்காருக்குத்தான் அதிகாரம் உண்டு என்பதல்ல, மக்களுக்கும் அதிகாரம் இருக்கிறது. அவர்களை எல்லா வழிகளிலும் திருத்த முடியவில்லை என்றால்தான், அவர்களை நீக்குவது நல்லது என்பது என்னுடைய கருத்து.

SRI K. VINAYAKAM: Is the Hon. Minister aware of the fact that most of these frivolous and baseless complaints and allegations were made by this Mr. Natesan only on political considerations and not on any practical grounds?

THE HON. SRI C. SUBRAMANIAM: There might have been political considerations also. But, in this case, there have been irregularities on the part of the President also.

[13th December 1961]

SRI S. M. ANNAMALAI : இந்தப் பணம் சர்க்காரால் எப்பொழுது சாங்ஷன் செய்யப்பட்டது ? பஸ் ஸ்டாண்டு கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை வேறு வழியில் செலவழித்ததற்காக பஞ்சாயத்துத் தலைவர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அந்தப் பணத்தை இப்பொழுது பஸ் ஸ்டாண்டு கட்டுவதற்காக உபயோகப்படுத்தி விட்ட காரணத்தினால், இனிமேல் ஏதாவது தவறு ஏற்பட்டால் அப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, பஞ்சாயத்துத் தலைவர் 1955-56-ல் ஆடிட் ரிப்போர்ட்படி ரூ. 3,500 அளவு முறை தவறி உபயோகப்படுத்தியதுபற்றி எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

* 2281 Q.—SRI K. ANBAZHAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any complaint has been made to the Collector of Chingleput against the President of Sriperumbudur Panchayat that a cheque for Rs. 3,000 received by him for a public cause has not been utilised for the purpose; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes. Sir, the Collector of Chingleput has reported that the cheque was for Rs. 3,500.

(b) The president has received the sum not in his capacity as the president of the panchayat but only in his capacity as the president of the Local School Building Committee. He has been advised by the Collector to deposit the amount in a savings bank and the Revenue Divisional Officer has also advised him to take up the construction of the school building and complete the work as early as possible.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, 1957-ம் வருஷம் ஜூன் மாதம் 20-ம் தேதியில் பஞ்சாயத்து தலைவர் ரூ. 3,500-க்கு செக்கை பெற்றிருந்தும், கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல் அண்மையில் இதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றத்திற்காக தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சர்க்கார் கருதவில்லையா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கலெக்டரோ, சர்க்காரோ நடவடிக்கை எடுப்பதற்கு ஒன்றும் இல்லை. இருந்தாலும் கலெக்டர்

தலையிட்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டதின் காரணமாக பணத்தை திருப்பி கொடுத்திருக்கிறார். இதுமாதிரி ஏற்பட்டால் சர்க்கார்தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதில்லை. இதைக் கொடுத்தவர்கள் யாராவது தங்களிடம் தகவல் வைத்திருந்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

SRI K. ANBAZHAGAN: பஞ்சாயத்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க இடம் இல்லையென்றால், போலீஸ் இலாக்கா நடவடிக்கை எடுப்பதற்கு வழியில்லையா?

THE HON. SRI C. SUBRAMANIAM: போலீஸ் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னால் இதில் கிரிமினல் குற்றம் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அப்படி இருந்தால் நடவடிக்கை எடுக்கவேண்டும். அல்லது யாராவது பணம் கொடுத்தவர்கள் அக்கரையுள்ளவர்கள் ரிபோர்ட் கொடுப்பார்களேயானால் இதைப் போலீஸ் இலாக்கா பரிசிலனை செய்யும்.

SRI T. SAMPATH: Sir, may I know whether receipt of deposits will be considered as an offence?

THE HON. SRI C. SUBRAMANIAM: Receipt of deposit and not utilising it for the purpose for which it is received will be an offence.

SRI S. M. ANNAMALAI: ஸார், இப்படி பஞ்சாயத்து போர்டு தலைவரே பணத்தை துர்விநியோகம் செய்தவர்மீது, பில்டிங்குக்காகக் கொடுத்த பொதுப்பணத்தை இம்மாதிரி செய்பவர்மீது நடவடிக்கை எடுத்து, அவரை நீக்க ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதுதான் ஜனநாயகத்தில் உள்ள சில குறைகள்; இப்படிப்பட்டவர்கள் சில சமயங்களில் பொதுமக்களால் தேர்தெடுக்கப்பட்டு வந்து விடுகிறார்கள். ஆகையினால், பொது மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்போது கவனிக்க வேண்டிய விஷயம் இதுவும். இதிலிருந்து வரக்கூடிய பொதுத் தேர்தலில் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, 1957-ம் ஆண்டில் அளிக்கப்பட்ட செக்கை இவர் யாருக்கும் சொல்லாமல், அவரே அந்தச் செக்கை மாற்றி, பணத்தையும் கையாண்டிருக்கிறார், எந்த அதிகாரிகளுக்கும் தெரிவிக்காமல். இந்த விதமாகச் செய்தது மோசடி என்றாவது கனம் அமைச்சரவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதைப்பற்றி அபிப்பிராயம் கொடுக்கக்கூடிய நிலையில் நான் இங்கே வக்கீலாக இல்லை; இதில் சர்க்கார்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதில்லை. யாராவது குற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று ரிபோர்ட் கொடுத்தாலும், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[13th December 1961]

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இதே பஞ்சாயத்துத் தலைவரே பஞ்சாயத்துக்கு தண்ணீர் குழாய்கள் வைக்கும் திட்டத்தில் அவரே காண்ட்ராக்ட் எடுத்து, ரூ. 87,000 பஞ்சாயத்திலே பெற்று இருக்கிறார் என்பதும்.

DEPUTY SPEAKER : This question does not arise out of the main question.

SRI K. ANBAZHAGAN : I do not want to put any more questions on this subject now but I would request the Chair to allow a half-hour debate on the irregularities in the panchayat

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, it would be most inadvisable to discuss the panchayat however important it might be. There is the panchayat organization and the law relating to panchayats. I would request the hon. Member, Sri Anbazhagan, not to press for half-hour debate here. He could initiate action in the panchayat and he is quite capable of doing it. As far as the Government are concerned, I can assure him that all steps would be taken to see that these irregularities are not committed and we should also warn the public that whenever men of integrity are not available, any person who offers himself as a candidate should not be elected.

DEPUTY SPEAKER : The hon. Member has got an opportunity to discuss this matter during the Budget discussion. So I do not think that there is any necessity to allow a half-hour debate.

Madhar Sangams

* 2283. *Q.*—SRI G. ANNAMALAI MUTHURAJA : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் எத்தனை மாதர் சங்கங்கள் உள்ளன ?

(இ) 1961-ல் அவைகளுக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ? எவ்வாறு செலவிடப்படுகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) 110 Madhar Sangams are functioning under the Women's Welfare Department.

(ஆ) Rs. 2,500 per annum to be utilised for purchase of centre materials and games materials.

SRI G. ANNAMALAI MUTHURAJA : ஸார், சாதாரணமாக பஞ்சாயத்து போர்டில் மாதர் சங்கங்கள் இருக்கின்றன. அதே மாதிரி யூனியன்களிலும் மாதர் சங்கங்கள் வைக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது விமென்ஸ் வெல்பேர் டிபார்ட்மெண்டால் செய்யப்படுகிறது. இப்பொழுது 110 மாதர் சங்கங்கள் நடைபெறுகின்றன. எங்கெங்கே புதிதாக ஆரம்பிக்க முடியுமோ, அங்கெல்லாம் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[13th December 1961

SRI S. M. ANNAMALAI : இப்பொழுது நடைபெறும் 110 மாதர் சங்கங்களுக்கும் ரூ. 2,500 என்று இருக்கிறது. அது போதுமா? இந்த தொகையை மேலும் அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்போகிறீர்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM : ரூ. 2,500 ஒதுக்கி இருக்கிறது என்றால், இன்னின்ன வேலைகள் செய்யவேண்டும் என்று அது செய்யப்பட்டிருக்கிறது. மேலே அதிகம் தொகை வேண்டும் என்று அவசியம் இருந்தால், அது கவனிக்கப்படும். ஆனால், ஒதுக்கிஇருக்கும் தொகை ரூ. 2,500 என்பதற்காக அதிகமாக ஒதுக்கவேண்டிய அவசியம் இல்லை.

DEPUTY SPEAKER : Questions 2284, 2285, 2286 2288, 2289, 2292, 2294, 2299, 2302 2303, 2305, 2309, 2311, 2313 are postponed as the Hon. Minister for Industries, Sri Venkataraman, who was expected yesterday, did not return. Those questions will be taken up soon after he returns.

SRI T. S. RAMASWAMI : The Hon. Minister in charge of Industries is here.

DEPUTY SPEAKER : Those questions are to be answered by the Hon. Sri Venkataraman and not by the Hon. Minister for Home.

Bridge across Kadila river

* 2287. *Q.*—SRI M. KANDASAMY PADAYACHI : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை-திருவெண்ணெய்நல்லூர் போகும் ரோட்டிலுள்ள கடில நதியின் குறுக்கே பாலம் கட்ட உத்தேசமுண்டா?

(இ) அப்படியானால் எப்போது வேலை துவக்கப்படும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Yes, Sir.

(ஆ) The work, which has been carried over to the Third Five-Year Plan as a committed work, will be taken up for execution after revised sanction by Government.

Krishnagiri Panchayat

* 2290. *Q.*—SRI N. MARUDHACHALAM (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : கனம் மசல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் ஜில்லா, கிருஷ்ணகிரி பஞ்சாயத்து போர்டு அதிகாரியின்மீது பணம் கையாடல் ஊழல் விஷயமாக புகார்கள் வந்துள்ளனவா?

(இ) அப்படியானால், அவைகளின்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

(உ) இல்லை என்றால், காரணமென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Yes, Sir.

(இ) & (உ) The matter is under consideration.

13th December 1961]

Virapandi-Kandachipuram **Road**

* 2291. *Q.*—SRI P. KUPPUSAMI : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருக்கோவிலூர் தாலூக்கா வீரப்பாண்டியிலிருந்து கண்டாச்சிபுரம் போக பாதைமடிக்கும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The work has not been included under any scheme.

Senapiratti Panchayat

* 2293. *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI (on behalf of SRI K. R. NALLASIVAM) : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், கரூர் வட்டத்தைச் சேர்ந்த சனுப்பிரட்டி பஞ்சாயத்துத் தலைவர் மீது பணக்கையாடல் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் சம்பந்தமாக சம்மந்தப்பட்ட பஞ்சாயத்து அங்கத்தினர் புகார் விண்ணப்பம் அனுப்பப் பட்டதா ?

(இ) இதன்மீது விசாரணைகள் நடத்தப்பட்டனவா ?

(உ) அதன் முடிவுகள் யாவை ?

(எ) சமீபத்தில் மேற்படி பஞ்சாயத்துக் கணக்குகள் 'ஆடிட்' செய்யப்பட்டனவா ?

(ஐ) கண்ட உண்மைகள் யாது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir. Two petitions have been received from the members of the panchayat, one in January 1961 and the other in June 1961.

(*b*) & (*c*) Yes, Sir. On some of the allegations regarding non-observance of rules and procedure which were found to be true, the president has been warned by the Sub-Collector, Karur. The other allegations regarding misappropriation of panchayat funds are being enquired into by the Sub-Collector, Karur. The Collector who is the Inspector of Panchayats will take necessary action on receipt of report from the Sub-Collector, Karur.

(*d*) The panchayat accounts up to 31st March 1961 have been audited.

(*e*) Certain irregularities in the accounts and procedure have been noticed in audit. Suitable action will be taken as soon as the audit report is finalised and the investigation of the Sub-Collector, Karur, is completed.

Fertilizers (*Distribution*)

* 2295 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of tons of fertilisers distributed district-war for this year and for the last five years; and

(*b*) the additional quantity of fertilizers allotted to the Thanjavur district under the Package Deal by the Government and (by the Ford Foundation) under Foreign aid?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A paper * is placed on the table of the House.

SRI T. S. RAMASWAMI : We are under the impression that under the Package Deal more manures were supplied but from the statement placed on the table of the House, we find that in the Tanjore district there is no appreciable difference after the Package Deal has been introduced. May I know the reason for that?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 1960–61 was the year when the Package Scheme was just inaugurated. In the next year there will be appreciable increase.

SRI N. K. PALANISAMI : In 1956–57 the quantity of fertilizers distributed was 1,25,900 tons but in 1961–62 only 49,579 tons were distributed. May I know why there is so much reduction and will not this reduction affect food production?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Month after month according to the availability of wagons, fertilizers are moved and sometimes figures do vary but if we take into account the entire supply for the year, we will find that the supply position was better than last year.

SRI S. M. ANNAMALAI : ஸார், நம் மாநிலத்திற்கு உரம் எவ்வளவு வேண்டியிருக்கிறது, எத்தனை சதவிகிதம் அதில் கொடுக்கப்படுகிறது? புள்ளி விவரப்படி பார்த்தால், 1959-60-ல் இருந்ததைவிட, ஆண்டுக்காண்டு குறைந்துகொண்டே வருகிறதே, இதை எடுத்துச் சொல்லி மத்திய சர்க்காரிடம் அதிகம் பெறுவதற்கு நம் அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மொத்தத்தில் ஆண்டுக்காண்டு குறைவதில்லை. அதிகமாகத்தான் கொடுக்கப் பட்டு வருகிறது. ஆனால், எவ்வளவு வேண்டுமென்று கோருகிறோமோ அவ்வளவு கிடைப்பதில்லை. அதை அதிகப்படுத்தவும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதோடுகூட வேறு சில இனமும் உரத்தில் கிடைக்கிறது.

SRI N. K. PALANISAMI : While race horses and face powders are imported into this country from outside, why not the Government take steps to represent to the Centre to import at least fertilizers from foreign countries?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : But I may tell the hon. Member that those who require face powder will not be satisfied with ammonium sulphate. Ammonium sulphate is also imported.

* Printed as Appendix I on pages 736 infra.

[13th December 1961]

Sri S. M. ANNAMALAI: ஸார், இப்பொழுது அம்மோனியம் சல்பேட் விலையை மத்திய சர்க்கார் குறைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதனால், நம் மாகாணத்தில் "டிமாண்ட்" அதிகமாக வில்லையா? அப்படியானால், இந்த ஆண்டு மேலும் அதிகமாக ரசாயன உரங்களைப் பெற என்ன முயற்சிகள் செய்யப் பட்டன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: சர்க்கார் எடுக்கும் முயற்சிகள் முக்கியமாக நீண்டகால முயற்சிகள்; உரம் நாட்டி லேயே உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை அமைப்பது. அப்படி அமைக்கப்பட்டு வருகின்றன. அவைகளும் சீக்கிரத்தில் உற்பத்தி யைத் தொடங்கும். அவையும் தமிழ் நாட்டுக்குக் கிடைக்கிறது. மேலும் உரம் அதிகமாக வேண்டியிருந்தால், சூபர் பாஸ்பேட் போன்ற மற்ற உர உற்பத்தித் தொழிற்சாலைகள் அமைக்கப் படுகின்றன.

Sri A. MARIAPPAN: ஸார், சேலம் ஜில்லாவிற்கு உரம் குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அதிகப்படுத்த முயற்சி எடுக்கப்படுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: மற்ற ஜில்லாக் களைப்போல சேலத்திற்கும், எவ்வளவு கிடைக்கிறதோ அந்த அளவில் வினியோகம் செய்யப்படுகிறது.

Sri T. K. SUBBIAH: ஸார், 1958-59-ம் ஆண்டைவிட 1960-61-ம் ஆண்டுக்கு மிகவும் குறைந்திருக்கிறதே, அதன் காரணம் என்ன என்று சொல்ல முடியுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: ஆண்டு பூராவுக்கும் கிடைத்த சப்ளை இதிலே கொடுக்கப்படவில்லை. வருஷம் பூராவை யும் பார்த்தால் முன்னால் 50 சதவிகிதமாக இருந்தது, இப்பொழுது 60 பர்சென்ட் வரை கிடைத்திருக்கிறது; அதிகமாகக் கிடைத் திருக்கிறது.

Sri T. K. SUBBIAH: 1960-61-ல் மிகவும் குறைந்திருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன என்றுதான் நான் கேட்டேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: கிடைத்தது விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதைத் தவிர வேறு என்ன காரணத்தைச் சொல்லமுடியும்?

Sri N. R. THIAGARAJAN: 1956-57-ல் மதுரை ஜில்லா விற்கு ஏறத்தாழ 8,150 டன் வழங்கப்பட்டு இருந்தது. ஆனால் 1960-61-ல் 4,000 டன்தான் வழங்கப்பட்டது. பாதியாகக் குறைந்து விட்டது. மொத்தமாகப் பார்க்கும்பொழுது 1956-57-ல் 1,25,000 டன் கொடுக்கப்பட்டது. 1960-61-ல் 1,05,000 டன் கொடுக்கப் பட்டது. மொத்தத்தில் 20,000 டன்தான் குறைந்திருக்கிறது என்றாலும், மதுரையைப் பொறுத்தவரையில் பாதியாகக் குறைக் கப்பட்டதற்குக் காரணம் என்ன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: கனம் அங்கத் தினருக்கு ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாவட்டங்களைப் பொறுத்தவரையில் ஓரவஞ்சம் கிடையாது.

[13th December 1961

அந்தந்த மாவட்டங்களின் தேவையையும், அங்கே உள்ள பயிரையும் கணக்கில் வைத்துக்கொண்டுதான் விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

Thandarampattu village (water-supply)

* 2296. *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI P. S. SANTHANAM) : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு, செங்கம் வட்டம், தண்டாரம்பட்டு கிராமத்திற்கு குடிதண்ணீர் விஷயமாய் அவ்வூர் பஞ்சாயத்து போர்டு கேட்டதுண்டா ?

(இ) அப்படியானால், அந்த விஷயம் எந்த நிலையில் இருக்கிறது ?

THE HON. C. SUBRAMANIAM : (அ) & (இ) The Collector of North Arcot has been asked to furnish requisite information and his report in the matter is awaited.

Vriddhachalam Road (metalling)

* 2297. *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. SELVARAJ) : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் பாலக்கொல்லை சாலையில் ஆலடியிலிருந்து விருத்தாசலம் வரை கப்பி போடுவதற்கும் பாலங்கள் கட்டுவதற்கும் உள்ள (P.W.D.) திட்டம் என்னவாயிற்று ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The work has been taken up for execution and is in progress.

Lands (collection of rubbish)

* 2300. *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது ராஜ்யத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் குப்பை கொட்ட தனி இடம் ஆர்ஜிதம் செய்து கொடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Orders have already been issued to the effect that the Poramboke lands which have been vested with the Panchayats can be utilized for collecting rubbish and raising compost. The Collectors have been asked to issue instructions to their subordinate Revenue Officials to see that convenient available spaces are marked to the panchayats at the village by karnams, etc., so that they can be made use of by panchayats for collecting rubbish and raising compost.

SRI S. M. ANNAMALAI : கனம் அமைச்சர் அவர்கள் பதிலில் பஞ்சாயத்து போர்டுகளுக்கு புறம்போக்கு நிலத்தை ஒதுக்கிக் கொடுப்பதற்கு கலெக்டர்களுக்கு உத்தாவிட்டிருப்ப

[13th December 1961]

தாகச் சொன்னார்கள். சில பஞ்சாயத்து போர்டுகளுக்கு புறம் போக்கு நிலம் இல்லாத காரணத்தால், ஊரின் அருகாமையிலேயே கம்போஸ்ட் உரத்தைத் தயாரிப்பதால் துர்நாற்றம் எடுக்கிறது. ஆகவே, தனிப்பட்டவர்களுடைய நிலம் பஞ்சாயத்து போர்டுக்குத் தேவையாக இருந்தால் அதை ஆர்ஜிதம் செய்வதற்கு அனுமதி அளிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பஞ்சாயத்து போர்டு அம்மாதிரி விண்ணப்பித்துக் கொண்டால், அது கலெக்டரால் கவனிக்கப்படும்.

Police Station for Ennore

* 2301 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Home be pleased to state, whether it is a fact that there are no police stations or out-posts between the Buckingham Canal and Seashore from Ennore lock to Satankuppam and Kattupalli in Ponneri taluk?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. It is a fact that there are no police stations or out-posts in the area mentioned by the hon. Member.

SRI K. VINAYAKAM : This vast stretch of land being a very bushy one, whenever crimes are committed in this area, most of them go undetected or unnoticed. In the interest of public order and safety would the Government reconsider the possibility of establishing a police out-post or station in this area because the Buckingham Canal which divides this area from the rest of the land serves as an impediment for police officers to go to the spot of the crime early.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is the view of the police that there is no need for a police station or out-post in this area.

SRI S. PAKKIRISAMI PILLAI : குறிப்பாக கிராமப் பகுதிகளிலே இருக்கும் போலீஸ் ஸ்டேஷன்களிலே அல்லது அவுட் போஸ்டுகளிலே இந்த மாதிரி கான்ஸ்டேபிள்கள் குறைந்த எண்ணிக்கையில் இருப்பது உண்மையா ? அப்படிக் குறைவாக இருப்பதினால் கேஸ்களை விசாரிப்பதற்கு சில ஸ்டேஷன்களிலே அதிகாரிகள் இல்லை என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விடை அளிக்கப்படும்.

SRI K. VINAYAKAM : Is the Hon. the Minister aware of the fact that this land being an area where casuarina cultivation is going on, incessant thefts of casuarina wood occur in this area. May I know how many complaints have been made to the main police

station at Ponneri and how many were detected? If the figures are made available would not Government come to the conclusion that a police out-post is necessary in this area?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If the hon. Member could supply me some figures like that, the Government may look into the matter.

Ammonium sulphate (mal-distribution)

* 2304. *Q.*—SRI N. MARUDHACHALAM (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா, செங்கம் கூட்டுறவு ஸ்டோர்ஸில் 80 மூட்டை அமோனியம் சல்பேட் துர்விநியோகம் செய்ததாக ஆரணி போலீஸார் 1961 ஜூலை மாதத்தில் கைப்பற்றியது உண்மையா?

(இ) என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (இ) The question probably refers to the seizure of 80 bags of chemical fertilizers at the check point at Tiruvannamalai-Chittoor road in August 1961—if so, the facts of the case are as follows :—

The Inspector of Customs, Intelligence Branch, Chidambaram and the Inspector of Customs, Mobile Party, Cuddalore, conducted a vehicle check at Tiruvannamalai-Chittoor road near Bagmarpet, Polur taluk, at 4 a.m. on 5th August 1961. A lorry bearing Registration No. MDJ 2031 was stopped and it contained 60 bags of ammonium sulphate and 20 bags of ammonium sulphate nitrate. On enquiry it was found that the lorry was coming from Chengam and proceeding to Arni. There is no precise information as to how the stocks were obtained and from where.

A case has been registered and is under investigation. Further details are awaited.

Development schemes (Harijan Officers)

* 2306. *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI S. R. MUNUSAMI) : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் எத்தனை பேர் அரிசனங்கள்?

(உ) வட்டார வளர்ச்சி பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் எத்தனை பேர்?

(எ) அவர்களில் எத்தனை பேர் அரிசனங்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) 372 regular Block Development Officers, 17 Additional Block Development Officers.

13th December 1961]

(இ) 6 (six).

(உ) 358 (excluding 5 Panchayat Unions where elections could not be conducted in view of stay orders issued by the High Court).

(எ) 1 (one).

SRI M. K. SOMASUNDARAM : இந்த பிளாக் டெவலப் மென்ட் ஆபீசர்களிலே ஏன் விகிதாசாரப்படி ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த பிளாக் டெவலப் மென்ட் ஆபீசர்கள் மற்ற இலாக்காக்களிலிருந்து எடுக்கப் படுகிறார்கள். அதிலே விகிதாசாரத்தை அனுஷ்டிப்பது கஷ்ட மாக இருக்கும்.

SRI M. K. SOMASUNDARAM : மற்ற இலாக்காக்களிலும் ஹரிஜனங்கள் நல்ல திறமை வாய்ந்தவர்கள் இருக்கிறார்களே, அவர்களை ஏன் இதற்குப் போடக்கூடாது?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கு அவர்கள் திறமையாக வேலை செய்கிறார்கள் என்று சொன்னால், அவர்களை வேறு இலாக்காக்களுக்குப் போடவேண்டிய அவசியமில்லை. இந்த இலாக்காவிற்கு யார் பொருத்தமாக இருக்கிறார்களோ அவர்களைத் தான் போடவேண்டும்.

Clerical staff of Education Department (Pay)

* 2307 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the recommendations of the Pay Commission were implemented in the case of the clerical staff of the Education department in Kanyakumari district;

(b) if not, the reasons therefor; and

(c) the difference between the pay scales of the clerical staff of the Education department of Kanyakumari district and those of the other districts?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) Does not arise.

(c) The revised pay scales of clerical staff of Education Department in the Kanyakumari district and in the other districts are identical and do not differ.

SRI T. T. DANIEL : The present arrangement is that the management should get 20 per cent out of the fee collection. In view of the fact that we have extended fee concessions to all students whose parents earn less than Rs. 1,200 per annum, the management is not in a position to pay even the persent scale to

these clerks. Will the Government look into the matter and give some special grant to the managements for enhancing the scales of pay of these clerks?

THE HON. SRI C. SUBRAMANIAM : This question relates to clerical staff of the Education Department in Kanyakumari district. If the hon. Member is interested in the other question he has put, he may give notice of a separate question.

Presidents of Panchayat Union Councils (Election)

* 2308. *Q.*—SRI S. M. ANNAMALAI : *கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தலைவர் தேர்தல்களில் கடும் போட்டியும், பணச் செலவும், மக்களிடையே பிளவு மனப்பான்மையும் ஏற்படுவது சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதா?

(இ) அப்படியாயின், 1958-ம் வருஷ பஞ்சாயத்து சட்டத்தைத் திருத்தி தலைவர் தேர்தலை மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : *(அ)* No written representation has been received by the Government.

(இ) No, Sir.

SRI S. M. ANNAMALAI : *எழுத்துமூலம் புகார்கள் இல்லாவிட்டாலும், இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு நடைபெறும் தேர்தல்களிலே பலவிதத் தவறான முறைகள் கையாளப்படுகின்றன என்பதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்களே சொல்லியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். பஞ்சாயத்து போர்டு தலைவர்களே பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் சேர்மனைத் தேர்ந்தெடுக்கின்ற முறை இருப்பதன் காரணமாக பலவிதத் தவறுகள் ஏற்படுகின்றன. தேர்தலுக்கு 10 அல்லது 15 நாட்களுக்கு முன்பே வோட்டர்களைத் தூக்கிச் சென்று விடுகிறார்கள். வோட்டுப் போடுவதற்கு அவர்கள் பணம் பெறுகிறார்கள். அதற்காக பல ஆயிரக்கணக்கான பணம் செலவாகிறது என்பதையும் நாம் பார்க்கிறோம். ஆகவே, தயவுசெய்து இந்த 1958-ம் வருஷ சட்டத்தைத் திருத்தி இந்த பஞ்சாயத்து போர்டு தலைவர்களால் தேர்ந்தெடுக்கும் முறையை மாற்றி, மக்களாலே தேர்ந்தெடுப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா?*

THE HON. SRI C. SUBRAMANIAM : *இதுவரையிலும் 358 பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்குத் தேர்தல் நடந்திருக்கிறது. 66-ல் போட்டியில்லாமலேயே தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 240 தேர்தல்களில் "ஸ்டிரெயிட் கான்டெஸ்ட்" அடிப்படையில், அதாவது இரு அபேட்சர்களுக்குள்ளே தேர்தல் நடந்திருக்கிறது. சில தேர்தல்களிலே தவறுதல்கள் நடந்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. பலவிதமான*

முறைகள் கையாளப்பட்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய பஞ்சாயத்துத் தலைவர்கள் பொறுப்பு உணர்ச்சியுடன் நியாயமாகவும், கண்ணியமாகவும் நடந்துகொள்ளுவதற்கு முன் வந்தால் ஜனநாயகம் நன்ருக நடைபெறும். பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டசபையாக இருந்தாலும் சரி, மற்றவர்களுக்கு வழிகாட்டியாக நேர்மையாகவும், நாணயமாகவும் நடப்பது மிகவும் அவசியம் என்பதை இந்த நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன.

SRI K. VINAYAKAM : Sir, in view of the complaints of lifting of Presidents away from their constituencies like lifting of cattle, etc., is it not a valid conclusion to be drawn by the Government that it is too early to introduce these democratic measures for which our people are not fit enough to receive unless the national character of the people improves.

THE HON. SRI C. SUBRAMANIAM : Some people advance the same argument even with reference to this Assembly. That does not mean that democracy is not valid. As far as we are concerned, if the villagers are good enough to elect the Members to represent them in the Assembly they are good enough to elect their own representatives in the panchayats. In these things simply because certain irregularities are committed in certain areas, we need not feel despendent that our people are not ready for democratic institutions.

SRI S. M. ANNAMALAI : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன்களிலும் இரண்டு மூன்று கட்சிகள் இருந்து கொண்டிருப்பதால் அங்கு வேலைகள் நடைபெருமல் தடைபடுகின்றனவே, அதைக் குறித்து சர்க்கார் ஏதாவது பரிசிலனை செய்தார்களா? அதற்கு என்ன நடவடிக்கை சர்க்கார் எடுத்துக்கொண்டார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தேர்தலைப் பொறுத்த வரையில் பஞ்சாயத்துக்களில் போட்டி இல்லாமல் தேர்தல் நடைபெற வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. போட்டி இல்லாமல் ஒரு மனதாக தேர்ந்தெடுப்பதுதான் நல்லது. அப்படி போட்டி இருந்து தேர்தல் நடந்த பிறகு, போட்டி மனப்பான்மை இல்லாமல் ஒற்றுமையாக இருந்து பஞ்சாயத்துக்களை நடத்துவதுதான் நல்லது. அப்பொழுதுதான் அது வெற்றிகரமாக நடைபெறும். கட்சி மனப்பான்மை தொடர்ந்து தேர்தல் நடந்த பிறகு கூட ஒற்றுமையாக இல்லாமல் பதவிக்கு வந்தவர்களை நடந்த பிறகு கட்சி மனப்பான்மை இருப்பது நல்லது அல்ல. ஆனால் இப்பொழுது எப்படி இருக்கிறது என்ருல் தேர்தல் நடந்த பிறகுகூட ஒற்றுமையாக இல்லாமல் பதவிக்கு வந்தவர்களை எப்படியாவது துரத்திவிட வேண்டும் என்ற மனப்பான்மையில் வேலை செய்வதாகத்தான் இருக்கிறது. பஞ்சாயத்துக்களில் கட்சி மனப்பான்மை இருந்தால், தலைவர்கள்தான் அதை போக்குவதற்கு வழி காணவேண்டும். அவர்களை தலைவர்கள்தான் திருத்தி அமைக்கவேண்டும் என்பதற்கு வழி காண

வேண்டும். இப்படி கட்சி மனப்பான்மை வளர்ந்துகொண்டே போனால்தான் வேலைகள் தடைபட்டுப் போகிறது. தலைவர்கள் அதற்கு வழிகாணவில்லையானால் பொதுமக்கள்தான் அவர்களுக்கு பாடம் கற்பிக்கவேண்டும் என்று நான் எண்ணுகிறேன்.

SRI S. M. ANNAMALAI : பஞ்சாயத்து தேர்தல்களில் அரசியல் கட்சிகள் ஈடுபடக்கூடாது என்ற முறையை அனுசரிக்க சர்க்கார் முன் வருவார்களா? அதற்கு வேண்டிய வழிவகைகளை சர்க்கார் காண்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : கட்சி மனப்பான்மை இருக்கக்கூடாது என்ற அடிப்படையில்தான் நான் முன்னதாக பதில் சொன்னேன். அதற்குத்தான் கட்சித் தலைவர்கள் தலை யிட்டு இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்றும் சொன்னேன். அவர்கள் அதற்கு வழி தேடாவிட்டால் பொது ஜனங்களே அவர் களுக்கு பாடம் கற்பிக்கவேண்டும் என்றும் சொன்னேன். ஆனால் பெரிய இடங்களில் தேர்தல் நடக்கும்போது அப்படி நடக்க வில்லை. ஏதோ எப்படியாவது ஜெயித்து வந்துவிடவேண்டும் என்ற மனப்பான்மையில் காரியங்கள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. பெரிய இடங்களிலேயே அப்படி நடக்கும்போது சிறிய இடங்களாகிய பஞ்சாயத்து தேர்தல்களில் கேட்பானேன். அதற்கு பொது ஜனங்கள்தான் பாடம் கற்பிக்கவேண்டும். அவர் களால்தான் முடியும். அப்படி ஜெயித்து வந்துவிட்டு, ஜெயித்து விட்டோம் என்றுகூட பெருமைப்படக்கூடிய அளவில் நடை பெற்றுவருகிறது. இது இருக்கவே கூடாது.

SRI T. K. SUBBIAH : சில அரசியல் தலைவர்கள் பணத்தை செலவழித்துவிட்டு வந்து, கேட்டதைக் கொடுத்தோம், விரும்பிய தைப் பெற்றோம், ஜெயித்து விட்டோம் என்று பெருமைப் பட்டுக் கொள்கிறார்களே, ஜனங்களிடத்தில் வந்து சந்தோஷப் படுகிறார்களே, தலைவர்கள் அப்படிப் பேசுவது சரியா, முறையா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தக் கருத்தைத்தான் நான் முன்னமே விரிவாகச் சொன்னேன்.

SRI K. ANBAZHAGAN : உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் ஏராளமான பணத்தைச் செலவுசெய்து வெற்றி பெறுவது என்ற முறையைத் தோற்றுவித்த ஆளும் கட்சியினர் அந்த முறையை மாற்றுவதற்கு ஏதாவது வழி காண்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதை தோற்றுவித்தது ஆளும் கட்சி அல்ல, ஆளும் கட்சி என்று சொல்ல முடியாது. அப்படி பணத்தை செலவு செய்து வெற்றி பெறக்கூடியவர்களை திருத்தினால்தான் நாடு முன்னுக்கு வர முடியும் (ஆரவாரம்).

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that this kind of cantankerous disease of demoralizing the members of the local bodies has crept in even into the major local administration, viz., the Madras City Corporation, which has been evidenced by the recent Mayoral election?

13th December 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : We are dealing with Panchayat Unions. We do not go into the Corporation, the affairs of which have already become a sufficient public scandal.

Fishermen's villages (water-supply)

* 2310 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the steps taken by the Government to provide drinking water to fishermen's villages of Vavathurai Cape, Manakudy and Kovalam in Kanyakumari district; and

(*b*) the reasons for the delay in carrying out the extension of pipe line to fishermen's villages in Cape?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The steps taken are as follows :—

Vavathurai and Cape.—The work of providing water facilities to Cape under the National Water-supply Scheme has been completed, except for pipe connections to 25 public fountains, which work is in progress and will be completed by this year.

Manakudy.—In connection with a proposal for protected water supply to Manakudy, a new well has been sunk at Manavalapuram and the preliminary investigation for the scheme has also been completed. The scheme has not been taken up pending collection of contribution from the public.

Kovalam.—A well was proposed originally for this village. Subsequently the construction of an overhead tank has been proposed. The estimate for the work has also been prepared and the selection of the nominee by the villagers is pending.

(*b*) It has been reported that there has been no delay in carrying out the proposals.

Schools in Valliyur Panchayat

* 2312 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

Why the teachers of aided schools in the Valliyur Panchayat Union Council area have not been paid their salaries and the two quarterly advance grants for midday meals to school children?

THE HON. SRI C. SUBRAMANIAM : A report has been called for from the Director of Public Instruction and is awaited.

SRI V. K. RAMASWAMI MUDALIYAR : Question No. 2311 has not been answered. May I know the reason, Sir?

DEPUTY SPEAKER : The hon. Member, Sri V. K. Ramaswami Mudaliar, came late. Before he came, I announced that the questions relating to the Hon. Minister for Industries would be postponed.

[13th December 1961

SRI T. S. RAMASWAMI : Sir, after the transfer of the primary schools to the Panchayat Unions not only in the Valliyur Panchayat Union Council but in other unions also because of the inefficieny and inexperience of the Commissioner, who is in charge of distributing the salaries and other allowances to the schools, great delay is being felt to the greater disadvantage of the teachers. May I know, Sir, whether the Government will take action to avoid this?

THE HON. SRI C. SUBRAMANIAM : I have also received complaints with regard to the delay in the payment of salaries of primary school teachers in some of the panchayat unions. These delays have been caused due to the transition stage, due to the inexperience of the Commissioner and various other factors also. However, action has been taken to see that such delays do not occur.

Rural Water-supply Schemes (Kanyakumari district)

* 2314 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number and names of rural water-supply schemes carried out in Kanyakumari district during the last two years; and

(*b*) the number in progress?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The Collector of Kanyakumari has been asked to furnish requisite information and his report in the matter is awaited.

SRI T. S. RAMASWAMI : May I know, Sir, what is the present stage of the national rural water supply in Kanyakumari district? That has been there for more than seven years. Nothing tangible has so far been done.

THE HON. SRI C. SUBRAMANIAM : When the hon. Member puts such questions, he must furnish the number and names of the rural water-supply schemes carried on in the Kanyakumari district during the last two years. He cannot expect immediate answers to these questions as information has to be collected and then answered. If any inadequate reply is given immediately, the hon. Member would rise and say such and such a scheme had not been included. So delay in such questions is unavoidable.

Death of prisoners in jails

* 2315. Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள மத்திய சிறைகளில் 1961 செப்டம்பர் மாதம் முதல் இதுவரை எத்தனை பேர்கள் இறந்தார்கள் ?

(இ) அதற்கான காரணமென்ன ?

13th December 1961]

(உ) இறந்தவர்களின் தண்டனை காலம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) to (c) A statement [a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : மேஜையின்மீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் பத்து பேர்கள் இறந்துவிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி சிறை தண்டனை அடைந்து சிறையில் இறந்துபோகிறவர்களுக்கு அவர்கள் சிறையில் அடைப்பதற்கு முன்னல் அவர்களுக்கு வைத்திய பரிசோதனை செய்யப்படுகிறதா? இந்தப் பத்துப் பேர்களில் ஒருவர் டி.பி.-யால் இறந்ததாகச் சொல்லப்படுகிறது. அவருக்கு ஆஸ்பத்திரியில் டி.பி.-க்கு சிகிச்சை அளிக்கப்பட்டதா ? அப்படி இறந்தவர்களில் பலர் இரண்டு, மூன்று வருஷ தண்டனை அடைந்தவர்களாகத்தானே இருக்கிருர்கள். அப்படி இருந்தும் அவர்கள் சிறையில் இறந்ததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிறையில் இருக்கிறவர்கள் சாதாரணமாக நல்ல முறையில் வாழவேண்டும் என்ற அளவில்தான் அவர்கள் எல்லோருக்கும் சிறையில் வைத்திய வசதிகள் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் நல்ல முறையில் வாழ வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்தும்கூட. ஆனல் சில சமயங்களில் சிறைக்கு வரும்போதே உடல் நலம் இல்லாமல் இருந்திருந்தால் அவர்கள் விரைவில் இறந்துபோய்விடுகிருர்கள். டி.பி. வியாதியுடன் சிறைக்கு வந்தாலும் அவர்களுக்கு நல்ல சிகிச்சைத்தான் கொடுக்கப்படுகிறது.

SRI T. S. RAMASWAMI : Sir, there seems to be a good number of cases of coronary thrombosis. May I know the reason for this? There is a lot of connection between jail life and thrombosis.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : They must have been suffering from this disease even before they came to the jails. I may tell the hon. Member that jail life is not responsible for coronary thrombosis.

SRI S. M. ANNAMALAI : சிறைத் தண்டனை அடைந்து உள்ளே செல்வதற்கு முன்னல் பரிசோதனை செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். க்ஷய ரோகத்தினல் ஒரு நபர் இறந்துவிட்டிருக்கிருரே, அதைக் குறித்து பரிசீலனை செய்யப்பட்டதா ? சர்க்கார் விசாரித்தார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிறையில் வாரா வாரம் எடை எடுக்கிருர்கள். கனம் அங்கத்தினருக்கு அந்த அனுபவம் இல்லையோ என்னவோ. ஜெயிலுக்குப் போனவர்களுக்குத் தெரியும், அங்கு வாரா வாரம் எடை எடுப்பது பற்றி. என்ன வியாதியாக இருந்தாலும்—க்ஷய ரோகம் இருந்தாலும்—அதற்குச் சிகிச்சை செய்யப்படுகிறது. க்ஷய ரோகத்தினல் பீடிக்கப்படுகிறவர்கள் வெளியிலே இருப்பவர்களும், இறக்கிருர்கள்.

[a] Printed as Appendix II on pages 727–728 infra.

[13th December 1961

Local cess surcharge

* **2315-A Q.—SRI S. M. ANNAMALAI :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் வருஷத்திய பஞ்சாயத்துச் சட்டப்படி சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எல்லா பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களிலும் Local cess surcharge விதித்துள்ளார்களா ?

(இ) அப்படியாயின், எந்த அளவுக்கு விதித்துள்ளார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Yes. Out of 75 panchayat unions launched during last year, all except Sriperumbudur have levied Local cess surcharge. Regarding Sriperumbudur particulars are not readily available.

(இ) The levy ranges from 10 nP. to 75 nP. per rupee of land revenue and the anticipated annual revenue for all the 74 unions will be Rs. 26,21,939.

SRI S. M. ANNAMALAI : லோகல் செஸ் சர்ச்சார்ஜ் 10 நயா பைசாவிலிருந்து 75 நயா பைசாவரையில் விதிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது. ஆனல், உடனடியாக எடுத்த எடுப்பிலேயே ரூபாய்க்கு முக்கால் ரூபாய் இந்த சர்ச்சார்ஜ் போட்டால் மக்களிடையே பெரும் அதிருப்தி ஏற்படுகிறது. பஞ்சாயத்துச் சட்டத்தில் 25 நயா பைசாவுக்குக் குறையாமல் விதிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி, எடுத்தவுடனே 25 நயா பைசாதான் போடவேண்டும், அடுத்த ஆண்டுகளில் வேண்டுமானல் உயர்த்திக்கொள்ளலாம் என்று சர்க்கார் உத்தரவு பிறப்பிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பஞ்சாயத்து யூனியன்கள் பொறுப்புள்ள சபைகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவை. இந்தப் பொறுப்பை அவர்களுக்கே விட்டுவிட வேண்டும். அந்தப் பகுதியிலே எவ்வளவு காரியங்கள் செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டு, அதற்குத் தகுந்தாற்போல் சர்ச்சார்ஜ் போட முடிவு செய்கிறார்கள். இதைப் போட்டு வீட்டுக்கு அவர்கள் எடுத்துப் போய் விடுவதில்லை. பல திட்டங்கள் அந்தப் பகுதியில் நிறைவேற, இந்த சர்சார்ஜ் போடப்படுகிறது. இதைப் போடும்போது மக்களுடைய பிரதிநிதிகளாக இருப்பவர்கள் மக்களைக் கலந்தாலோசித்துத்தான் பல இடங்களில் செய்கிறார்கள். அம்மாதிரி வரி விதித்துப் பல திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள் என்றால், இது வரவேற்கத் தக்கதே.

Municipal Elementary School, Pudukottai

* **2315-B Q.—SRI V. ARUNACHALA THEVAR :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டையிலுள்ள நகராண்மை ஆரம்பப் பள்ளிக்காகத் தனியாக ஓரிடத்தை அரசினர் ஏற்பாடு செய்துள்ளார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

13th December 1961]

SRI V. ARUNACHALA THEVAR: புதுக்கோட்டையில் இராணி உயர்நிலைப்பள்ளி காம்பவுண்டுக்குள் முனிசிபல் ஸ்கூல் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதனால் இராணி உயர்நிலைப் பள்ளிக்கு இடம் போதாமலிருக்கிறது என்று பல வருஷங்களாக எடுத்துச் சொல்லியும், அந்த முனிசிபல் ஸ்கூல் அகற்றப்படவில்லை. முனிசிபல் ஸ்கூலை அங்கிருந்து அகற்றி இராணி உயர்நிலைப்பள்ளிக்கு இடம் அதிகரிக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் தனிப்பட்டதைப் பற்றி கேள்வி போடுகிறார். அதைப்பற்றி எனக்கு எழுதியிருக்கலாம். மூலக் கேள்வியில் 'நகராண்மை ஆரம்பப் பள்ளிக்குத் தனி இடம் ஏற்பாடு' செய்வதுபற்றி கேட்கப்பட்டிருக்கிறது. கவர்ன்மென்டிடமிருந்து முனிசிபல் பள்ளிக்கு தனி இடம் கொடுக்கப்படவில்லை என்ற வகையில் விடை அளித்தேன்.

Engineering graduates

* 2315-C *Q*.—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the steps taken by the Government for the expansion of Technical education;

(*b*) how many Engineers with B.E. degree the Government intend to produce during the Third plan;

(*c*) the number of colleges the Government propose to open during the Third plan; and

(*d*) how many Engineers are required to meet our need during the Third Plan period?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The attention of the hon. Member is invited to subdivision (*c*) of Chapter XVI on Technical Education at pages 131–135 of the Government Publication—"Third Five Year Plan—Madras State."

(*b*) 5,000.

(*c*) Three.

(*d*) 7,200.

SRI T. T. DANIEL: May I know whether it is the policy of the Government to start at least one Engineering College in each district?

THE HON. SRI C. SUBRAMANIAM: I don't think it is practicable during the Third Plan period.

Secondary schools for girls

* 2315-D *Q*.—SRI N. MARUDACHALAM (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of secondary school for girls, permitted to be opened under private managements during the Second Plan period;

(*b*) the details of assistance granted to these institutions, and

(*c*) the total expenditure incurred for the whole of the Second Plan period?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Seven middle schools and 26 high schools.

(*b*) & (*c*) Particulars are not yet available and will be placed on the table of the House on receipt.

Public Prosecutors (Appointment)

* 2315-E. *Q.*—SRI N. MARUDACHALAM (on behalf of SRI **V. K. KOTHANDARAMAN) :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லாவில் சிவிலுக்கும், கிரிமினலுக்கும் தனித்தனியாக பிராசிக்கூட்டர் போடவேண்டுமென்ற விஷயமாக கனம் நிதி மந்திரி அவர்களுக்கு 1961-ம் வருஷம் அக்டோபர் மாதம் 16-ம் தேதி வி. கே. கோதண்டராமன், எம்.எல்.ஏ., அவர்களால் எழுதப்பட்ட லெட்டர் கிடைத்ததா?

(இ) அப்படியானால், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) **Yes Sir.**

(*b*) It is under consideration.

Polytechnic at Nagercoil

* 2315-F. *Q.*—SRI T. S. RAMASWAMI : **Will the Hon. the** Minister for Finance be pleased to state—

(*a*) the stage at which the acquisition of site and construction of buildings for the Polytechnic at Nagercoil stands;

(*b*) the present arrangements for running the classes;

(*c*) whether the South Travancore Hindu College Association has asked for payment of rent for the building; and

(*d*) if so, the decision of the Government on that?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Land for putting up buildings for the Government Polytechnic, Nagercoil, has already been acquired. Construction of Workshop buildings has been taken up and it is nearing completion. The other buildings will be taken up for construction shortly and completed by the end of the next academic year.

(*b*) The polytechnic is temporarily located in the buildings of the South Travancore Hindu College at Nagercoil, where all theory and drawing classes are conducted. For Workshop practice, the students were taken to the Sankar Institute of Polytechnic, Talaiyuthu, during 1959–60 and 1960–61 and they will be taken to the Tamilnad Polytechnic, Madurai, during 1961–62.

13th December 1961]

(*c*) & (*d*) A nominal rent of Rs. 10 per annum is being paid to the authorities of the South Travancore Hindu College for the buildings now being used for the Polytechnic as per agreement.

SRI T. T. DANIEL : May I know the total estimated cost for the construction of the polytechnic buildings in Nagercoil?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry I do not have the figure here.

SRI T. S. RAMASWAMI : May I know the period for which this agreement will be in force?

THE HON. SRI C. SUBRAMANIAM : Till we construct our own buildings.

* 2315-G *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state the number of posts of Lecturers and Assistant Lecturers kept vacant in the Nagercoil Polytechnic and for how long?

THE HON. SRI C. SUBRAMANIAM : One post of lecturer in Civil Engineering has been vacant from 12th May 1961 and two posts of Assistant Lecturers in Electrical and Mechanical Engineering from 20th July 1960.

SRI T. S. RAMASWAMI : May I know when they will be filled?

THE HON. SRI C. SUBRAMANIAM : As soon as persons are available.

SRI T. T. DANIEL : Is it a fact that the students are not getting proper coaching in this institution because of the want of lecturers and also want of proper equipment?

THE HON. SRI C. SUBRAMANIAM : I agree that particularly with reference to the transition stage where our own buildings have not been put up and the equipment have not been available and there are vacancies in the teaching posts, there are bound to be deficiencies in the training programme. But, was hope to make it up after the buildings are put up and we equip the polytechnics fully.

* 2315-H *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether equipments for all the courses have been kept ready in the Nagercoil Polytechnic;

(*b*) if not, in which of the courses equipments are inadequate;

(*c*) the present arrangements for giving practical training to the students : and

(*d*) whether sanctioned library books have been purchased up to date; if not, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM ; (*a*) No, Sir. Due to foreign exchange difficulties all the equipments could not be purchased.

(b) Electrical Engineering and Mechanical Engineering.

(c) Till last year the students were given practical training at the Sankar Institute of Polytechnic, Talaiyuthu. This year the training will be provided at Tamilnad Polytechnic, Madurai.

(d) Books which are considered necessary have been purchased by the Principal at a cost of Rs. 6,000.

Road formation (Udayarpalayam taluk)

* **2315-I** *Q.*—**Sri T. K. SUBBIAH :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலுக்காவில் கீழ்கவட்டாங்குறிச்சியிலிருந்து கரைவெட்டிவெங்கனூல், சன்னூர் வழியாக பழநாநத்தம் கிராமம் வரை ரோடு போட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தும் இதுவரை போடாத காரணமென்ன ?

(இ) எப்போது போடப்படும் ?

(உ) இதன் மொத்த மதிப்பீடு தொகை எவ்வளவு ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (அ) As more important and urgent works had to be taken up for execution, this work could not be taken up for execution during the Second Plan period.

(இ) The work of forming the road will have to be taken up for execution by the Thirumanur Panchayat Union under the village works programme.

(உ) Rs. 17,000.

Engineering Colleges

* **2315-J** *Q.*—**Sri S. M. ANNAMALAI :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை என்ஜினியரிங் கல்லூரிகள் எங்கெங்கே ஏற்படுத்தப்படும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : During the Third Five-Year Plan period, it is proposed to start three engineering colleges in this State. One will be a centrally sponsored Regional Engineering College to be located at Tiruchirappalli. The other two engineering colleges are likely to be located at Salem and Tirunelveli.

Sri S. M. ANNAMALAI : இதற்காகும் செலவில் ஏதாவது ஒரு பகுதியை மத்திய அரசாங்கம் தருகிறுர்களா ? அப்படியானுல் எவ்வளவு ?

The Hon. Sri C. SUBRAMANIAM : . ரீஜினல் இன்ஜினீரிங் காலேஜுக்கு மத்திய அரசாங்கம் பணம் போடுகிறுர்கள். இன்னெரு இன்ஜினீரிங் காலேஜ் தனிப்பட்டவர்கள் சர்க்காருடைய உதவியைக்கொண்டு செய்யவேண்டியது. அதற்குப்

13th December 1961]

பகுதிச் செலவை தனிப்பட்டவர்கள் போட்டுக்கொள்ள வேண்டும். பாக்கியில் ஒரு பகுதியை மத்திய சர்க்காரும் இன்னொரு பகுதியை இந்தச் சர்க்காரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். சேலத்தில் ஆரம்பிக்கப்படப்போகிற மூன்ருவது இன்ஜினீரிங் காலேஜுக்கு நம்முடைய சர்க்காரே பணம் செலவிடப் போகிருர்கள்.

Sri K. VINAYAKAM : Were not the reasonable claims of the North Arcot district considered for locating this College either at Vellore or any other place in the North Arcot district? If so, may I know the extraneous reasons for dropping it?

The Hon. Sri C. SUBRAMANIAM : North Arcot district is near enough to Madras where sufficient facilities are available. After all, we cannot start it in each and every district. We have to make a selection and in that process, we have selected Tirunelveli, Salem and Tiruchirappalli.

Eleventh Standard in schools

* 2315-K *Q.*—Sri N. MARUDACHALAM (on behalf of **Sri V. K. KOTHANDARAMAN) :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் உயர்தர பாடசாலேகளில் பி.யு.சி.-யையும் சேர்த்து 11-வது வகுப்பு ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

(இ) எந்த ஆண்டுமுதல்?

(உ) எத்தனை உயர்தரப் பாடசாலேகளில் ஆரம்பிக்கப்படும்?

The Hon. Sri C. SUBRAMANIAM : (அ) *to* () The whole question is under consideration.

Summer resort (Muthukuzhivial)

* 2315-L *Q.*—Sri T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal for developing Muthukuzhivial in Kanyakumari district as a summer resort; and

(*b*) if so, the steps taken in this regard?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The matter is under the consideration of the Government.

Sri T. T. DANIEL : In view of the fact that experts have already expressed their views that Muthukulivayal can be converted into perhaps one of the best hill stations in the country, will the Government take it into consideration and start the work as early as possible and convert it into a hill station?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The Chief Conservator of Forests has already submitted proposals for converting this place into a beauty spot with a view to increasing the tourist traffic and I have already stated that these proposals are under consideration by the Government.

[13th December 1961

S.S.L.C. Examination (1961)

*2315-M Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of students who passed the S.S.L.C. Examination in April 1961;

(*b*) the number of students who applied for admission to Pre-University Courses; and

(*c*) the number who got admission?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The number of candidates declared eligible for admission to the Pre-University Courses of studies, in the S.S.L.C. Examinations held in March 1961 is 36,511.

(*b*) The number of candidates who applied for admission to the Pre-University Courses in 52 Colleges from which particulars have been received is 37,299.

(*c*) The number of students who have been admitted to the Pre-University Course in the 52 Colleges is 19,230.

SRI T. S. RAMASWAMI : May I know whether the attention of the Government was drawn to the fact that there is inadequacy of seats and that thousands of applicants could not get admission during this academic year?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not think that at the present stage, it would be possible to provide seats for all those who make applications. After all, we have to make selections and merit also will have to be taken into consideration to find out whether the students will be good enough for the University Course.

SRI K. VINAYAKAM : In the matter of admission to the University Classes, only the best students are selected. So, would the Government reconsider the question of enhancement of the standard of marks to be awarded to the S.S.L.C. students lest the students may go disappointed because they scored a lesser number of marks?

THE HON. SRI C. SUBRAMANIAM : I have not been able to understand the question.

DEPUTY SPEAKER : Let the hon. Member please repeat the question.

SRI K. VINAYAKAM : Sir, in the present set-up students who score higher marks are given a preferential treatment in the matter of admission. In that event, the students who are declared eligible for the Pre-University Course but still incapable of getting seats, go disappointed because they scored lesser number of marks. So, to avoid this kind of contingency, would the Government give instructions to the S.S.L.C. Board to be more strict in the matter

13th December 1961]

of awarding marks and only then sufficient number of students would pass the examination and get seats for the University course?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not know what purpose will be served by the suggestion made by the hon. Member. The question papers are corrected by the proper authorities and they give marks on a certain basis. On that basis, students who score a limited number of marks are declared eligible for entrance into the Pre-University classes. It does not mean that all those who become eligible, should be automatically admitted to the University classes. After all, we should have only persons to meet our own requirements and we should not create unemployment amongst the higher educated sections of the people. Therefore we have to limit the number and we cannot afford to have an unlimited number of students in the colleges just now. Already we have 57 colleges where Pre-University course is provided.

SRI T. T. DANIEL : Now many girls pass the S.S.L.C. Examination at a very tender age and so, will the Government think of the desirability of starting Pre-University classes for girls in all the districts?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, for everybody there is an age-limit. If that age-limit is not reached, they will not be admitted into the University classes.

SRI T. S. RAMASWAMI : In view of the scarcity of seats in the colleges, may I know what steps the Government will take to provide admission to students to be selected on the basis of merit and not on the basis of recommendations and other unfair practices?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, it should be left to the good sence of the managements themselves. As far as the Government colleges are concerned, we have got Committees and they look into the whole matter and they select on the basis of merit.

SRI A. MARIAPPAN : பெரும்பாலான மாணவர்களுக்கு கல்லூரியில் இடம் கிடைக்காத காரணத்தினால் சேலம் ஜில்லாவில் வட பகுதியில் ஒரு கல்லூரியைத் திறக்க சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்கார் முன் வராது. யாராவது ஆரம்பித்தால் அதற்கு உதவி செய்ய சர்க்கார் பரிசீலனை செய்யும்.

SRI M. K. SOMASUNDARAM : மாணவர்கள் அதிகமாகச் சேரவேண்டியிருப்பதனால் இருக்கக்கூடிய கல்லூரிகளிலாவது புதிய வகுப்புகளை துவக்க உதவி செய்யப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போதே சில கல்லூரிகளில் புதிய வகுப்புகளை ஆரம்பித்திருக்கிறார்கள். எந்த அளவுக்கு இதை விரிவாக்க வேண்டுமோ அந்த அளவுக்கு விரிவாக்கப்பட்டிருக்கிறது.

[13th December 1961

Sri K. VINAYAKAM: In view of the fact that a large number of students are going disappointed for want of seats in Arts Colleges, would the Government think of the possibility of starting some technical institutes where some technical training could be afforded to them so that they could be engaged in our nation-building activities instead of turning them into disappointed students who may easily take to politics and thus upset the political equilibrium in the country?

The Hon. Sri C. SUBRAMANIAM: As a matter of fact, after passing the S.S.L.C. Examinations, students go in for polytechnic courses and more than that thousands of girls and boys are taken in for teacher's training. There are other avocations where they could be diverted. If we admit all the students who pass the S.S.L.C. Examination into the University classes only, then the recruitment to the clerical field, to the teacher's cadre and to other things would suffer. Therefore it is not as if there are not other fields where these people would not be able to get proper employment or proper training.

Sri V. S. MANIKKASUNDARAM: Can the Government give an idea as to the number of students who have actually been disappointed for want of seats in the colleges for the Pre-University classes?

The Hon. Sri C. SUBRAMANIAM: I gave the number with reference to 52 colleges and with regard to five colleges, the number is not available. Here also I must point out that some students might have applied to many colleges and therefore the number of applicants by itself might be misleading some times.

Sri V. S. MANIKKASUNDARAM: I want to know the number of students who have not got admission into the colleges for want of vacancies. I presume the number would be very small having regard to the fact that in the Coimbatore College, only very small number of students were not admitted?

The Hon. Sri C. SUBRAMANIAM: Sir, that is what I have stated. I have stated that out of about 37,000 applicants, about 19,000 students have been admitted. It is misleading to suppose that 37,000 students applied for admission because many students would have applied for more than one college and in some case it might be three or four colleges. Therefore, if we take into account the actual number of students who applied, I think the information given by the hon. Member is correct and only a small percentage of students could have gone without getting admission.

Sri T. T. DANIEL: May I know exactly what aid the Government will be giving to private agencies if they come forward to start Pre-University courses for Girls?

The Hon. Sri C. SUBRAMANIAM: I do not think that this question arises out of the main question. Also I do not carry all these things in my memory.

13th December 1961]

SRI T. S. RAMASWAMI : Sir, Question No. 2298 has not been answered.

DEPUTY SPEAKER : The Hon. Minister for Local Administration is not here.

SRI T. S. RAMASWAMI : Sir, that question would have been included in to-day's list of questions only after consulting the Hon. Minister concerned.

DEPUTY SPEAKER : The Hon. Minister was expected to come here and answer this question but she could not come.

SRI T. S. RAMASWAMI : This is gong too much. In other Assemblies and in the Parliament some other Minister or Deputy Minister would answer.

DEPUTY SPEAKER : It will be answered soon after the Hon. Minister comes here.

SRI T. S. RAMASWAMI : Sir, this is showing scant courtesy to the House.

DEPUTY SPEAKER : Questions are over.

[NOTE.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by a member.]

II—CALLING ATTENTION TO THE NEED FOR SUPPLY OF RAILWAY WAGONS TO SALT MERCHANTS.

SRI N. S. RAMALINGAM : Mr. Deputy Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Home to a matter of urgent public importance, viz., the heavy loss incurred by salt merchants due to non-supply of railway wagons and the need for arranging regular supply of wagons for early clearance of about 80,000 tons of salt from Agasthiyampalli Station Yard which would otherwise get damaged.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : I wish to make the following observations :—

A telegram followed by a letter has been received from Sri B. Kuppuswami Pillai, Salt Merchant, Vedaranyam, requesting early supply of wagons for immediate clearance of salt from Agasthyampalli Station Yard. Both the letter and the telegram have been forwarded by Government in the Food and Agriculture Department to the General Manager, Southern Railway, for providing necessary wagon facilities to the salt merchants. 9-30 p.m.

The District Operating Superintendent (Goods) has been contacted over the phone and the position set out in the notice has been explained to him and he has been asked to make immediate arrangements for wagon supply for early clearance of salt from Agasthyampalli Station Yard.

III.—PRESENTATION OF REPORTS.

(1) REPORT OF THE COMMITTEE ON ESTIMATES.

SRI C. R. RAMASWAMY : Sir, I present the Fifteenth Report (Second Assembly) of the Estimates Committee on Education Department.

(2) PRELIMINARY REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES.

SRI V. S. MANIKKASUNDARAM : Sir, I present the Preliminary Report of the Committee of Privileges in what is known as the "Obstruction Case".

IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1962-63—*cont.*

DEPUTY SPEAKER : Leader of parties will speak to-day. Sri S. Pakkirisami Pillai and Sri M. P. Subramaniam require 20 minutes each and Sri Anbazhagan and Sri V. K. Ramaswami Mudaliyar 30 minutes each. I think the Hon. Leader of the House requires one hour for his reply. Since we have some more time left, if some hon. Members want to speak now, I shall allow them. Afterwards Sri S. Pakkirisami Pillai may speak.

SRI T. L. SASIVARNA THEVAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது கனம் நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தைக் குறித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நமது தமிழகத்தில் ஒரு சில காரியங்களை சாதிக்கவேண்டுமென்றால், தாஜா செய்து சில காரியங்களைச் செய்துகொள்வது வழக்கம். அதற்குத்தான் காக்காய் பிடிப்பது என்று ஒரு பழமொழி கூறுவார்கள். அதேபோன்று, நமது கனம் நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த பட்ஜெட் சமீபத்தில் வரக்கூடிய தேர்தலில் தமிழக வாக்காளர்களை காக்காய் பிடிப்பதற்கென்றே தயார் செய்து இத்திட்டத்தை வெளியிட்டிருக்கிறார்கள் என்று நான் உறுதியாக கூற முடியும். இந்த இடைக்கால திட்டத்தில் பல நன்மைகளை உபாத்தியாயர்களுக்கு, ஏழை மாணவர்களுக்குக் கொடுத்து, வயோதிக வாக்காளர்களை தங்கள் பக்கத்தில் வைத்துக்கொள்ள அவர்களுக்கு பென்ஷன் திட்டம் போன்ற திட்டங்களை அவசர அவசரமாக இத்திட்டத்திலே சேர்த்து அதை வெளியிட்டிருக்கிறார்கள். மேற்கொண்டும் ஒரு காரியத்தை செய்திருக்கிறார்கள். வருங்காலத்தில் அவர்கள் போட இருக்கக்கூடிய வரிகளை வேண்டுமென்றே நாலுமாத காலத்திற்கு மக்களுக்கு தெரிவிக்காமல் இருந்தால் அவர்களின் வோட்டுக்கள் மொத்தமாக கிடைக்கும் என்ற நம்பிக்கையில், அப்படி போடாது விட்டிருக்கிறார்கள் என்று தான் நான் கருதுகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற புது வரிகள் கோடிக்கணக்கில் போட வேண்டியிருப்பதை நாங்கள் அறிவோம். அப்படியிருக்க

13th December 1961] [Sri T. L. Sasivarna Thevar]

வேண்டுமென்றே நமது கனம் நிதியமைச்சர் அவர்கள் அதை மறைத்திருப்பதைப் பார்த்தால், அப்படி மறைக்காவிடில் ஒருக் கால் தங்கள் கட்சிக்கு பலம் இல்லாது போய்விடுமோ என்று நினைத்துத்தான் மறைத்திருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன். அப்படிச் செய்வது நல்லதல்ல. நாலு மாதங்கள் கழிந்து போடக்கூடிய வரியை இப்பொழுதே ஏன் மக்களிடம் சொல்லக் கூடாது? நல்ல முறையில் நியாயமாக போடக்கூடிய வரிகளை எதிர்க்கட்சியினராகிய நாங்கள் ஒரு தோரணைக்காக எதிர்த் தாலும் நியாயமாக இருப்பதை ஒத்துக்கொள்வோம். ஆகவே ஒரு காரியத்தை உத்தேசித்து வாக்காளர்களை ஏமாற்றி மீண்டும் தங்கள் கட்சிக்கு பலம் தேடச் செய்யும் மறைமுகமான ஒரு சூழ்ச்சித்தான் இந்த நிதிநிலை அறிக்கையிலிருந்து வெளிப்படு கிறது என்று நான் கூற முடியும். கனம் நிதியமைச்சர் அவர்கள் திறம்பட காரியங்களை செய்து வந்தார்கள் என்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. நாங்களும் அதை மனப்பூர்வமாக பாராட்டுகிறோம். நேற்று பேசிய ஸ்ரீ. சின்னதுரை அவர்கள் கடன் நிலையைக் குறிப்பிட்டுப் பேசினார்கள். திரு. சின்னதுரை அவர்கள் என்று சுதந்திரக் கட்சியில் சேர்ந்தார்கள் என்று தமாஷாக அதை மறைத்தார்கள். சுதந்திராக் கட்சியோ அல்லது மற்றக் கட்சி யினரோ நாட்டின் நலனை உத்தேசித்து வாங்கும் கடனை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆனால் அப்படி கடன் வாங்கிச் செய்யும் காரியங்கள் லாபகரமான காரியங்களாகயில்லை. அதில் வர வர நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தால் வாங்கிய கடனை திருப்பக் கொடுக்கும் பொறுப்பு இப்பொழுதுள்ள ஆட்சியாளர் களுக்கு அல்ல வருங்கால சந்ததியினருக்கு ஏற்படும். கடன் வாங்கட்டும். ஆனால் கடன் வாங்கி நஷ்டம் ஏற்படுவதைத் தவிர லாபமே இல்லாதிருந்தால் அதைப்பற்றி கேட்பதற்கு மக்களுக்கும் மக்களால் அனுப்பப்பட்டிருக்கும் எங்களைப் போன்ற எதிர்க்கட்சி யினருக்கும் அதிகாரம் உண்டு என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தமிழகம் சம்பந்தப்பட்டவரை, இன்று பெரும்பாலும் மக்களை பாதித்துள்ள ஒரு காரியம், விலைவாசி ஏற்றம். இரண்டு, மூன்று தினங்களாக பார்த்து வருகிறேன், இங்கு எதிர்க்கட்சியினரானாலும் சரி அல்லது ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களானாலும் சரி, எல்லோரும் அதை மறந்து விட்டார் கள் என நினைக்கிறேன். ஆனால் வாக்காளர்கள் மறந்துவிட வில்லை என்று கருதுகிறேன். சமீபத்தில் இரண்டொரு மாதங் களுக்கு முன்பு விலைவாசி ஏற்றம் பயங்கரமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது என்று அரசாங்கத்தினிடமும், இந்த சட்ட சபைக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மதுரை நகரில் படி அரிசி ரூபாய் 1 3/8 என்று விற்கிறது. உணவுப் பொருள்களின் விலை கண்டபடி ஏறியிருக்கிறது. உளுந்து, தமிழ கத்தில் எல்லோருமே உபயோகிக்கும் ஒரு பொருள், தோசை, இட்டிலி போன்றவைகளுக்கு உபயோகப்படுத்தப்படும் ஒரு பொருள். இன்று அந்த உளுந்து ஒரு ரூபாய் கொடுத்தால் ½ படி தான் கிடைக்கிறது காங்கிரஸ் ஆட்சியில். 1961-ம் ஆண்டில்தான் நிலை இப்படி இருக்கிறதே தவிர இதற்கு முன் இப்படி என்றுமே

[Sri T. L. Sasivarna Thevar] [13th December 1961

இருந்ததில்லை என்பதை நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன். எல்லா அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் மேலும் மேலும் ஏறிக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. இந்த விலையேற்றத்தைக் குறைப்பது பற்றி இதில் ஒன்றும் கூறப்படவில்லை. அடுத்தபடியாக, தமிழகம் சம்பந்தப்பட்ட வரை பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் அநேகமாக நிறைவேற்றப்பட்டு விட்டன என்ற செய்தி சர்க்கார் சார்பில் கூறப்படுகிறது. பிரளயமே வந்தாலும் மழை பெய்யாத பிராந்தியங்களும் தமிழகத்தில் சில இருக்கின்றன. தென் ஜில்லாக்களில் இராமநாதபுரம் மாவட்டம் திருநெல்வேலி மாவட்டம் போன்றவைகளில் உள்ள சில பிராந்தியங்களில் எப்பொழுதுமே மழை பெய்வதில்லை. அதில் சங்கரன்கோவில் தாலுகாவை குறிப்பாக குறிப்பிட விரும்புகிறேன். திருமங்கலம், உசிலம்பட்டி போன்ற பிராந்தியங்களில் சென்ற ஐந்தாண்டுகளாக மழையே பெய்யாததால் புஞ்சை தான்யங்கள் பரிபூர்ணமாக கெட்டுவிட்டது. முன்பு அங்குள்ள மக்கள் தேவிகுளம், பீர்மேடு போன்றயிடங்களுக்கு போய் பிழைக்க வழியிருந்தது. இப்பொழுது அதற்கும் வழியில்லாது போய்விட்டது. கேரளம் பிரிந்து அப்பகுதிகள் அங்கு இருப்பதால் தமிழக மக்களை அங்கு எடுத்துக் கொள்ள காலதாமதம் செய்து கேரள மக்களைத்தான் அங்கு கொண்டு போய் அமர்த்தி விடுகிறார்கள். ஆகவே நம் மக்களின் வாழ்விற்கு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மிக அவசியம் என்று எடுத்துக் கூற விரும்புகிறேன். இது குறித்து நான் ஐந்தாண்டுகளாக குறிப்பிட்டு வந்திருக்கிறேன். மதுரை ஜில்லாவில் பெரும் பகுதி, இராமநாதபுரம் ஜில்லாவில் பெரும் பகுதி நன்மை அடையக்கூடிய ஒரே திட்டம் மேல் பெரியாறு திட்டம். அத்திட்டம் சம்பந்தமாக பத்திரிகைகளில் சமீபத்தில் பல செய்திகளை பார்த்து வருகிறோம். இதை நிறைவேற்ற ஆட்சியாளர் தயக்கம் தெரிவிக்கிறார்கள். அதை வற்புறுத்தி நல்ல முறையில் கேரள அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி அத்திட்டத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவில்லை என்ற குறைபாடு கிழக்கு இராமநாதபுரம் பகுதி சம்பந்தபட்ட வரை இருக்கிறது. மேல் பெரியாறு திட்டம் சம்பந்தப்பட்ட வரை கேரள அரசாங்கம் அவர்களே முழு பாத்தியதை, உரிமை கொண்டாட வழியில்லை. பெரியாறு தண்ணீர் இண்டர் ஸ்டேட் ரிவர். நமது மாநிலத்தில் உற்பத்தியாகும் நதிகளின் தண்ணீரும் அந்த ஆற்றில் சென்று கலக்கிறது. பரம்பிக்குளம் சம்பந்தப்பட்டில் இப்பிரச்னை எந்தவிதத்திலாவது அதற்கு ஒரு ஊனம் ஏற்படுத்துமோ என்ற கவலை இருந்தால் அந்த உரிமையை விட்டுக் கொடுக்காமல் இந்த அப்பர் பெரியாறு திட்டத்தையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். இந்த அப்பர் பெரியாறு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்காவிட்டால் அங்குள்ள மக்கள் நிச்சயமாக வாழ முடியாது. பின்னர், கிருதமால் நதித்திட்டம் பற்றி ஐந்தாண்டுகளாக சொல்லி வருகிறேன். வைகை அணை கட்டிய பிறகு அங்குள்ள மக்களுக்கு தண்ணீர் கிடைத்து வருகிறது. இந்த கிருதமால் நதித்திட்டம் பற்றி ஒரு மாகாநாடு கூட அங்கு

13th December 1961] [Sri T. L. Sasivarna Thevar]

நடத்தினர்கள் காங்கிரஸ்காரர்கள். அந்த மகாநாட்டிற்கு நமது முதல் அமைச்சர் அவர்களும், மராமத்து இலாகா அமைச்சர் ஸ்ரீ கக்கன் அவர்களும் வந்திருந்தார்கள். அங்கே வந்திருந்த தொகுதி மக்களுக்கு வாக்குறுதி கொடுத்தார்கள். வாக்குறுதி கொடுத்துவிட்டு அந்த வாக்குறுதிக்கேற்ப நாளது வரையில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது வருந்தத்தக்கது. ஆகையால் இதை சீக்கிரம் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று நான் ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தேர்தல் இப்போது நெருங்கிக்கொண்டிருக்கிறது. தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு ஆட்சியில் இருப்பவர்கள் பதவியிலிருந்து விலகி இருந்து தேர்தலில் ஈடுபட்டால், மற்ற கட்சிகளைப் போல இருந்து ஈடுபட்டால் நலமாக இருக்கும் என்று சொல்லப்பட்டது. ஆனால் அதை அமைச்சர் அவை கேட்க மறுத்து விட்டது. போகட்டும். தேர்தல் சம்பந்தமாக சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். டிஸம்பர் 15-ம் தேதி முதல் ஓரளவு கட்டுப்பாடாக இருக்கப்போவதாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த அளவுக்காவது வந்ததைப் பற்றி ரொம்பவும் சந்தோஷம். ஆனால் இதற்கு முன்னால் நடந்த காரியம் மிகவும் பயங்கரமானதாக இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் அவர்களுடைய தொகுதியில் சற்றேறக்குறைய 25-26 நாட்கள், மூன்று முறைகளில் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். அந்தத் தொகுதி மக்களை சந்திப்பதைப் பற்றி யாரும் ஆட்சேபிக்கவில்லை. நடந்து கொண்ட விதத்தைப் பார்த்தால் வாக்காளர்களை பயமுறுத்தும் முறையையும், ஒரு சிலருக்கு நன்மை செய்வது என்ற முறையையும் உபயோகப்படுத்தி மக்களை ஏமாற்றி ஜெயிக்க வேண்டும் என்ற முறையில் காரியங்களைச் செய்தார். அவர் அந்தத் தொகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்கின்றபோது ஏறக்குறைய 40-45 ஜீப் கார்கள் பின்னால் சென்றன. நூற்றுக்கு மேற்பட்ட கலெக்டர் முதல் ஜில்லா போலீஸ் அதிகாரி வரையில் ஒவ்வொரு துறையைச் சேர்ந்த அதிகாரியும் அவர் பின்னால் சென்றார்கள். போலீஸ் பாதுகாப்பு மட்டும் 500-600 போலீஸார்களைக் கொண்டு அந்தப் பிராந்தியம் பூராவிலும் நிறுத்தப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மின்சாரம் வேண்டுமென்று கேட்டார்கள் கிராமத்தார்கள். அது உடனுக்குடன் சப்ளை செய்யப்பட்டது 15-16 கிராமங்களுக்கு. மின்சாரம் வேண்டுமென்றால் அனுசரிக்க வேண்டிய முறை அனுசரிக்கப்பட்டதா என்றால் இல்லை. பஞ்சாயத்தோ மற்றவர்களோ மின்சாரம் வேண்டுமென்று மனு ஒன்றும் போடவில்லை. இருந்தாலும் உடனடியாக உத்திரவு போடப்பட்டு உடனுக்குடன் லைன்கள் போடப்பட்டன. போஸ்ட்கள் ஊன்றப்பட்டன. இந்த மாதிரியே எல்லா . காரியங்களும் செய்யப்பட்டன. நான் சந்தித்த போது சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகள் சிலர் என்னிடம் கேட்டார்கள். மின்சாரம் கொடுத்து விட்டோம், மாதம் ஒன்றுக்கு மேல் ஆகின்றது, மின்சாரக் கட்டண பில்லை யாருக்கு அனுப்புவது என்று தெரியவில்லை என்று கேட்டார்கள்.

[Sri T. L. Sasivarna Thevar] [13th December 1961

பஞ்சாயத்து ஸ்தாபனம் கேட்டிருந்தால் அவர்களுக்கு பில்லை அனுப்பிவிடலாம். அப்படிக்கில்லாமல் அமைச்சர் சொன்னதற்காக திடீரென்று போட்டதால்தான் இந்த சர்ச்சை வந்திருக்கிறது. அதேமாதிரி புதிய குளங்கள் 15-16 வெட்ட உத்திரவு இடப்பட்டது. தங்கள் அதிகாரத்தில் உள்ளதை துஷ்பிரயோகம் செய்து இந்த மாதிரி காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏதோ அங்குள்ள மக்கள்மீது கருணை கூர்ந்து செய்தார்கள் என்று சொல்லமுடியாது. இன்றைய தினம் பார்த்தால் பல்லாயிரக் கணக்கான மனுக்கள் செக்ரெட்டேரியட்டில் காத்துக்கொண்டிருக்கின்றன. இப்படி ஒரு தொகுதி சம்பந்தப்பட்ட மட்டில் உடனுக்குடன் மின்சாரம், கண்மாய்கள், பள்ளிகள், ஆஸ்பத்திரிகள் முதலியவைகளை ஏற்படுத்திக் கொடுத்தால் தங்களுக்குள்ள அரசியல் அதிகாரத்தைக் கொண்டு மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்குச் செய்யப்படும் துஷ்பிரயோகம் என்று சொல்லிக் கொள்ள நான் இஷ்டப்படுகிறேன்.

அடுத்தபடியாக சமீபத்திலே ஒரு அறிக்கை சபையில் வைக்கப்பட்டது—உத்தியோகஸ்தர்கள் தேர்தல் சம்பந்தப்பட்ட மட்டில் நடைமுறையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதுபற்றி. அதைக் கண்டு நான் மனப்பூர்வமாக சந்தோஷப்படுகிறேன். ஆனால் இது நடைமுறைக்கு வருமா? இதைப் பற்றி பின்னால் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் இது நிச்சயமாக நடைமுறைக்கு வராது என்றுதான் சொல்லுகிறேன். எங்கள் மாவட்டத்தில் இருக்கிற தேவக்கோட்டை ஆர்.டீ.ஓ. ஒரு மண்டல காங்கிரஸ் தலைவர் மாதிரி செயல் படுகிறாரே தவிர ஒரு உத்தியோகஸ்தர் மாதிரி செயல் படவில்லை. அவரை அந்த இடத்தை விட்டு மாற்றவேண்டுமென்று பல மனுக்கள் கொடுக்கப்பட்டன. ஒரு நாள் மாற்றவும் செய்யப்பட்டார். ஆனால் 24 மணி நேரத்திற்குள் திரும்பிப் போடப்பட்டு விட்டார். அவர் அந்த இடத்திற்கு வந்து மூன்று வருஷங்களுக்கு மேல் ஆகின்றன. அந்த இடத்தில் அவர் இல்லாவிட்டால் அந்த இடம் என்ன கெட்டுவிடுமா? அவரை மாற்றினால் என்ன? இதையெல்லாம் பார்க்கும்போது இந்த அறிக்கை ஒரு கேலிக் கூத்தாகத் தான் முடியும். இந்த நிலையில் பொது மக்களுக்கு பாரபட்சம் இழைக்கப்படுகிறது உத்தியோகஸ்தர்களால் என்று நான் சொல்லிக்கொள்ள இஷ்டப்படுகிறேன். தேர்தல் வரப்போகிறது. தேர்தல் நல்ல முறையில் நடக்கட்டும். நீங்கள் ஜெயித்தால் நீங்கள் பதவிக்கு வாருங்கள். மற்றவர்கள் ஜெயித்தால் மற்றவர்கள் வரட்டும். எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் நல்ல முறையில் நடந்து கொள்வோம் என்று உறுதியை அமைச்சரவைக்குக் கொடுக்கின்றேன். தேர்தல் காலத்தில் ஆபாசத் தாக்குதல் கூடாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சொன்ன மறு நாள் ஒரு அமைச்சர் பேசுகிறார், "ராஜாஜி அவர்களுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது" என்று. பைத்தியம் பிடித்து விட்டது என்பது அழகான வார்த்தையா என்று நான்

13th December 1961] [Sri T. L. Sasivarna Thevar]

கேட்கிறேன். மந்திரி அவர்களுக்கு நட்டு புறண்டு விட்டது என்று சொன்னால் என்ன? இந்த மாதிரி கேவலமான வார்த்தைகள் பேசப்படுகின்றன. (கனம் ஸ்ரீ. ஸி. சுப்பிரமணியம்: பேப்பரில் வந்ததை வைத்துக்கொண்டு பேசாதீர்கள்). பத்திரிகையில் வந்ததை வைத்துக்கொண்டு பேசவேண்டாம் என்று கனம் அமைச்சர் சொல்லுகிறார். நான் கூட்டத்திற்குப் போகவில்லை. பத்திரிகையில் வந்ததைப் படித்துவிட்டுத்தான் சொல்லுகிறேன். ஆகையால் கூடுமான வரையில் தேர்தல் காலத்தில் தரக் குறைவான முறையில் வார்த்தைகளை உபயோகப்படுத்தாமல் நல்ல முறையில் நடந்துகொள்ளவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது வரக்கூடிய தேர்தலில் இன்னும் சில கஷ்டங்கள் இருக்கப் போகின்றன. வோட்டர் ஜாபிதா பற்றி சொல்லவேண்டியிருக்கிறது. சில தொகுதியில் இல்லாத பல்லாயிரக்கணக்கான மக்கள் வோட்டர் ஜாபிதாவில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் தேர்தலுக்கு இரண்டு மாதங்கள்தான் இருக்கின்றன. இன்னும் சில தொகுதிகளில் வோட்டர் ஜாபிதா பரிபூர்ணமாக பரிசீலனை செய்யப்படாமல் இருக்கின்றது. இப்படி தவறுகள் வாக்காளர் ஜாபிதாவில் இருந்தால் அரசாங்கம் தலையிட்டு நிவர்த்தி செய்யவேண்டும். இதனால் இரண்டு பேர்களுக்கும் கஷ்டம் உண்டு. இதை உடனடியாக நிவர்த்திக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள இஷ்டப் படுகிறேன்.

இன்னும் வரும் தேர்தல் காலத்தில் பிரசாரம் சம்பந்தமாக ஆங்காங்குள்ள ஜில்லா போலீஸ் அதிகாரிகள் சர்வ கட்சிகளையும் கூட்டி சில கட்டுப்பாடுகளைச் செய்கிறார்கள். கட்டுப்பாடு வேண்டியதுதான்—இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் கட்டுப்பாடு என்ற முறையில் பிரசாரத்தைத் தடுக்கும் காரியங்கள் செய்யப்படுகின்றன. அந்த மாதிரி காரியங்களைச் செய்யக் கூடாது என்று உத்திரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் முடிந்த வரையில் நல்ல முறையில் பிரசாரம் செய்ய வாய்ப்புகள் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மாநிலத்திலே சென்னை நகருக்கு அடுத்தபடியாக முக்கிய நகரம் மதுரை. இன்று இந்த நகரம் நல்ல தன்மையில் வளர்ச்சி பெற்று வருகிறது. இந்த நகரத்தைப் பொறுத்த வரையில் சில காரியங்கள் செய்யவேண்டுமென்று நகர சபைத் தலைவர் சர்க்காருக்கு பல மனுக்கள் அனுப்பியிருக்கிறார். நாளது வரையில் அவைகளுக்கு பதிலோ அல்லது காரியங்களைச் செய்யும் அறிகுறியோ இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை மாவட்டத்தில் சற்றேறக்குறைய 5-6 ஆர்ட்ஸ் காலேஜுகள் இருக்கின்றன. மதுரை மாவட்டம் இன்றைக்கு பெரியாறு ப்ராஜெக்ட் மூலமாக விவசாயத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டுள்ள மாவட்டம் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்பு

கிறேன். அந்த வகையில் மதுரை மாவட்டத்தில் ஒரு அக்ரிகல்ச்சுரல் காலேஜ் ஏற்படுத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் நம் மாநிலத்தில் இன்னொரு சர்வ கலாசாலை வைக்க ஏற்பாடு இருக்கிறது. அந்த சர்வகலாசாலை மதுரைக்கு வரவேண்டுமென்று ஏகோபித்த அபிப்பிராயம் இருக்கிறது. அதன் நிலைமை என்ன ? அது வருமா, வராதா என்ற சந்தேகம் இருந்து கொண்டிருக்கிறது. மீண்டும் வற்புறுத்தி இந்த சர்வகலாசாலையை ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை நகரம் சம்பந்தப்பட்ட மட்டில் இன்றைய தினம் அது நல்ல முறையில் விஸ்தரித்துக்கொண்டிருக்கிறது. அந்த நகரத்தைச் சுற்றி பல்லாயிரக்கணக்கான வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் நல்ல முறையில் விஸ்தரிக்க நிலங்களை வாங்கிக்கொடுத்து அந்த நகரம் மேலும் மேலும் அபிவிருத்தி அடைய ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI S. PAKKIRISAMI PILLAI: கனம் தலைவர் அவர்களே, இந்த இடைக்கால வரவு செலவு அறிக்கையை சமர்ப்பித்து அதன் மூலமாக 1962-63-ம் ஆண்டுக்கு எந்தெந்தத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன, இவைகளில் புதிய அம்சங்கள் எத்தனை என்பதைப் பற்றி விளக்கமாக இந்த அறிக்கையிலேயும் வெள்ளை அறிக்கையிலேயும் காணப்படுகிறது. இதிலே சாதாரணமாக மத்திய சர்க்கார் கூட பார்லிமெண்ட்டில் இந்த மாதிரி இடைக்கால பட்ஜெட்டைச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றிருக்கிறார்கள். அதே மாதிரி இங்கேயும் அங்கீகாரம் பெறும்படியான நிலையில் இது இருப்பதில் ஆட்சேபணை கிடையாது. ஆனால் 100 அம்சத் திட்டங்கள் இதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது, அமுல் நடத்தப் போகிறோம் என்று சொல்லும்படியான நிலையில் இந்தத் திட்டத்தைக் காணும்போது உண்மையிலேயே எல்லோரும் வரவேற்கும்படியான நிலையில் இருக்கிறோம். அதை அமுலுக்குக் கொண்டு செல்லும்படியான நிலையிலே இந்த ஒரு புதிய திட்டத்தை காண்பதானது உண்மையிலேயே எல்லோரும் வரவேற்கும்படியான நிலையிலேதான் இருக்கிறது. ஆனால் இது அடுத்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே செய்யவேண்டிய விஷயம். இந்த 100 அம்ச திட்டத்தை 1962-63 காலத்திலேயே ஆரம்பித்து முடித்து விடுவார்கள் என்று சொல்வதற்கில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே ஆரம்பிக்கப்போகும் ஒரு அம்ச திட்டமாகும். அப்படித்தான் நாம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நினைக்கிறேன். இந்த விஷயங்களை எல்லாம் முக்கியமாக எடுத்துக் கொண்டு பார்க்கும்போது, இதிலே முக்கியமான ஒரு பகுதி சயனிக் பள்ளிக்கூடம் ஆகும். இது நமது ராஜ்யத்திலேயே எல்லோரும் வரவேற்கும்படியான ஒரு விஷயம். இரண்டாவது, குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்கும் ஒரு முன்னோடித் திட்டம்.

13th December 1961] [Sri S. Pakkirisami Pillai]

மூன்ருவது, சென்னை நகரத்திலே உள்ள குழந்தைகளுக்காக தனி நவீன ஆஸ்பத்திரி. நான்காவது, கல்லூரி ஆசிரியர்களுக்கு ஒரு புதியத் திட்டம். அவர்களுடைய க்ஷேமநல திட்டத்திற்கு உண்டான ஒரு மானியம் வழங்கும்படியான ஒரு நன்மை. அதற்குப் பிறகு, வயது முதிர்ந்த அனுதைகளுக்கு ஒரு பென்ஷன் திட்டம். இதிலே முக்கியமாக, சென்னை நகரத்திலே குழந்தைகளுக்கென தனி ஆஸ்பத்திரி வேண்டுமென்பது நீண்ட நாட்களாக குறையாக இருந்து கொண்டிருந்தது. எல்லாப் படித்த மக்களும் இருக்கும்படியான இந்த நகரத்திலே, தனியாக குழந்தைகளை கவனிக்க ஒரு ஆஸ்பத்திரி இல்லையே, அவர்களுக்கு நவீன முறையிலே சிகிச்சை பெறுவதற்கு நல்ல வசதிகள் இல்லையே என்று புகார் சொல்லிக்கொண்டு வந்ததை நாம் பத்திரிகைகளிலே பார்த்திருக்கிறோம். எத்தனையோ பெற்ருேர்கள் தகுந்த பராமரிப்பு இல்லாததால் தங்கள் குழந்தைகள் இறந்து போய் விட்டதாக சொல்லக்கூடிய புகார்களையெல்லாம் நாம் பத்திரிகைகளிலே பார்த்திருக்கிறோம். ஆகவே, ஒரு தனி ஆஸ்பத்திரி குழந்தைகளுக்காக இருக்கவேண்டியது அவசியமென்று ஏற்பட்ட நேரத்திலே, அரசாங்கத்தார் இதைத் துவக்க முன்வந்தது குறித்து நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் ஒரு ஆஸ்பத்திரி என்று சொன்னுல், சென்னை நகரம் பெரியதாக இருப்பதால் ஒரு கோடியிலிருந்து இன்னெரு கோடிக்கு வரும்படியான நிலையிலே ரொம்ப குழந்தைகள் கஷ்டப்படும்படியான நிலைமை ஏற்படும். ஆகவே, சர்வ சாதாரணமாக சிகிச்சைகளைப் பெறுவதற்கு ஆங்காங்கே "சில்ரன் கிளினிக்" ஏற்படுத்தினுல் மிகவும் நலமாக இருக்குமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, இந்த வயது வந்த அனுதைகளைப் பற்றி நாம் சொல்லும்போது, சாதாரணமாக அனுதை என்று சொன்னுலோ அல்லது பிச்சைக்காரர்கள் என்று சொன்னுலோ ஒரு வித்தியாசமும் ஏற்படாத நிலையிலேதான் இப்போது போலீசார் கண்காணித்துக்கொண்டு வருகிருர்கள். சாதாரணமாக, அனுதைகள் கொஞ்சம் அழுக்குத் துணியைக் கட்டிக் கொண்டு போனுல், அவர்களை உடனே பிச்சைக்காரர்கள் என்று எடுத்துக்கொண்டு போய் பிச்சைக்காரர்கள் விடுதியிலே போலீசார் அனுமதித்து விடுகிருர்கள். அப்புறம் மீட்பதற்கு அவர்களுடைய உறவினரே அல்லது வேறு யாராவது வராவிட்டால், அவர்களுக்கு மிகவும் ஒரு கஷ்டமான நிலை ஏற்பட்டு, அந்த விடுதியிலேயே சேர்ந்து விடுகிருர்கள். ஆனுல் இம்மாதிரி விடுதிகளிலே போனவர்கள் சற்று வயது தளர்ந்தவர்களாக இருந்தார்களானுல், அவர்களுக்கு என்ன நிலைமை ஏற்படுகிறது என்பதை நாம் கொஞ்சம் யோசனை செய்து பார்க்க வேண்டும். இந்த வயது தளர்ந்த அனுதைகள் பிச்சைக்காரர்கள் விடுதிகளிலே அதாவது "கேர் ஹோம்"-மிலே சேர்க்கப்பட்டு, உடனே திரும்பி வருவதே கிடையாது. அப்படி திரும்பி வரவில்லை என்று சொன்னுல், அவர்கள் அங்கேயே இருந்து மண்ணிலேயே மறைந்து விடுகிருர்கள். இந்த மாதிரியான விடுதிகளிலே பராமரிப்பு சரியாக இல்லாத காரணத்தால்,

[Sri S. Pakkirisami Pillai] [13th December 1961

அனாதைகள் என்று சொல்லப்படுபவர்கள் பிச்சைக்காரர்கள் விடுதியிலே சேர்க்கப்பட்டு, மண்ணிலே மறைந்துவிடக்கூடிய ஒரு நிலைமையைத்தான் அந்த விடுதிகள் உண்டாக்கும்படியான நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, இந்த மாதிரியான விடுதிகளிலே எத்தனை பேர்கள் சேர்க்கப்பட்டார்கள்? அதிலே எத்தனை பேர்கள் திரும்பினார்கள்? எத்தனை பேர்கள் விடுதலை அடைந்தார்கள்? எத்தனை பேர்கள் சுகமாக இருக்கிறார்கள் என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்பதற்கு ஒருவித அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்டும் கிடையாது. இதற்கு முன்னாலே சமர்ப்பிக்கப்பட்டதும் இல்லை. இதைப்பற்றி விளக்குமாறு, எத்தனை பேர்கள் மாணம் அடைந்தார்கள்? எத்தனை பேர்கள் விடுதலை அடைந்தார்கள்? என்று ஒரு கேள்வியை ஒரு வருஷத்திற்கு முன்னாலே கேட்டேன். அதற்கு பதிலே காணோம். ஆகவே, இந்த ஒரு நிலைமையிலேதான் பிச்சைக்காரர்கள் விடுதிகள் சாதாரணமாக நல்லமுறையிலே வாழ்ந்து கெட்டவர்கள் பயப்படும்படியான ஒரு நிலைமையிலே இன்றைக்கு இருந்துகொண்டு வருகிறது. ஆகவே, அவர்களுக்கு ஒரு விடுதி என்று சொல்லும்போது, அது சரியாக பராமரிக்கப்படாவிட்டால், அதிலே ஒருவித பிரயோஜனமும் இல்லை. அல்லது நாஜி, ஹிட்லர் செய்த மாதிரி ஏழைகளாக இருப்பவர்களுக்கு வேறு ஏதாவது ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், அப்படி இருப்பதாகவும் தெரியவில்லை. எனக்குத் தெரியும், சேத்துப்பட்டில் "லிட்டில் சிஸ்டர்ஸ் ஹோம்" என்று ஒன்றிருக்கிறது. அந்த ஹோமை 90 வயதடைந்த 5 பேர்கள் பராமரித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையைப் பார்க்கும்போது, வேறு வழியிலே சிகிச்சை கொடுக்க முடியாத நிலைமையைத்தான் பார்க்கிறோம். ஆகவே, இப்படி சரியான முறையிலே வசதி அளிக்காத முறையிலே ஏழைகளை கஷ்டப்படுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இந்த ஒரு நிலைமையிலே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உண்டாக்கும்போது, இந்த 100 அம்சத் திட்டங்கள் என்று சொன்னால் போதாது. இன்னும் அநேக அம்சங்கள் இருந்தாக வேண்டும். இந்த ஐந்து வருஷத்தில் நிறைய இருந்தால்தான், நம்முடைய தமிழ்நாடு நல்ல முறையிலே முன்னேறும். ஆனால் இந்த அம்சங்களை நிறைவேற்றுவதற்கு உண்டான வருமானம் என்ன? கடன் வாங்குவார்களா? அல்லது வரி போட்டு, அதை ஈடுபடுத்துவார்களா என்று பார்த்தால், வரி போடும் வழி ஒன்றிருக்கிறதே தவிர, வேறு வழி அரசாங்கத்தின் முன்னால் இல்லையென்பதை எல்லோரும் அறிவார்கள். ஏற்கனவேயே, மத்திய தர வகுப்பினர் இப்போதுள்ள வரியையே சுமக்க முடியாமல் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் வரியைப் போட்டால் கொடுக்க முடியாது. அந்த நிலையிலேதான் 100 ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறக்கூடிய தொழிலாளர்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போதே அவர்கள் 100 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகிறார்கள் என்ற காரணத்திற்காக, தங்களுடைய குழந்தைகளுக்கு ஆஸ்பத்திரி

களிலே சிகிச்சை பெற முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை நான் பலமுறை எடுத்துக் காட்டியிருக்கிறேன். ஆகவே, மேலும் வரி போட்டு, மக்கள் மத்தியிலே வசூல் பண்ணக் கூடாத நிலைமையிலேதான் நாம் இப்போது இருக்கிறோம். அப்படியானால் யாரிடத்திலே வரி போடலாம். பெரிய பணக்காரர்கள், முதலாளிகள் இடத்திலே, பெரிய தொழிற்சாலை அதிபர்களிடத்திலே வரி போட்டு வாங்குவதானால் வசதியாக இருக்கும். ஆனால் அப்படி அவர்களிடத்திலே வரி போட்டு வாங்குவதற்குத் தான் பயப்படுகிறார்கள். வாங்குவதற்கு ஏன் பயப்படுகிறார்கள் என்று சொன்னால், நமக்குத் தெரியும். இப்போது டி.ஏ. சைக்கிள் கம்பெனியில் இருந்துகூட, 50,000 ரூபாய் எலெக்ஷன் பண்டுக்குக் கொடுத்தார்கள். இன்னும் இதைப் போல் பல முதலாளிகள் தங்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு பணத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால், இம்மாதிரி கொடுக்கும்படியானவர்களிடம் இன்னும் ஏன் வரியை வசூல் செய்யக்கூடாது என்று நான் கேட்கிறேன்? அந்த நிலையிலே வரி வசூல் பண்ணவேண்டுமே தவிர, ஏழைகளிடமிருந்தோ அல்லது மத்திய தர வகுப்பினரிடமிருந்தோ வசூல் பண்ணுவது ரொம்ப கஷ்டமான நிலைமையை உண்டாக்கும் என்று நான் எச்சரிக்கை செய்கிறேன். இது தவிர, இப்பொழுது அம்ச திட்டங்களை பார்க்கும்பொழுது, தொழிலாளர்களுக்கு நலன் ஏற்படும்படியான நிலையிலே இந்த அரசாங்கம் ஏதாவது செய்திருக்கிறதா என்று பார்த்தால், தொழிலாளர்களுடைய நலனுக்காக ஒரு அம்சத்தையும் காணோம். ஏதோ வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது என்று சொல்லலாம். எல்லோருக்கும் வீடுகள் கட்டிக் கொடுப்பது மாதிரி தொழிலாளர்களுக்கும் கட்டிக் கொடுக்கலாம். அவ்வளவுதான். தொழிலாளர்களுடைய உண்மையான நலனைக் கோரும் பல திட்டங்கள் மத்திய சர்க்காரிடமிருந்து வரவேண்டும் என்று சென்னை அரசாங்கம் சொல்லுவார்களேயானால், அது ஏமாற்றும் வழியாகத்தான் இருக்கும். தொழிலாளர்கள் நம்முடைய நாட்டின் நிலையை உயர்த்திக்கொண்டே இருக்கிறார்கள். கஷ்டப்பட்டு வேலை செய்யும்படியான தொழிலாளர்களுக்கு ராஜ்ய சர்க்கார் தங்களுடைய திட்டங்களைப் போட்டு பல நன்மைகளைச் செய்து வைக்கும்படியான நிலையில் இருக்கிறார்களா என்று பார்த்தால், இந்த அம்ச திட்டங்களில் அவர்களுக்கு ஒரு நலனும் இதுவரையிலும் செய்யவில்லை. அவர்களுடைய நலன்களையெல்லாம் முதலாளிகள் கையிலே ஒப்படைத்துவிட்டார்கள். முதலாளிகள் ஒரு திட்டம் போட்டு, 'கோட் ஆப் டிஸிபிளின்', 'ப்ரோடக்டிவிடி', சிக்கன சீரமைப்பு போன்ற காரணங்களை காண்பித்து, தொழிலாளர்களை வாட்டி வதைத்து, வேலையை வாங்கிக்கொண்டு, எலும்பும் தோலுமாக ஆக்கி, வயது வந்தவுடன் வெளியே அனுப்பி, அவர்களை பிச்சைக்காரர்கள் விடுதியில் சேர்க்கும்படியான நிலையில்தான் தமிழ்நாடு இருந்துகொண்டிருக்கிறது. அதோடுகூட, இப்பொழுது இருக்கும்படியான முதலாளிகள் சங்கத்தார் எந்தத் தொழிலாளியையும் 58 வயதிற்கு மேலாக

10-00 a.m.

[Sri S. Pakkirisami Pillai] [13th December 1961

வைத்துக்கொள்ளக்கூடாது, வயது கட்டுமானம் இருக்க வேண்டும், அதற்கு மேலே வயதானவர்களை வேலையிலே வைத்துக் கொள்ளக்கூடாது என்று தீர்மானம் செய்து, அதை அமுலுக்குக் கொண்டு வரும்படியான நிலையிலே அநேக முதலாளிகள் இருந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அப்படியிருக்குமானால், இந்த வயது முதிர்ந்த தொழிலாளிகள் வேலையை விட்டு வெளியே வந்த பிற்பாடு, அவர்கள் என்ன செய்வார்கள், எங்கே போய் வேலை கேட்பார்கள்? எந்தத் தொழிலாளியும், சாதாரணமாக ரூ. 100, 120 சம்பளம் வாங்கக்கூடியவர்கள் பணத்தை சேர்த்து வைக்கும் படியான நிலையில் இல்லை. அவர்களுக்கு கடன் தொல்லை அதிகமாக ஆகி, கடைசியில் வேலையை விட்டு வரும்பொழுது கிடைக்கும் ப்ராவிடெண்டு பண்டு, கிராஜுவிடி தொகையை கடன்காரர்கள் பிடுங்கிக்கொண்டு போகும்படியான நிலையிலேதான் இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நிலையிலேதான் வயது தளர்ந்த பிற்பாடு வேலையை விட்டு வெளியே வருகிறார்கள் தொழிலாளிகள். அவர்களுக்கு சாதகமாக இருக்கும்படியான தொழிற் சட்டங்களை இயற்றி, அல்லது அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை கொடுக்கும் படியான திட்டங்களை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்களா என்றால், ஒன்றும் கிடையாது.

சென்னை நகரத்தைச் சுற்றி வெவ்வேறு தொழிற்சாலைகள் வருகின்றன, அதில் தொழிலாளர்கள் அமர்த்தப்படுவார்கள் என்று சொல்லலாம். அப்படி அமர்த்தப்படும்பொழுது குறைந்த கூலி கொடுத்துத்தான் அமர்த்தப்படுகிறார்கள். குறைந்த கூலி கொடுக்கக்கூடாது. குறைந்த அளவுக்கு எவ்வளவு குறிக்கோள் நிர்ணயித்திருக்கிறார்களோ அந்த அளவுக்கு தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்கும்படியான நிலையில் இருந்தால்தான், அந்த அளவுக்கு கூலி கொடுத்து தொழிலாளிகளை அமர்த்தினால்தான் தொழிற்சாலைகளை நிறுவ அனுமதிக்கப்படும் என்று சர்க்கார் சொல்லக் கூடிய நிலையில் இல்லை. அதே சமயத்தில் அரசாங்கமும்கூட பங்குக்கொண்டு அந்தத் தொழிற்சாலைகளை நிறுவ ஏற்பாடு செய்கிறார்கள். அதனால் தொழிலாளிகள் முழுக்க முழுக்க முதலாளிகள் பிடியில் அகப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். சர்க்கார் முதலாளிகளாக மாறி தொழிலாளிகளுக்கு விரோத மான நிலையிலே இருந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். இம்மாதிரியான நிலை இருப்பதால், தொழிலாளர்களுடைய வாழ்வு வளம் பெரும்படியான நிலைமை இப்பொழுது இல்லை இந்த அரசாங்கத்தின் மூலம் என்பதை நாம் பார்க்கிறோம்.

மேலும் நமது சர்க்கார் சிப்பந்திகளுக்கு உரிமை கொடுத்திருக்கிறார்கள் தங்களுக்கென்று ஒரு சங்கத்தை ஸ்தாபித்துக்கொண்டு உண்மையான குறைகளைப் பற்றிக் கேட்கலாம் என்று. என்.ஜி.ஓ.-க்கள் காக்காயாக கத்துகிறார்கள். தங்களுக்கு பல வழிகளில் குறைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 'பே கமிஷனால்' தீட்டப்பட்ட சில சிபார்சுகளினாலே அவர்கள் மிகவும் கேவலமான நிலையிலே ஆக்கப்பட்டிருக்கிறார்கள், முன்பிருந்ததைவிட மிகவும் கேவலமான நிலைமை

13th December 1961] [Sri S. Pakkirisami Pillai]

இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது, மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கும், ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் உள்ள சம்பள விகிதங்களில் வித்தியாசங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இதைத் தவிர்ப்பதற்கு என்ன வழி என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான தீர்மானங்கள் வந்தால்கூட, அரசாங்க அதிகாரிகள் அதைத் தள்ளிவைத்துவிட்டு, பதில்கூட போடாமல் இருக்கும் படியான நிலையைப் பற்றி நாம் கேள்விப்படுகிறோம். ஆகவே, முழுக்க, முழுக்க இந்த அரசாங்கம் முதலாளித்துவ நிலையிலே இருந்துகொண்டு, தொழிலாளர்களிடம் அசக்தியை காண்பிக்கும் படியான நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது.

சாதாரணமாக, சென்னை நகரத்தில் தண்ணீர் பஞ்சம் ரொம்ப. காலையிலிருந்து, சாயந்திரம் வரையில் தண்ணீர் கிடையாது. ராத்திரியிலே குழாயில் தண்ணீர் வருகிறது. காலையிலே 6 மணிக்கு தண்ணீர் நின்று போய் விடுகிறது. எங்கள் பகுதியிலே அப்படித் தான். பம்பு வைத்து அடித்தால்தான் தண்ணீர் வருகிறது. பெரிய பணக்காரர்கள், நல்ல வசதி உள்ளவர்கள்தான் பம்பு வைத்துக் கொள்ள முடிகிறது. ஏழைகள் தெருக் குழாயை தேடிக்கொண்டு போகும்படியான நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. மத்தியதர வகுப்பினரும் கஷ்டப்படவேண்டிய நிலையில்தான் இருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைப் பற்றி கேள்விகள் கேட்கப் பட்டு, அதற்கான பதில்களும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு முடிவான தீர்வு காணுவதற்கு எந்த முயற்சியும் இது வரையில் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

இன்னொரு விஷயம். சென்னை நகரத்திலே கரெண்டு சப்ளை அபரிமிதமாக இருந்தாலும், அதை உபயோகப்படுத்தும்படியான நிலையில் பலா இல்லை. காரணம், ரேட் அதிகமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். கரெண்டு உபயோகப்படுத்தவேண்டும் என்று சொன்னால், ஏழைகள் யாரும், நடுத்தர வர்க்கத்தினர்கூட உபயோகப்படுத்தக்கூடிய முறையில் எந்தவிதமான திட்டமும் இது வரையிலே சென்னை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சாதாரணமாக சொல்லுவார்கள். தவளையைப் பற்றி நாம் எல்லோருக்கும் தெரியும். அது குளிர்ந்த ரத்த ஓட்டமுள்ள ஜந்து. அதைத் தண்ணீரிலே போட்டு தண்ணீரை கொதிக்க வைத்தால், 100 டிகிரி வரையிலே சும்மா இருக்கும். தண்ணீர் கொதிக்க ஆரம்பித்த உடனேதான் அது குதிக்க ஆரம்பிக்கும். அம்மாதிரி நிலையிலே ஏழைகளை தக்க பராமரிப்பு இல்லாத நிலையில் அரசாங்கம் வைத்துக் கொண்டிருந்தாலும், அதை ஏழைகள் சமாளித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், ஒரு கட்டம் வரும். இதெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, விவசாயத் தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய கிளர்ச்சி, தவிர்க்க முடியாத கிளர்ச்சி பண்ணும்படியான நிலைமை வரும். அதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். தொழிலாளிகளுடைய நிலைமையையும் விவசாயிகளுடைய நிலைமையை

[Sri S. Pakkirisami Pillai] [13th December 1961

யும் சீர்தூக்கிப் பார்த்து, அதில் சிந்தனையை செலுத்தி, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை முன்னமேயே எடுத்தாலொழிய, அந்தக் கிளர்ச்சியைத் தவிர்க்க முடியாது.

சமீபத்திலே நண்பர் ஒருவர் கேள்வி கேட்டிருந்தார், நம்முடைய நாட்டிலே எத்தனை கொலைகள் நடந்தன என்று. அதனுடைய விவரத்தை கேட்டபொழுது 1959-60-ல் 744 கொலைகள், 1960-61-ல் 722 கொலைகள் நடந்தன என்று சொல்லப்பட்டது. 1959-60-ல் நடந்த 744 கொலைகளில் 19 பட்டினிக்காக நடந்த கொலைகள். அதுமாதிரி 1960-61-ல் நடந்த 722 கொலைகளில் 20 கொலைகள் பட்டினியின் காரணமாக நடந்தவை என்று கேள்வித் தாளின் விடை மூலமாக நாம் அறிகிறோம். இம்மாதிரியான நிலை நம்முடைய நாட்டில் இன்னும் இருக்கத்தான் செய்கிறது. ஒருவனுக்கு உணவு இல்லை என்றால், அதற்காக கொலையா நடப்பது? இந்தமாதிரியான நிலைமையை தவிர்ப்பதற்கு இன்னும் எத்தனை ஐந்தாண்டு திட்டங்கள் நடத்தவேண்டும்? ஏன் சீக்கிரம் செய்யக் கூடாது என்பதுதான் எல்லோரும் கேட்கும்படியான கேள்வியாக இருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் இருந்தாலும், பொதுவாக நம் அரசாங்கம், முக்கியமாக நமது நிதி அமைச்சர் அவர்களுடைய தலைமையின்கீழ் நல்ல முறையாக இங்கே அசெம்பிளி நடவடிக்கைகளில், அசெம்பிளி அங்கத்தினர்கள் எல்லோருக்கும் பொதுவான உயர்ந்த லட்சியத்தின்கீழ், பாதுகாப்புக் கொடுத்து, எல்லோரும் பூரண சுதந்தரத்துடன் நடந்துக் கொள்ளும் நிலையை ஏற்படுத்தி இருந்தார்கள்; யாரும் எந்தக் கஷ்டமும் பட்டது கிடையாது. எல்லோருக்கும் பூரண சுதந்தரம் கொடுத்திருந்தார்கள். அதற்காக கனம் நிதி அமைச்சரவர்களைப் பாராட்டிக்கொண்டு, என் வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRIMATHI SAVITHRI SHANMUGHAM: கனம் சபைத் தலைவர் அவர்களே, நம் கனம் நிதி அமைச்சரவர்கள் 1962-63-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை நம் முன் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையைப் பாராட்டிக்கொண்டு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இப்பொழுது நமது நிதி அமைச்சரவர்கள் கடந்த 10 ஆண்டுகளாக நம் தமிழ் நாட்டிலே அமைச்சர் பதவியை ஏற்று, நல்ல முறையிலே மக்களுக்கு பணியாற்றி வந்திருக்கிறார்கள். அதிலும் முக்கியமாக, கோவை ஜில்லாவைச் சேர்ந்தவர் அவர்; அந்த முறையிலே என்னைப் போன்ற கோவை ஜில்லாவைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் பெருமைப்பட்டாலும் கூட, நாங்கள் ஒரு பங்கு அதிகமாகப் பெருமைப் படுகிறோம், பாராட்டுகிறோம். அவர்களுடைய காலத்தில், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நல்ல முறையிலே வகுத்து, அந்தத் திட்டங்களாலே, மக்களுக்கு என்னென்ன தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியுமோ அந்த முறையில் அதற்குத் தக்கபடி நிதிகளை ஒதுக்கி அவர்கள் மக்களுக்குச் சேவை செய்து வந்திருக்கிறார்கள்.

(Sri N. K. Palanisami in the Chair.)

13th December 1961] [Srimathi Savithri Shanmugham]

இப்பொழுது மூன்ருவது திட்டமும் வகுத்து இன்னும் மக்களுக்கு செய்யவேண்டிய சேவைகள் என்ன என்னவோ, அவைகளுக்குத் தகுந்தவாறு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிருர்கள். அதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிருேம். இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும், குறிப்பாக நம்முடைய தமிழ் நாட்டிலே, மற்ற ராஜ்யங்களைக் காட்டிலும் அதிகமான முன்னேற்றத்தை நாம் கண்டிருக்கிருேம். அதைப் பற்றி, பலர், மற்ற ராஜ்யங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல், வெளிநாட்டவர்களும்கூட நம் முன்னேற்றத்தைக் கண்டு பாராட்டிச் சென்றிருக்கிருர்கள். அந்தப் பாராட்டு அமைச்சர்களுக்கு மட்டுமன்றி, நமக்கும் உண்டு. அது போலவே, தமிழ் நாட்டிலே பிறந்த ஒவ்வொருவருக்கும் அந்தப் பாராட்டு இருக்கின்றது. இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலே முக்கியமாக விவசாயம், கல்வி, தொழில் வளம் போன்ற எல்லாத் துறைகளிலும் நல்ல முன்னேற்றத்தைக் கண்டு இருக்கிருேம். அது மட்டுமல்ல. நாம் செய்யக்கூடிய ஒவ்வொரு காரியத்திலும், ஒவ்வொரு துறையிலும் மற்ற ராஜ்யங்கள் பின் பற்றும் அளவில், நம் அமைச்சர்கள் வழிகாட்டியாக இருந்து வந்திருக்கிருர்கள். கோவை ஜில்லாவை எடுத்துக் கொண்டால், அது 10 ஆண்டுக்கு முன்பு இருந்ததைவிட இன்றைக்கு நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிருேம். ஆனலும் இன்னும் மக்களுக்கு குறைகள் இருக்கத்தான் செய்கிறது. அதையெல்லாம் வைத்துக் கொண்டு, சபையிலே பல அங்கத்தினர்கள் பாராட்டியும் பேசுகிருர்கள்; சிலர் குற்றம் குறைகளையே எடுத்துச் சொல்லுகிருர்கள். குற்றங் குறைகளை எடுத்துச் சொல்லவேண்டியது ஏதோ தங்கள் கடமை என்றுதான் சொல்கிருர்கள், அதுவும் எதிர்க் கட்சிக்காரர்கள், என்று நான் மனப்பூர்வமாக நினைக்கிறேன். மதிப்பிற்குரிய ஒரு அங்கத்தினர், இது கடன் பட்ட அரசாங்கம் என்று சொன்னுர்கள், இந்தக் கடன் ஆகப்பட்டது நம்மையல்ல, வருங்கால சந்ததியை பாதிக்கும் என்று சொன்னுர்கள். நான் சொல்கிறேன், வாங்கிய கடனை நல்ல முறையிலே மக்களுக்குப் பயன்படுத்தி இருந்தால், கண்டிப்பாக வருங்கால சந்ததிகள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு. அதை எந்த முறையிலே திருப்பிக் கொடுக்க முடியும் என்று சிந்திப்பார்கள், தூஷிக்க மாட்டார்கள் என்றுதான் நினைக்கிறேன். அந்த முறையில் நாம் வாங்கிய பணத்தை துஷ்பிரயோகம் செய்யாமல் மக்களின் அன்றாடத் தேவைகளைச் சுலபத்திலே பூர்த்தி செய்யவே செலவழித்திருக்கிருேம் என்பதையும் உணர்வார்கள்.

இப்பொழுது கனம் நிதி அமைச்சரவர்கள், வரப்போகும் தேர்தலிலே, பார்லிமெண்ட் தொகுதியில் நின்று மத்திய அரசுக்குச் செல்லப் போகிருர்கள். பார்லிமெண்டுக்கு கண்டிப்பாக அவர்கள் வெற்றிபெற்றுப் போவார்கள் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கிறது. இப்பொழுது அவர்களுடைய திறமை நம் தமிழ் நாட்டுக்கு மட்டும் பயன் பட்டுவருகிறது, இனி மத்திய சர்க்காருக்கும் சென்று அங்கும் அமைச்சர் பதவியில் இருந்து

[Srimathi Savithri Shanmugham] [13th December 1961

தமிழ் நாட்டில் போல, இந்தியா முழுதுக்கும் அவர்கள் அறிவும் ஆற்றலும் கிடைக்கும்; அவர்கள் சேவையால் தமிழ் நாட்டு மக்கள் மட்டும் திருப்தி அடைந்தது மட்டுமல்லாமல், நாட்டில் எல்லோருக்கும் அவர்கள் சேவையால் வாழ்க்கைத் தரத்தில் உயர்வு காணமுடியும். அந்த முறையிலே அவர்களைப் பாராட்டிக் கொண்டு, அவர்களுக்கு திட காத்திரமும், நோயற்ற வாழ்வும் ஆண்டவன் அருளவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

சமீபத்திலே, நம் எல்லோருக்கும் தெரியும், பஞ்சாயத்து மாநாடு நடந்தது. அந்த மாநாட்டில் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் கலந்துகொண்டிருக்கிறார்கள். அதிலே கிராமப் பகுதிகளிலே இருந்து பெண்களும் பங்கு கொண்டார்கள். மாநாடு ஆரம்பிக்கும் போது எந்த எந்த ஜில்லாவிலிருந்து பெண்கள் வருவார்களோ, வரமாட்டார்களோ என்று அச்சப்பட்டோம். ஆனால், நேரில் அவர்களைப் போய் அழைத்த பிறகு, வீட்டைவிட்டு வெளியே வராதவர்கள்கூட, ஐநூறு (500) பேர்கள் கலந்து கொண்டார்கள்.

இன்னும் இப்பொழுது ஆங்காங்கே, ஒவ்வொரு பஞ்சாயத்திலும், மாதர் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும் என்றும், யூனியன்களில் கண்டிப்பாக பெண் அங்கத்தினர்கள் இருக்கவேண்டும் என்றும் செய்யப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக 3 பெண் அங்கத்தினர்களை "கோ-ஆப்ட்" செய்ய வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. அந்த சட்டத்தின் காரணமாக, பெண்களும் பஞ்சாயத்து யூனியன்களில் அங்கம் வகிக்க வழிவகை இருக்கிறது. மாதர் சங்கங்கள் ஏற்படுவதன் மூலமாக பெண்களுக்கு சிறு சிறு கைத் தொழில்களில் பயிர்ச்சி ஏற்படுகிறது. பால்வாடிகள் நடத்த வேண்டும் என்றும் திட்டம் ஏற்கனவே இருக்கிறது.

நிதி நிலை அறிக்கையில், அமைச்சர் 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பள்ளிகள் ஏற்படுத்தி, அவர்களுடைய தாய்மார்கள் வேலைக்கு போகும்போது, பாதுகாப்பு கொடுப்பதோடு, அதே சமயத்தில் அவர்களுக்கு பள்ளிக்குப் போகும் ஆர்வமும் ஏற்படுகிறது. இப்பொழுது நகரங்களை எடுத்துக்கொண்டால், பல இடங்களில் வசதி உள்ளவர்கள், நர்ஸரி ஸ்கூல்களில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்க முடிகிறது. அந்தப் பள்ளிகளில், வசதி உள்ளவர்கள்தான் சம்பளமும் கட்டிப் பயன் பெறுகிறார்கள். ஆனால், இந்த திட்டத்தின்கீழ், நகரப் பகுதி மட்டுமல்லாமல், கிராமத்தில் உள்ளவர்களுக்கும் இப்பேற்பட்ட வசதி ஏற்படுகிறது.

அறிக்கையில் வயதானவர்களுக்கு உதவி அளிக்கும் திட்டம் மிக்கப் போற்றத்தக்கது.

பொதுவாக குழந்தைகள், பெண்கள் நலனுக்காக ஒதுக்கியிருக்கும் தொகை குறைவாக இருக்கிறது என்பது என் எண்ணம். அந்தத் தொகையை கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாதர் சங்கங்கள், குழந்தைகள் நல விடுதி இவைகள் மூலமாக கிராமங்களிலும், பஞ்சாயத்துக்கள் மூலமாக நல்ல முறையிலே காரியங்களைச் செய்ய முடியும்; மக்களிடம் நல்ல

13th December 1961] [Srimathi Savithri Shanmugham]

ஆர்வம் இருக்கிறது. மாதர் நல இலாகாவும், சமூக நல போர்டும் இணங்குவதின் மூலம், மாதர் குழந்தைகள் முன்னேற்றத்தில் ஒரு நல்ல முன்னேற்றத்தைக் காண வசதிகள் இருக்கின்றன. அந்த வசதிகளை நாம் எல்லோரும் அனுபவிக்க அதிகப்படியான நிதி ஒதுக்க வேண்டும்.

பல ஜில்லாக்களிலும் "சர்வீஸ் ஹோம்"கள் வேண்டும். இப்பொழுது சில ஜில்லாக்களில் இருக்கிறது. இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பரவலாக ஒவ்வொரு ஜில்லாவிலும் "சர்வீஸ் ஹோம்"கள் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. அப்படி மூன்றாவது திட்டத்திலே ஆரம்பிக்கக்கூடிய மருத்துவக் கல்லூரியை கோவையில் ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அந்த நகரத்திற்கு குடி தண்ணீர் வசதியும், சேரி ஒழிப்புத் திட்டத்தையும் துரிதமாக நிறைவேற்றி, அதை எவ்வளவு முன்னேற்றம் அடையச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மறுபடியும் கனம் நிதி அமைச்சரவர்களை பாராட்டிகல்காண்டு, என் வார்த்தைகளை முடிக்கிறேன். வணக்கம்.

SRI P. M. MUNUSAMI GOUNDER : கனம் தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த இடைக்கால வரவு செலவு திட்டத்தை நமது கனம் நிதி அமைச்சரவர்கள் சமர்ப்பித்து சென்ற மூன்று தினங்களாக இங்கே விவாதம் நடந்துக்கொண்டு வருகிறது. இந்த வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கும் பொழுது நமது கனம் நிதி அமைச்சரவர்கள் சுமார் 7 கோடி ரூபாய் துண்டுவிழுகிறது என்று பிட்டார்கள். ஏழு கோடி ரூபாய் துண்டுவிழுந்த போதிலும்கூட நம்முடைய தமிழ் நாட்டின் வருவாயும் வருஷா வருஷம் அதிகரித்துக்கொண்டு போவதை நாம் பார்க்கிறோம். அப்படி பார்க்கும் பொழுது இந்த 7 கோடி ரூபாய் அல்ல, பத்து கோடி ரூபாய் துண்டு விழுந்தாலும்கூட அதை நாம் சரிகட்ட முடியும் என்பதை சென்ற பத்தாண்டுக் காலமாக நாம் தொடர்ந்தாற்போல் இந்த சபையிலே இருப்பதினால் அறிய முடிகிறது. காரணம் என்னவென்றால், நாம் போட்ட திட்டங்களெல்லாம் வெற்றிகரமாக நடந்துக்கொண்டு வரும்பொழுது தொழில் வளர்ச்சி ஏற்பட்டு அதன் மூலம் வியாபாரமும் பெருகி வருகிறது. நம் நாட்டிலிருக்கும் மக்களுடைய வாங்கும் சக்தி அதிகரிப்பதின் காரணமாக வருவாயும் அதிகரித்துக்கொண்டே போகிறது என்பதில் சந்தேகமில்லை. இந்த மாதிரி மத்திய சர்க்காருக்கு நமது நிதி அமைச்சரவர்கள் போகிற நேரத்திலே ஒரு துண்டு விழும்படியான வரவு செலவு திட்டத்தை பின்னால் வருகிறவர்கள் எந்த ரீதியிலாவது அதை கவனித்துக்கொள்ளட்டும் என்ற எண்ணத்துடன் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று சில எதிர்கட்சி அங்கத்தினர்கள் இங்கே பேசியதை நாம் பார்த்தோம். ஆனால் நாம் வருஷா வருஷம் முன்னேறிக்கொண்டு போகும்பொழுது இவ்வாறு துண்டு விழுவது ஒரு பெரிய குறை அல்ல என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

[Sri P. M. Munusami Gounder] [13th December 1961

அடுத்தபடியாக, எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் நமது முதல் அமைச்சரவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது ஏராளமான சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அவரைத் தொடர்ந்து 40, 50 ஜீப்புகளில் சென்று கிராமத்திலுள்ள மக்களுக்கு உடனடியாக அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லியதை நாம் இங்கே கேட்டோம். ஜனநாயக முறையில் ஜனங்களுக்கு எந்த வகையில் நன்மை செய்யவேண்டுமோ அந்த முறையிலே வேலை செய்தால்தான் அது ஜனங்களுக்கு திருப்தி அளிக்கும். அப்படிப் பார்க்கும்பொழுது நமது முதல் அமைச்சர் மட்டுமல்ல, மற்ற அமைச்சர்களும் ஒவ்வொரு ஜில்லாவுக்கும், ஒவ்வொரு தாலூகாவுக்கும், ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று அங்குள்ள மக்களின் குறைகளைத் தெரிந்துகொண்டு அக்குறைகளை நிவர்த்திப்பதற்கு வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். சென்ற ஒரு மாதத்திற்கு முன்னால்கூட நமது மின்சார இலாகா அமைச்சரவர்கள் கிருஷ்ணகிரி, ஹோசூர் தாலுகாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்து கிராமம் கிராமமாகச் சென்றார். அங்குள்ள மக்களுடைய குறைகளை தெரிந்துக்கொண்டு எல்லா உத்தியோகஸ்தர்களையும் அழைத்து அந்தக் குறைகளை நன்றாக பரிசிலனை செய்து எவ்வாறு காலதாமதம் இல்லாமல் வேலைகளை துரிதப்படுத்த வேண்டும் என்பதையும் குறிப்பிட்டார். இது மிகவும் வரவேற்கத்தக்கது. "சிவப்பு நாடா" முறை ஒழிய வேண்டுமென்பதை நாம் எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறோம். அந்த அடிப்படையில் இம்மாதிரியான முறை ஒவ்வொரு அமைச்சரும் ஆரம்பத்திலிருந்தே கடைப்பிடித்து இருப்பார்களேயானால் எதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய் இருக்கும். நமது முதல் அமைச்சரவர்கள் கிராமம் கிராமமாக சுற்றுப்பிரயாணம் செய்து அங்குள்ள மக்களின் குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்வது எதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஏனென்றால் அவர்கள் மக்களை ஏமாற்ற முடிவதில்லை. இனி வரக்கூடிய அமைச்சர்களும் கிராமம் கிராமமாகச் சென்று அங்குள்ள மக்களுடைய குறைகளைத் தெரிந்துகொண்டும் அவற்றை உடனடியாக நிவர்த்திப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த வரவு செலவு திட்டத்தில் சுமார் 100 புதிய திட்டங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மிகவும் வரவேற்கக்கூடிய அம்சம். குறிப்பாக, திருச்சி ஜில்லாவிலும், சேலம் ஜில்லாவிலும் என்ஜினியரிங் காலேஜுகள் ஏற்படுத்தப் போவதாக சொல்லியிருக்கிறார்கள். சேலத்தை எடுத்துக்கொண்டால் அது பரப்பிலும் சரி, ஜனத்தொகையிலும் சரி மிகவும் பெரிய ஜில்லா. அந்த ஜில்லாவிற்கு இம்மாதிரி ஒரு என்ஜினியரிங் கல்லூரி வேண்டுமென்று பல ஆண்டுக் காலமாக கேட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு இது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. சேலம் ஜில்லா மிகவும் பெரிதாக இருப்பதால் அதை

13th December 1961] [Sri P. M. Munusami Gounder]

இரண்டாக பிரிக்கவேண்டுமென்று கடந்த 10 ஆண்டுக் காலமாக நாங்கள் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். ஓர் இடத்திலிருந்து தலைநகருக்கு செல்லவேண்டுமென்றால் சுமார் 100 மைல் தூரம் போகவேண்டும். குறிப்பாக கிருஷ்ணகிரி, ஹோசூர் தாலூகாவில் உள்ளவர்கள் சேலத்திற்கு போகவேண்டுமென்றால் இது கஷ்டமாக இருக்கிறது. இந்த கோரிக்கையை ஒப்புக்கொண்டு இருந்தபோதிலும்கூட அதை அமல் நடத்த முடியவில்லை. உடனடியாக இதைச் செய்வதற்கு முடியாவிட்டாலும்கூட இனிமேலாவது அதை இரண்டாகப் பிரித்து, குறிப்பாக வடக்கு, தெற்கு என்று பகுதிகளாகப் பிரித்து நாம் வேலை செய்வோமானால் அங்குள்ள மக்கள் முன்னேறுவதற்கான வாய்ப்பினை அளிக்கும். கிருஷ்ணகிரி, ஹோசூர், ஹரூர், தருமபுரி முதலிய தாலூகாக்களை பார்க்கும்பொழுது, அங்கு மற்ற தாலூகாக்களைவிட ஜனத்தொகை அதிகம். சட்டசபை அங்கத்தினரை எடுத்துக்கொண்டாலும்கூட இந்த 4 தாலூகாக்களிலே 7 அங்கத்தினர்களும், மற்ற 6 தாலூகாக்களிலே 16 அங்கத்தினர்களும் இருப்பதை நாம் பார்க்கிறோம். அதுமாதிரி இந்த அங்கத்தினர்களை பிரிப்பதிலேயும்கூட இந்த நான்கு தாலூகாக்களைப் பொறுத்த வரையில் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்களுடைய முன்னேற்றத்திற்கான வேலைகளை சர்க்கார் செய்துவந்தபோதிலும்கூட இந்த வேலைகள் ஓரிரண்டு இடங்களில் தான் குவிந்திருக்கின்றன. அந்த முறையிலே இந்த என்ஜீனியரிங் கல்லூரியைக்கூட சேலம் ஜில்லாவில் வடபகுதியிலே ஏற்படுத்தாமல் தருமபுரி, கிருஷ்ணகிரி, ஹோசூர் போன்ற இடங்களில் வைத்தால் மக்கள் அதை வரவேற்பார்கள். அதோடுகூட ஹோசூரிலே ஒரு பெரிய கால்நடைப் பண்ணை இருக்கிறது. நம்முடைய தமிழ் நாட்டிலேயே அது மிகவும் சிறந்த ஒரு பண்ணை. அங்கே ஒரு கால்நடை கல்லூரியும், ஒரு விவசாயக் கல்லூரியும் ஏற்படுமேயானால் அங்கேயுள்ள மாணவர்களுக்கு படிப்பதற்கு மிகவும் வசதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நமது நிதி அமைச்சரவர்கள் இப்பொழுது கொண்டுவந்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தில் பல முன்னேற்றகரமான அம்சங்கள் இருக்கின்றன. குறிப்பாக முதியோர்களுக்கு ஓய்வுப் பணமாக மாதம் ரூ 20 கொடுக்கும் திட்டத்தை எல்லோரும் வரவேற்கிறார்கள். இந்த மாதிரி ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தது ஒரு "தேர்தல் ஸ்டண்ட்" என்று பல எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சொல்லுவதை நாம் பார்க்கிறோம். ஒவ்வொரு ஆண்டிலும் வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கும்பொழுது பல நல்ல திட்டங்களை வருஷா வருஷம் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த முறையில் இந்த கடைசி வரவு செலவு திட்டத்திலும் நல்ல அம்சங்கள் இருக்கின்றன. கடைசி வரவு செலவு திட்டம் என்று சொல்வதில் இரண்டு அர்த்தம் இருக்கிறது. இந்த சட்டசபை இத்துடன் முடிகிறது. மேலும் நிதி அமைச்சரவர்கள் மத்திய சர்க்காருக்குப் போவதன் காரணமாக இது அவருடைய கடைசி வரவு செலவு திட்டமாக

இருக்கிறது. இந்தக் குறுகிய கால திட்டத்திலும்கூட பல வரவேற்கத்தக்க அம்சங்களை நமது நிதி அமைச்சரவர்கள் கொண்டுவந்துவிட்டார்களே என்று எதிர்க்கட்சியிலுள்ள அங்கத்தினர்களுக்கு மிகவும் ஏமாற்றத்தை அளிக்கக்கூடிய நிலையிலே இந்தத் திட்டம் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். தற்போது பஞ்சாயத்து யூனியன்கள் இப்பொழுதுள்ள விதிகளின்படி வரியை ரூபாய்க்கு 25 நயா பைசா என்று இருப்பதை சர்க்காருடைய அனுமதியின் பேரில் உயர்த்திக்கொள்ளலாம் என்று இருப்பதை வைத்துக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழக சார்பில் நடைபெற்று வருகிற யூனியன்களில் அப்படிப்பட்ட உத்தரவு சர்க்காரிலிருந்து வந்துவிட்டது என்று பொய் பிரசாரமாகச் சொல்லி சர்க்காரைக் குறை கூறவேண்டும் என்ற அளவில் ரூபாய்க்கு 75 முதல் 85 நயா பைசா வரையில் உயர்த்துவதற்கு உத்தரவு வந்துவிட்டது என்று சொல்லி வசூலிக்க ஏற்பாடுகள் நடந்துவருகிறது. இப்படித் தவறான முறையில் பிரசாரம் செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட தப்பு பிரசாரத்திற்கு இடம் கொடுக்காமல் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது எவ்வளவு போட வேண்டுமோ
10·30 a.m. அவ்வளவு போட்டு வந்தும் இப்படி தப்புப் பிரசாரம் செய்து வருகிறார்கள். பஞ்சாயத்து தலைவர்கள் சிலர் இப்படி செய்ய சொல்லி பிரசாரம் செய்து வருகிறார்கள். அப்படி பிரசாரம் செய்வதோடு மற்ற அங்கத்தினர்களிடமும் கையெழுத்து வாங்கி தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்கள். ஏனென்றால் அப்படி கையெழுத்து வாங்கினால்தான் உயர்த்துவதற்கு சௌகர்யமாக் இருக்கும் என்று மற்றவர்களிடமும் கையெழுத்து வாங்குகிறார்கள். அந்த நிலையில் இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன்கள் நடைபெற்று வருகின்றன. இப்படி தவறான பிரசாரம் செய்து கையெழுத்து வாங்கி அதிகப்படியாக வசூல் செய்வதை கண்காணித்து சர்க்கார் அப்படி நடைபெறாமல் இருப்பதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதையெல்லாம் நல்ல முறையில் திருத்தி அமைக்கவேண்டும் என்றும் சொல்லிக்கொண்டு நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த வரவு செலவு திட்டத்தை நல்ல முறையில் சமர்ப்பித்திருப்பதற்கும் இனிமேல் அவர் நம் தமிழ் நாட்டைவிட்டு மத்திய அரசாங்கத்திற்குச் சென்று அங்கும் நல்ல முறையில் பணியாற்ற வேண்டும் என்று சொல்லிக் கொண்டு மறுபடியும் அவருக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI N. MARUDACHALAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1962-63-வது வருஷத்திற்குரிய இந்த இடைக் கால நிதி நிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். அதாவது இன்றைக்கு நமது திட்டப் படி சாதாரணமாக எல்லா ஏழை குழந்தைகளுக்கும் கல்விச் சலுகை அதாவது சம்பளம் இல்லாமல் படிப்புச்

13th December 1961] [Sri N. Marudachalam]

சொல்லிக் கொடுக்கக்கூடிய திட்டம் பத்தாவது வரையில் கொண்டுவரப் போவதாகச் சொல்லப்படுகிறது. அதாவது வருஷம் ஒன்றுக்கு 1,200 ரூபாய்க்கு அதிகமாக வருமானம் வருகிறவர்களுக்கு இந்தச் சலுகை கிடையாது என்றும் அதற்குள் வருமானம் வரக்கூடியவர்களுக்கு இந்தச் சலுகை உண்டென்றும் சொல்லப்படுகிறது. இப்படி 1,200 ரூபாய் என்று வைத்தால் பல ஏழை குழந்தைகளுக்கு இது கிடைக்காமல் போவதற்கு இடம் இருக்கிறது. இந்தத் திட்டம் 1914-ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. அதாவது அந்த ஆண்டு முதற்கொண்டு இந்த நிலைமை இருந்து வருகிறது. அன்று இந்த நாட்டிலுள்ள விலைவாசியின் நிலைமை என்ன இன்றைக்கு விலைவாசி நிலைமை என்ன என்பதை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு பன்மடங்கு அதிகமாக உயர்ந்திருக்கிறது. அதற்கு ஏற்ப இந்த தொகையையும் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, இன்றைக்கு அந்த அளவில் கல்விச் சலுகைக் கொடுக்கக்கூடிய வருமான அளவையும் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு ஒரு தொழிலாளருடைய சம்பளத்தை எடுத்துக்கொண்டால் மாதம் 27 முதல் 37 ரூபாய் வரையில்தான் கிடைக்கிறது அதோடு பஞ்சப்படியையும் சேர்த்தால் அதாவது 83 ரூபாய் இதைச் சேர்த்தால் 120 ரூபாய் வருமானம் ஆகிறது. இதை கணக்கில் வைத்துக்கொண்டால் வருஷத்திற்கு 120-க்கு 12 அதாவது 1,440 ரூபாயாகிறது. ஒரு வருஷத்திற்கு அதாவது 1,200 ரூபாய்க்கு மேல் போய்விடுகிறது. இதனால் இந்தத் தொழிலாளி கல்விச் சலுகையைப் பெற முடியாமல் போய்விடுகிறது. இப்படி எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு தொழிலாளி கல்விச் சலுகை பெறவேண்டுமானால் அடிப்படை வருமானத்தை உயர்த்துவதுதான் நலம் என்று தோன்றுகிறது. அதாவது வருஷ வருமானம் குறைந்தது 2,000 ரூபாய் என்றாவது வைத்தால் மிக செளகர்யமாக இருக்கும், அதாவது வருஷம் 2,000 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் வரக்கூடியவர்களுடைய குழந்தைகளுக்கு கல்விச் சலுகை உண்டு என்று இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அரசாங்கம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, பல ஹரிஜன ஹாஸ்டல்களை சர்க்காரே எடுத்து நடத்துகிறார்கள். அந்த ஹாஸ்டல்களில் ஏழை குழந்தைகளுக்கு கல்வி அபிவிருத்தி கொடுப்பதுடன் அவர்களுக்குக் காலையில் ஆகாரமும் மத்தியான ஆகாரமும் கொடுத்து வருகிறார்கள். அப்படி பகலில் கொடுக்கக்கூடிய ஆகாரம் நல்ல ஆகாரமாகக் கொடுப்பதாகத் தெரியவில்லை. படிக்கக்கூடிய குழந்தைகளுக்கு கொஞ்சம் நல்ல ஆகாரமாகக் கொடுத்தால்தான் நல்லது. அப்படி ஆகாரம் கொடுப்பதற்கு ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு 15 ரூபாய் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இது போதவில்லை. ஆகவே, பதினைந்து ரூபாய் என்பதை இருபது ரூபாய் என்று உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிக் கொடுத்தால்தான் குழந்தைகளுக்கு நல்ல ஆகாரமாகக்

[Sri N. Marudachalam] [13th December 1961

கொடுக்க முடியும். ஆகவே, சர்க்கார் உடனடியாக இருபது ரூபாய் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உபாத்தியாயர்கள், இவர்களைப் பேசிக் கல்வி பயிற்சிக்கு என்று அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பி பயிற்சி பெற்று வருகிறவர்கள் சாதாரணமாக அவர்கள் பயிற்சி பெற்று வந்தவுடன் இரண்டொரு வருஷங்களில் அவர்கள் ரிடயராகும்படியாக இருக்கிறது. அதனால் பயிற்சி பெற்ற ஆசிரியர் அதன் பிறகு இல்லாமல் போய்விடுகிறது. அப்படி இல்லாமல் பயிற்சிக்கு அனுப்பும்போது சமீபத்தில் ஓய்வு எடுத்துக்கொள்ளக் கூடிய ஆசிரியர்களாக இல்லாமல் குறைந்த வயதிலுள்ள ஆசிரியர்களை தேர்ந்தெடுத்து அனுப்பும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். அதாவது முப்பது அல்லது முப்பத்தைந்து வயதுள்ளவர்களை அனுப்பினால் நலமாக இருக்கும் என்று தோன்றுகிறது. அப்படி அனுப்பினால்தான் அவர் பயிற்சி பெற்று வந்தவுடன் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க வசதியாக இருக்கும். மற்றொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி பேசிக் கல்விக்கு பயிற்சிக்கு அனுப்பிக்கக்கூடிய ஆசிரியர்களுக்கே இந்தக் கல்வியில் அக்கரை இல்லாமல் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். சாதாரணமாக இதில் பயன் அடைவதாகவும் தெரியவில்லை. ஏதோ பஞ்சு அடிக்கச் சொல்லிக் கொடுப்பதாக இருக்கிறதேயொழிய ஏதாவது தொழில் கற்றுக்கொள்வதாகவே இல்லை. ஏதோ நடக்கிறதேயொழிய படிக்க வருவதாகத் தோன்றவில்லை. ஏனென்றால் அங்கு ஏதோ பஞ்சு அடிப்பதுதான் நடந்துகொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. படிப்பு ஏறுவதாகவே இல்லை.

அடுத்தபடியாக கூட்டுறவு. இன்றைக்கு கூட்டுறவு முறையை எடுத்துக்கொண்டால் நமது நாட்டில் அது பெரும் அளவில் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. திருப்பூரில் கூட்டுறவு முறையில் வீடு கட்டும் திட்டம் நடைபெறுவதாகவும் அதுவும் நல்ல முறையில் நடைபெற்று வருவதாகவும் கேள்வி நேரத்தில் அமைச்சரால் சொல்லப்பட்டது. அங்கு சிறப்பாக நடக்கிறது என்றால் அங்கே இருக்கக்கூடிய அதிகாரி நல்ல முறையில் வேலை செய்து வருகிறார் என்றுதான் அர்த்தமாகிறது. அதிகாரிகள் நல்ல முறையில் வேலை செய்தால்தான் கூட்டுறவு முறையில் வீடு கட்டும் திட்டம் நல்ல முறையில் நடைபெறும் என்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அப்படிஅங்கு நல்ல முறையில் வேலை செய்யக்கூடிய காரியதரிசியை அப்புறப்படுத்துவதற்கு அங்கு ஏற்பாடு நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது. இதை சர்க்கார் உடனடியாக கவனித்து அப்படி அப்புறப்படுத்துவது நடைபெறாமல் இருக்கத்தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள காரியதரிசியை அப்புறப்படுத்துவதற்கு அங்குள்ள சூபர்வைசரும், அங்குள்ள சில முக்கியஸ்தர்களும் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்

13th December 1961] [Sri N. Marudachalam]

கொண்டு வருவதாகத் தெரியவருகிறது. ஆகவே, அவரை அப்புறப் படுத்தாமல் இருக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கோவை நகரசபையில் ஒரு காங்கிரஸ் பெண் மெம்பர் ஒருவர் ஒரு தீர்மானம் கொண்டு வந்து அதுவும் நிறை வேற்றப்பட்டு சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இருபது வருஷம் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு மனைக்கட்டு கொடுக்க வேண்டும் என்று ஓர் தீர்மானம் போட்டு அனுப்பப் பட்டிருக்கிறது. 1952-ம் ஆண்டு அதை அனுப்பியும் இதுவரை யிலும் சர்க்கார் அதைக் கொடுக்கவில்லை. அதைப்பற்றி அபிப்பிராயம் என்ன, குற்றம் எங்கே. மறுபடியும் அங்குள்ள கவுன்சில் தீர்மானம் போட்டு அனுப்பி இருக்கிறது. சாதாரண மாக அவர்களுக்கு அடிக்கு இரண்டு அணு வீதம் கொடுக்க லாம் என்று சொல்லி இருக்கிறார்கள். இப்படி இடத்தை உயர்த்தி இடத்தை உபாத்தியாயார்களுக்குக் கொடுத்துவிட்டால் தங்களுக்கு சம்பந்தம் இல்லாமல் போய்விடும் என்று சில பணக்காரர்கள் ஆட்சேபனை சொல்லி இருப்பதாகவும், உபாத்தி யாயர்கள் அங்கு வந்து உட்கார்ந்துவிட்டால் அவர்களை அதன் பிறகு அப்புறப்படுத்த முடியாது, அதனால் அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று ஆட்சேபனை சொல்லி வருவதாகவும் அவர்கள் விண்ணப்பங்கள் போட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. அத்துடன் மொட்டை பெடிஷன்கள்கூட போட்டிருக்கிறார்களாம். இதை வைத்துக்கொண்டு அவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று அந்த முனிசிபாலிட்டிக்கு உத்தரவு போட்டிருக்கிறார்களாம், அதன்மேல் சர்க்கார், 'அவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது' என்று முனிசிபாலிட்டிக்கு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவை உடனடியாக ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இருபது வருஷங்கள் நல்ல வேலை செய்து சர்வீஸ் ஆன உபாத்தியாயர்களுக்கு உடனடியாக அந்த இடத்தைக் கொடுக்க உத்தரவு போடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சில இடங்களில் ஹரிஜனங்கள் வீடு கட்டியிருக்கிறார்கள். முனிசிபாலிடி நிலங்களிலும் பட்டா நிலங்களிலும்கூட வீடு கட்டி யிருக்கிறார்கள். பாப்பாநாய்க்கன்பட்டியில் முனிசிபாலிடிக்குச் சொந்தமான இடத்தில் வீடுகள் கட்டியிருக்கிறார்கள். அங்கு குடி யிருக்கும் ஹரிஜனங்களுக்கே அந்த இடத்தைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று இரண்டு மூன்று தீர்மானங்களை முனிசிபல் கவுன்சில் போட்டிருக்கிறார்கள். அந்தத் தீர்மானங்கள் அரசாங்கத்திற்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால், அவர் களுக்கு இன்னும் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. உடனடி யாக அவர்களுக்குப் பட்டா செய்துகொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. SADASIVAM: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1962-63-ம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து அதன்மேல் ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படு

கிறேன். கடந்த இரண்டு நாட்களாக இந்த அறிக்கையின் பேரில் பல கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் இந்த அறிக்கையை ஆதரித்து, அவர்களுடைய பகுதியிலுள்ள பல குறைகளை நிவர்த்திக்கவேண்டுமென்ற கருத்துக்களையும் எடுத்துரைத்தார்கள். அதே சமயத்தில் எதிர்க்கட்சியிலுள்ள அங்கத்தினர்களில் பெரும்பாலோர் இந்த அறிக்கையைத் தேர்தல் அறிக்கை என்ற கண்ணோட்டத்திலே பார்த்து, அந்த முறையில் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இன்று இங்கு நிலவக்கூடிய சூழ்நிலையில், அகில இந்தியா ஒன்றுபட்டு இயங்கவேண்டுமென்ற கருத்துடைய ஒரு சாரார், இந்த நாட்டின் முன்னேற்றத்தை அடிப்படையாகக்கொண்டிருக்கக்கூடிய கொள்கைகளையும் திட்டங்களையும் எதிர்த்து, அதற்காகச் செலவழிக்கக்கூடிய தொகை வீண் என்றும், அந்த வகையில் கடனாளியாகிறோம் என்றும் சொல்கிறார்கள். இந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்காக ஆயிரம் கோடி ரூபாய் தேவை என்றும், அப்படித் தேவைப்படுகிற தொகையை நாடு பிரிவினை அடைந்த பின்புதான் பெற முடியும் என்றும், பிரிவினையை அடிப்படையாக வைக்கவேண்டுமென்ற கொள்கையையுடைய ஒருசிலர் கருத்துத் தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட இரு சாராரும் கூட்டுச் சேரவேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் துரதிஷ்டவசமாக நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். குழப்பமான கண்ணோட்டத்துடன் இதைப் பார்ப்பதால்தான் இது தேர்தல் அறிக்கையாக அவர்களுக்குத் தெரிகிறது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிலைமையில் கொண்டுவந்திருக்கக்கூடிய அறிக்கையானது சில பக்கங்களையே உடையதாக இருந்தாலும், இதில் நல்ல முறையில், மக்களுக்குப் பயன்படக்கூடிய பல திட்டங்களை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இதில் 100 திட்டங்கள் அடங்கியிருப்பதைக் கண்டு நாம் மிகவும் பெருமைப்படுகிறோம். குறிப்பாக ஆசிரியர்களுக்கும், என்.ஜி.ஓ.க்களுக்கும் பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தங்களுடைய சொந்த உழைப்பின் மூலமாக வருமானம் பெற்று வாழ்க்கை நடத்த முடியாத வயோதிகர்களுக்கும் இதில் சலுகை கொடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு நாம் பெருமைப்படாமலிருக்க முடியாது. என்ஜினீரிங், விவசாயப் பயிற்சிக்குப் போகக்கூடிய மாணவர்களுக்குக் கடன் தொகை கொடுக்கப்படும் என்ற அம்சமும் வரவேற்கத்தக்கது. ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கும் என்.ஜி.ஓ.க்களின் குழந்தைகளுக்கும் இந்தச் சலுகை கொடுக்கப்படுவது வரவேற்கத்தக்கது. அதே சமயத்தில், நம் நாட்டினுடைய முதுகெலும்பு போன்று இருக்கக்கூடிய விவசாயத் தொழிலை நல்லமுறையில் அபிவிருத்தி செய்ய வேண்டுமானால், நாட்டில் விவசாயத் தொழில் ஈடுபட்டுள்ள மக்களின் குழந்தைகளுக்கும் இந்தச் சலுகைகள் அளிக்கப்படவேண்டும். விவசாயப் பயிற்சி, கால்நடை வைத்தியப் பயிற்சி இவை

13th December 1961] [Sri S. Sadasivam]

போன்று பல துறைகளில் விவசாயக் குடும்பத்திலுள்ள குழந்தைகள் முன்னேறவேண்டிய அவசியத்தை கனம் அமைச்சர் அவர்கள் உணருவார்கள் என்று நான் எண்ணுகிறேன். தங்களுடைய ஊதியம் போதிய அளவு இல்லாத நிலைமையில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள், நடுத்தர விவசாயக் குடும்பத்திலுள்ளவர்கள் இவர்களுடைய குழந்தைகளும் இத்தகைய படிப்பு படிப்பதற்குரிய சலுகைகளை இதில் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்காக 7 கோடி உட்பட 17 கோடி ரூபாய் வரை தொகை ஒதுக்கியிருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். உள்நாட்டு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலேகூட, நம்முடைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையிலே சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக நமக்குக் கிடைக்கக்கூடிய தொகையை ஐந்தாண்டுகளில் முதல் மூன்று ஆண்டுகளிலேயே செலவு செய்து விடுவோமானால் மீண்டும் நமக்குப் போதிய தொகை கொடுப்பதாக மத்திய அரசாங்கம் கூறியிருப்பதாகச் சொன்னார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்கது. இந்த அடிப்படையில் நாம் விவசாயத்தை பெருக்க பல சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அமைக்க வேண்டுமென்று மன்றாடி வருகின்றோம்.

என் பகுதியில் சில முக்கியமான திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டி இருக்கின்றன என்பதை இந்த மன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பெரிய திட்டங்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே உருவாக்கப்பெற்றிருந்தும், நொய்யல் போன்ற திட்டம் சில காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உணருகிறேன். அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், அதன் மூலமாக 25 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இரு போக சாகுபடி செய்ய முடியும் என்றும், அதற்குக் குறைந்த செலவே ஆகுமென்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அந்தத் திட்டம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டுமென்ற சூழ்நிலை இருப்பதாக நான் உணருகிறேன். முன்பு எந்த நிலையிலே அந்தத் திட்டத்தை உருவாக்கினோமோ அதே முறையில் அதை உருவாக்கி நிறைவேற்றுவதுதான் மிகவும் சிறந்த முறை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதி மக்களும் அதைத்தான் வரவேற்கிறார்கள் என்பதையும் நான் அமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

என் பகுதி போன்ற வறண்ட பகுதிகளில் நேரடியாக விவசாய முறையைக் கையாள முடியாத சூழ்நிலை இருக்கும்போது, குழாய்க் கிணறு போன்ற வேறு பல திட்டங்களை அமைத்துக் கொடுக்க வழிவகை இருக்கிறது. அவைகளை மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் சேர்ந்து, காலதாமதமில்லாமல் உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேரடியான திட்டங்கள் அல்லாமல் கிணறுகள் போன்றவைகளை வெட்டி அவை மூலமாக நீர்ப்பாசனத்தை அதிகமாக விருத்தி செய்யக்கூடிய இந்த சமயத்தில் அதிகமாகக் கிணறுகள்

வெட்டுவதன் காரணமாக மேலே இருக்கும் ஊற்று நீர் கீழே செல்வதினால் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. மழை காலங்களில் பெய்யும் தண்ணீர் நேரடியாகச் சமுத்திரத்தில் சென்று கலந்து விடாமல் ஆங்காங்கு பல தடுப்புக்கள் கட்டித் தேக்கவேண்டுமென்று நாம் திட்டங்கள் போட்டு நிறைவேற்றுகிறோம். இருந்தாலும் எங்கள் பகுதி போன்ற பகுதிகள் மிகவும் சிரமப்படுகின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், இவைகளைப் பி.டபிள்யூ.டி. செய்ய முடியாது என்ற கருத்து நிலவி வருகிறது. நேரடியான பாய்ச்சல் ஆதாரங்கள் இல்லாத ஒரு திட்டம் அந்த இலாகாவினரால் செய்ய முடியாது என்ற கருத்து இருக்கிறது. அப்படியிருக்கும்போது, மக்கள் பகுதித் தொகை போடவேண்டுமென்றால் அந்தப் பகுதி மிகவும் சிரமப்படுகிறது. ஆனால், அதே சமயத்தில் கோயம்புத்தூர், சேலம் போன்ற மாவட்டங்களிலே இவைகளை மைனர் இர்ரிகேஷன் இலாகாவினரே செய்யலாம் என்ற அடிப்படையில் அந்த இரண்டு ஜில்லாக்களுக்கு விதி விலக்குகள் அளித்திருக்கிறார்கள். அதே தன்மையில் எங்கள் பகுதியையும் சேர்த்து எங்களுக்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமராவதி அணை கட்டிய பிறகு அமராவதியில் ஏராளமாகத் தண்ணீர் ஓடுகின்றன. எங்கள் தொகுதியின் கீழ் பகுதியில் நல்ல முறையில் விவசாயம் நடைபெற்று வருகிறது. அதே அமராவதியில் இன்னும் புதிய திட்டங்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. குறிப்பாக அங்கே சிறுசிறு ஆயில் என்ஜின்கள் அல்லது மின்சார என்ஜின்கள் வைத்து பம்பு செட்டுகளை வைக்கலாம். அப்படி வைத்தால் போதிய தண்ணீர் 6 மாத பாசனத்திற்கு வேண்டியது கிடைக்கும் என்று என்ஜினியர்கள் சொல்லுகிறார்கள். அதையும் கவனித்து பம்பு செட்டு வைப்பதற்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் கொடுத்தால் இன்னும் பரம்பிக்குளத் திட்டம் வரும்போது அந்த அமராவதியில் சர்ப்ளஸ் வாட்டர் வரும். அதன் மூலம் எங்கள் தொகுதியில் உள்ள கீழ்பகுதி நல்ல பாசனம் பெறும் என்று சொல்லிக்கொள்கிறேன். அடுத்தபடியாக . . .

Sri T. S. RAMASWAMI : சபை தற்காலிகத் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இடைக்கால நிதிநிலை அறிக்கையை நான் முழுமனதுடன் பாராட்டுகிறேன். இந்த அறிக்கை எட்டு பக்கங்கள்தான் இருக்கின்றன. இதற்கு முன்னால் சென்ற மார்ச் மாதத்தில் கொண்டுவந்த அறிக்கை சாங்கோ பாங்கமாய் எல்லா விவரங்களையும் கொண்டதாக அமைந்திருந்தது. இந்த இடைக்கால அறிக்கையோ ஏழு பக்கமும், சொச்சமும்தான் இருக்கிறது. இருந்தபோதிலுங்கூட இது கச்சிதமாக, அட்சர லட்சம் பெறும்படியாக பல முற்போக்கான திட்டங்களைக் கொண்டதாக வந்திருக்கிறது என்று நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும். உதாரணமாக க்ஷேம நல அரசாங்கம் இது என்பதைப் பலவகையிலும் நிரூபிக்கும் வகையில் முனைந்து இருக்கிறது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை

13th December 1961] [Sri T. S. Ramaswami]

வகுத்திருக்கிறோம். கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களினாலேயே நாம் கணிசமான அளவு கல்வித் துறையில், விவசாயத் துறையில், பொருளாதாரத் துறையில், மக்களுடைய வாழ்க்கைத் துறையில் முன்னேற்றம் கண்டு இருக்கிறோம். இதை யாராலும் மறக்கவோ, மறைக்கவோ முடியாது. இன்னும் சில குறைகள் இருக்கலாம். இருந்தபோதிலும் கடந்த பத்தாண்டு சாதனைகளை இதர ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் பெருமையோடு பலவகையிலும் முன்னேறியிருக்கிறோம் என்று தலைநிமிர்ந்து சொல்ல முடியும். கல்வித் துறையிலே, கலாசாரத் துறையிலே, பொருளாதாரத் துறையிலே, வாழ்க்கைத் துறையிலே நாம் அடைந்திருக்கும் முன்னேற்றத்தை வேறு எந்த ராஜ்யமும் அடையவில்லை என்பதில் யாருக்கும் சந்தேகம் எழமுடியாது. இந்த நிலையில் இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கை வந்திருக்கிறது. இதிலேகூட நாம் எல்லாம் பெருமைப்படத்தக்க வகையில் க்ஷேமநல அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கையாக சோஷியல் செக்யூரிடி கொண்டுவந்திருக்கிறார்கள். அறுபது வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு பென்ஷன் கொடுக்கவேண்டும் என்று கொண்டுவந்திருக்கிற திட்டமானது மிகமிக உயர்வானது, முதியவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது என்ற அடிப்படையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இதுவே முன்னால் இருந்த போலீஸ் ஸ்டேட் மாறி, வெல்பேர் ஸ்டேட் வந்துகொண்டிருக்கிறது என்பதற்கு அத்தாட்சியாகும். மாணவர்களைப் பொருத்தவரையில் கட்டாயக் கல்வியை பேஸ் ஸ்கிம் அடிப்படையில் படிப்படியாகக் கொண்டு வந்து இன்றைக்குக் கடைசிக் கட்டத்தில் இருக்கிறோம். இதுவும் பெருமைப்பட வேண்டியது ஒன்றாகும்.

1954-ம் ஆண்டு கம்போஸிட் ஸ்டேட்டாக இருந்தபோது நமது நிதி அமைச்சர் அவர்கள் அன்றைக்கு 54 கோடி ரூபாய்க்கு வரவு செலவுத் திட்டத்தைத் தீட்டியிருக்கிறார் என்றால் இன்றைக்கு நாம் தமிழ் நாடாகத் தனித்து இருக்கும்போது நூறு கோடிக்கு வரவு செலவுத் திட்டத்தைத் தீட்டிக்கொடுத்திருக்கிறோம். நம்முடைய வருவாயையும், செலவையும் முன்பு இருந்ததைவிட இரண்டு மடங்கு அதிகமாகப் பெருக்கிக் கொடுத்திருக்கிறார்கள் நமது நிதி அமைச்சர் என்றால் பெருமை முழுவதும் ஸ்ரீ சுப்பிரமணியத்திற்குரியது. இப்படி எல்லா வகையிலும் நம் ராஜ்யம் உயர்ந்து கொண்டு வருகிறது என்பதில் சந்தேகமே யாருக்கும் இருக்க முடியாது. தனி நபர்களுடைய வருமானத்தைப் பார்க்கும்போது கூட நாம் எத்தனையோ மடங்கு உயர்ந்திருக்கிறோம். இதில் அங்கங்கே குறைகள் இருக்கின்றன என்றாலும் அந்தக் குறைகளை நீக்க வேண்டுமென்றால் நாம் எல்லோருக்கும் எத்தனைக்கு எத்தனை ஒத்துழைக்கிறோமோ அத்தனைக்கு அத்தனைதான் சாத்தியமாகும். சுதந்திரப் போராட்டக் காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை எதிர்த்து சுதந்திர இயக்கத்தில் பங்குகொள்வது தேசபக்தியாகக் கருதப்பட்டது என்றால் இன்றைக்கு நாட்டின் வறுமையை, கல்வி அறிவின்மையை, பொருளாதார ஏற்றத்தாழ்வை ஒழிப்பதற்கு

[Sri T. S. Ramaswami] [13th December 1961

ஐந்தாண்டுத் திட்டங்களை வரிசையாகப் போட்டு பலபல திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகிற அரசாங்கத்தோடு எல்லா மக்களும் ஒத்துழைத்து அதை வெற்றிபெறச் செய்வதே சிறந்த தேசபக்திக்கு எடுத்துக்காட்டாகும் என்பதை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதுவும் கடந்த பத்தாண்டுகளில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய சாதனை பெருமைப் படத்தக்கதாகும். வருகிற தேர்தலில் அவர் பாராளுமன்றத்திற்குச் சென்றாலும் அங்கே அவருடைய சேவையும், திறமையும் இன்னும் தேசம் முழுவதற்கும் பயன்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் 1956-ஆம் வருஷம்தான் இந்தத் தாயகத்துடன் சேர்ந்தோம். பிரசார இலாகா விளம்பர அறிக்கையிலே எல்லா ஜில்லாக்களுக்கும் பத்தாண்டுச் சாதனை என்று குறிப்பிட்டால் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஐந்தாண்டுச் சாதனை என்றே குறிப்பார்கள். நாங்கள் 1956-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் சேர்ந்தோம் என்றாலும் பல அரிய பெரிய திட்டங்கள் எல்லாம் எங்கள் மாவட்டத்தில் உருவாகியிருக்கின்றன.

(Deputy speaker in the Chair.)

ஆகவே, இன்னும் அங்கங்கே இருக்கிற குறைபாடுகளை எல்லாம்கூட நீக்கி நல்ல முன்னேற்றம் காணவேண்டுமென்றால் எல்லா மக்களும் ஒத்துழைத்தாக வேண்டும்.

இன்னும் ஒரே ஒரு விஷயம். இங்கே பே கமிஷன்படி எல்லா ஆசிரியர்களுக்கும் சம்பளத்தை உயர்த்தியாகிவிட்டது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளிக்கூட சிப்பந்திகளுக்கும், ஆசிரியர்களுக்கும் இன்னும் உயர்த்தப்படவில்லை. க்ராஜ்வேட் டீச்சர்களுக்கு சர்க்கார் பள்ளிகளில் கொடுத்திருக்கிறார்கள்; ப்ரைவேட் மானேஜ்மெண்டில் கொடுக்கவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் "கொடுக்கப்படும்" என்று சொன்னார்கள். அது அவர்களுடைய நல்லெண்ணத்தைக் காட்டுகிறது என்று நினைக்கிறேன். உடனே எல்லா பள்ளிக்கூட சிப்பந்திகளுக்கும், ஆசிரியர்களுக்கும், செகண்டரி கிரேட் டீச்சர்கள் உட்பட கொடுக்கவேண்டும் என்பதாக இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பீஸ் வசூல் செய்வதில் 80 சதவிகிதம் அரசாங்கத்திற்குக் கட்டவேண்டும், பாக்கி 20 சதவிகிதத்தைத்தான் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. இப்போது ஸ்கூல் பைனல் வரையில் சம்பளமே இல்லாமல் செய்திருக்கிறோம். இதனால் பீஸ் வசூலாவது குறைந்துவிட்டது. ஆசிரியர்களுக்கு சர்க்கார் சம்பளம் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால், சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுக்க முடியாமல் பிரைவேட் மானேஜ்மெண்டு திண்டாடக்கூடிய நிலைதான் இருக்கிறது. இதையும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

13th December 1961] [Sri T. S. Ramaswami]

அதுபோலவேதான் எங்கள் மணியங்கரம் பிரச்சனை ஒன்று இருக்கிறது. பற்பல கூட்டங்களில் அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். அது ஒருவிதமான லாண்டு டென்யூர். அதை மாற்ற வேண்டுமென்று திருவிதாங்கூர்-கொச்சி சட்டசபையிலேயே ஒரு மசோதா கொண்டுவந்தார்கள். அது நிறைவேற்றப்படாது நாங்கள் இங்கே வந்து விட்டோம். அதை மாற்றவேண்டுமென்று எவ்வளவோ தடவை கூறியும் காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கிறது அதையும் வெகு சீக்கிரத்தில் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாம் கோடிக் கணக்கில் ஏராளமாகச் செலவழிக்கிறோம். அரசாங்கம் தாராளச் சிந்தனையோடு செலவு செய்கிறது. அப்பொழுது அதிகாரிகளும் மக்களும் எவ்வளவுக்கெவ்வளவு கண்காணிப்புடன் நடக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நாம் அதில் வெற்றி பெறமுடியும். சிறிய விஷயங்களை எடுத்துக்கொள்ளலாம். சுசீந்திரம் வாட்டர் சப்ளை என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். மக்களும் தங்கள் பங்கைக் கொடுத்து விட்டார்கள். வேலை முடிந்து விட்டது, பௌண்டன்ஸ் போட்டாகி விட்டது. ஆனால், நாலு ஆண்டுகளாகியும் தண்ணீர் கொடுக்கப்படவில்லை. இது சின்ன விஷயம். ஜனங்களின் பணமும், அரசாங்கத்தின் பணமும் அவசியம் இல்லாது தேங்கியிருப்பது போல் இருக்கிறது. இப்படிப்பட்ட விஷயங்களை சிறிது கவனித்தால் போதும், இவற்றையெல்லாம் தீர்த்துவிட முடியும். அதேபோல் பல பிரச்னைகள் கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கின்றன. இன்று கேள்வி நரேத்தின்போது ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் வரவில்லை. பே கமிஷன் ரெகமென்டேஷன்படி ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகளுக்கு சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்த சம்பள உயர்வு கன்னியாகுமரியைப் பொறுத்தவரை இன்னும் வழங்கப்படவில்லை, பஞ்சாயத்துக்களானாலும் சரி, முனிசிபாலிட்டியானாலும் சரி. இங்குள்ள சட்டத்தை அங்கு விஸ்தரிக்கும்போது மாற்றிவிடுவோம் என்று சொன்னார்கள். அதைச் சீக்கிரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். பத்து ஆண்டுகளாக சிறந்த முறையில், திறமையுடன் அமைச்சரவைக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமைதரக்கூடிய அளவில் நிதியமைச்சராக இருந்து அந்த ஸ்தானத்தை அலங்கரித்திருக்கிறார்கள் நமது நிதியமைச்சர் என்று சொல்லவேண்டும், அத்தகைய அலங்காரம் அங்கு சென்ற பிறகும் நிச்சயமாக இருக்கும், தமிழ்நாடு பெருமைப்படும்படியாக இருக்க வேண்டுமென்று இறைவனைப் பிராத்தித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

11 a.m.

SRI M. P. SUBRAMANIAM: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1962-63-ம் ஆண்டின் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை இங்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். முழு ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தாலும் முதல் நான்கு மாதங்களில் செய்ய இருக்கிற செலவினங்களுக்கு இந்த சபையின் அங்கீகாரம் வேண்டுமென்றுதான் இச்சபையில் இது இப்பொழுது நம் முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில்தான்

[Sri M. P. Subramaniam] [13th December 1961

இரண்டு நாட்களாக விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்பொழுது இந்த விவாதத்தில் சொல்கிற ஆலோசனைகளும், எடுத்துக் கூறுகிற குறைபாடுகளும், இவைகளை நிவர்த்தி செய்கிற வாய்ப்பும், அதிகாரமும் இப்பொழுது இருக்கிற அமைச்சரவைக்கு நிச்சயமாக இல்லை என்பது நமக்குத் தெரியும். ஏனெனில், இந்த வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்படப் போகிற அமைச்சரவை, வருகிற தேர்தலுக்குப் பின்னுல்தான் அமைய இருக்கிற அமைச்சரவையைப் பொறுத்ததாகும். வருகிற அமைச்சரவை இதே கட்சியினரைச் சார்ந்ததாக இருந்தாலும் இதே கொள்கையை அவர்கள் பின்பற்றுவார்கள் என்று முன் கூட்டியே எதிர்பார்ப்பது ஜனநாயக முறைக்கு விரோதமானது. ஆகவே இங்கு கூறப்படுகிற குறைபாடுகளை நீக்கவும், கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குமுள்ள வாய்ப்பு இந்த அமைச்சரவைக்கு இருக்க முடியாது என்ற காரணத்தினுல் இது ஒரு சம்பிரதாயமாகத்தான் இருக்க முடியும் என்றுதான் நான் எண்ணுகிறேன். சட்ட ரீதியாக அரசாங்கம் இயங்கவேண்டுமென்பதற்காகத்தான் இந்த அங்கிகாரம் இங்கு கோரப்பட்டிருக்கிறது. ஆகவே நான் பல கோரிக்கைகளை இந்த விவாதத்தின்போது சொல்வதற்கில்லை என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தில் 100 புதுத் திட்டங்கள் என்ற அடிப்படையில் சில திட்டங்களைத் தீட்டியிருக்கிறுர்கள். அவைகளில் தலையாய திட்டம் என்று எல்லோரும் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்து இங்கு உள்ளடக்கிய திட்டம் 65 வயதிற்கு மேற்பட்ட வயோதிகர்களுக்கு, அனுதையாகயிருந்தால் அவர்களுக்கு 20 ரூபாய் கொடுக்கலாம் என்றும், அங்கஹீனர்களாகயிருந்தால் அவர்கள் அனுதையாகயிருந்தால் 60 வயதிற்கு மேற்பட்டால் 20 ரூபாய் கொடுக்கலாம் என்ற திட்டமாகும். அதற்கு ரூ. 2 லட்சம் ஒதுக்கியிருக்கிறுர்கள். இந்த 2 லட்சம் ரூபாய் எந்த அடிப்படையில் ஒதுக்கப்பட்டது, அதற்கு என்ன ஆதாரம், புள்ளிவிவரம் என்று எனக்குத் தெரியவில்லை. ஒன்று மட்டும் தெரிகிறது. என்னவென்றுல், வெல்பேர் ஸ்டேட், சோஷியலிஸ அடிப்படையில் ஆட்சி நடத்துகிறேம் என்று சொல்கிற அரசாங்கத்திற்கு இது ஒரு புரட்சிகரமான சாதனை என்று எண்ணுவதற்கில்லை. ஏகாதிபத்திய நாடுகள் என்று சொல்லப்படுகிற பல நாடுகளில்கூட இது ஒரு பழைய கொள்கையாகி பல ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்டு இதைவிட முற்போக்கான கொள்கைகள் அமுல் நடத்தப்பட்டு வருகிறபோது இதை இப்பொழுதுதான் இங்கு செய்ய முன் வந்திருக்கிறுர்கள் என்றுதான் சொல்லவேண்டுமே தவிர இதை ஒரு பெரிய சாதனையாகச் சொல்வதற்கில்லை. இதைச் செயல்படுத்துவது வருகிற தேர்தலுக்குப் பிறகு வருகிற அமைச்சரவையாக இருந்தபோதிலும், தேர்தல் வருகிற காரணத்தால் வாக்காளர்களிடமும், பொது மக்களிடமும் ஆசைக்காட்டி, உங்கள் பேரில் நாங்கள் அக்கரை கொண்டிருக்கிறேம் என்று சொல்வதற்காகத்தான் இது உட்படுத்தப்பட்டிருக்கிறது. அதேபோன்று அரசாங்கப் பணிமனைகளில் வேலை செய்பவர்களின் குழந்தைகளுக்கும், ஆசிரியர் குழந்தைகளுக்கும்

13th December 1961] [Sri M. P. Subramaniam]

மேல் படிப்பு படிப்பவர்களுக்கு போதிய நிதிவசதி இல்லையென்றால் அவர்களுக்கு கடன் கொடுப்பது என்று 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதையும் ஒரு பெரிய சாதனை என்று சொல்வதற்கில்லை. கூட்டுறவு ஸ்தாபனங்கள் போன்றவை மூலம் கடன் பெற வழியிருக்கிறது. வட்டி இல்லை என்ற ஒரு அம்சத்தைவிட வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. இவ்விரண்டையும் வரும் தேர்தலில் பிரசாரத்திற்குப் பயன்படும் சாதனங்கள் என்ற அளவில் புகுத்தப்பட்டிருக்கிறது. இதுபோன்று கொள்கை அடிப்படையில் செய்கிற காரியங்களை புதிதாக பொறுப்பு ஏற்கிற அமைச்சரவை செய்வதுதான் ஜன நாயக முறைப்படி பொருத்தமாக இருக்குமேதவிர வரயிருக்கிற அமைச்சரவை இப்படித்தான் செய்யவேண்டுமென்று சொல்வது ஜனநாயக முறைக்கு உகந்ததல்ல. இது பிரசாரத்திற்கு சாதகமாகும் என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். நூறு திட்டங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் ந்யூ ஸ்கீம்ஸ் சேர்ப்பது உண்மை. இப்பொழுது சேர்த்திருக்கிற திட்டங்களைப் பார்த்தால் சாதாரண காரியங்களைக்கூட சேர்த்திருக்கிறார்கள். உதாரணமாக ஒன்றிரண்டு கூற விரும்புகிறேன். விவசாயிகள் காட்டிலே கரை போட கற்றுக்கொடுக்க ஒரு திட்டம், இதற்கு ரூ. 1,000 ஒதுக்கியிருக்கிறார்கள். விவசாயிகள் மண் அரிப்பைத் தடுக்க, எப்படி கரை போட வேண்டுமென்று சொல்லிக்கொடுக்க ஒரு திட்டம். மீன் குஞ்சு வாங்கி வளர்க்க, கோழி முட்டை குஞ்சு பொறிக்க இயந்திரம் வாங்க திட்டம். தச்சுக் கொல்லர் கூட்டுறவு சங்கம் வைத்துக்கொள்ள ஒரு திட்டம். ஒரு கிராமத்தில் இரண்டு போலீஸ்காரர் வைத்து அவுட்போஸ்ட் வைக்க ஒரு திட்டம். இப்படி திட்டங்கள் 99 என்று இல்லை, 101 என்றும் இல்லை, 100 திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே இவைகள் பிரசாரத்திற்கு உகந்த வகையில் தான் செய்யப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இங்கு குறிப்பாக கடந்த ஐந்தாண்டு காலமாக மிகமிக வற்புறுத்திக் கூறப்பட்ட ஒரு பிரச்னைக்கு ஒரு பரிகாரமும் தேடப்படவில்லை. சசிவர்ண தேவர் அவர்கள் இங்கு சொன்னார்கள், விலைவாசி ஏற்றத்தைப்பற்றி இரண்டு தரப்பில் உள்ளவர்களும் மறந்து விட்டார்களோ என்று சொன்னார்கள். அப்படி ஒருவரும் மறக்கவில்லை. பத்தாண்டு காலமாக ஒவ்வொரு விவாதத்தின்போதும் சொல்லிச் சொல்லி வற்புறுத்திக்கூறியும் அதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரத்தை இந்த அரசோ அல்லது மத்திய அரசோ காண முடியவில்லை. விலை ஏறிக்கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, ஒரு நிலையில் நிலையான விலைவாசியில்லாத காரணத்தினால் விவசாயிகளுக்கும் அடுத்த ஆண்டு எப்படியிருக்கும் என்று முன்னாலேயே கணித்துக்கொள்ள முடியவில்லை. உதாரணமாக டாப்பியோக்கா பயிர் செய்கிறார்கள். ஐந்து மடங்கு கொண்ட ஒரு மூட்டை இந்த ஆண்டு 2 ரூபாய்க்கு விற்கிறதென்றால் அடுத்த ஆண்டு அது 8 ரூபாய்க்கு விற்கிறது. அதேபோல் வெல்லம் ஒரு சிப்பம் இந்த ஆண்டு 25 ரூபாய்க்கு

[Sri M. P. Subramaniam] [13th December 1961

விற்கிறதென்றால் அடுத்த ஆண்டு 80 ரூபாய்க்கு விற்கிறது. இந்நிலையில் விவசாயிகளும் ஒருவித பலனும் அடைய முடியவில்லை. விவசாயிகள் கொள்ளை அடிக்கிறார்கள், நிறையப் பணம் சம்பாதிக்கிறார்கள் என்று நகரப்புறங்களில் இருப்பவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இந்த விலை உயர்வால் அவர்கள் பலன் பெற முடியவில்லை என்று நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். தீர்க்கப்பட வேண்டிய பெரும் பிரச்னையாகயிருக்கிறது, இந்த விலைவாசிப் பிரச்னை. இந்தப் பிரச்னையைத் தீர்க்க இந்த அரசோ அல்லது மத்திய அரசோ என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள்? அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவுறும்போது அதற்கு முன்னிருந்த வேலையில்லாத் திண்டாட்ட நிலையில் ஏதாவது குறைவு ஏற்பட்டிருக்கிறதா? படித்தவர்கள் மத்தியிலும் படிக்காதவர்கள் மத்தியிலும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? ஐந்தாண்டுத் திட்டம் முடிவுறும்போது முதல் ஆண்டு இவ்வளவு குறையும், அடுத்த ஆண்டு இவ்வளவு குறையும், என்று இப்படி ஏதாவது நிச்சயத்திருக்கிறார்களா என்றால் இல்லையென்றுதான் கூறவேண்டும். ஆக, இந்த இரண்டு பிரச்னைகளும் தமிழகத்தின் ஒரு பெரிய தலைவலிப் பிரச்னைகளாகும். இதற்கு ஒரு நிரந்தர பரிகாரம் காண இந்த அரசால் முடியவில்லை. அடுத்து, 1962-63-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கும்போது, 7 கோடி ரூபாய் துண்டு விழுகிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக்குறைவதையோ அல்லது கூடுதலாவதையோ பார்க்கும்போது, ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத் திட்டத்திலே சொல்வது ஒன்றாக இருக்கும், கடைசியிலே அது வேறு விதமாக முடிவு பெறுவதைத்தான் நாம் பார்க்கின்றோம். தவிர, மத்திய அரசாங்கத்தார் கொடுப்பதாக இருந்த 2·5 கோடி ரூபாய் நிறுத்தப்பட்டதன் காரணமாகத்தான் இந்த நடப்பு ஆண்டிலே துண்டு விழுவதற்கு ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது. இவைகளை நாம் ஏற்கனவேயே எதிர்பார்த்துத்தான் இருக்கிறோம். நிதி மந்திரி அவர்கள் சென்ற ஆண்டிலே ஆற்றிய உரையிலேயே இந்தத் தொகை நிறுத்தப்படலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 2.5 கோடி ரூபாய் நிறுத்தப்படுவதற்கான எண்ணம் இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதனாலே, இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இது ஒரு புதிய கண்டுபிடிப்பு என்று சொல்வதற்கில்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இந்த 7 கோடி ரூபாயை அவர்கள் கேட்டிருப்பதாக இப்போது முடிவு தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இந்த நேரத்திலே நிதிக் கமிஷனின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதனால் நிதி நிலைமையில் மாற்றம் ஏற்படலாம் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு தெம்பகாகத் தெரிகிறது. நமக்குத் தெரிந்த வரையிலே நிதிக் கமிஷன் என்ன செய்ய இருக்கிறது என்பது தெரியும். மத்திய அரசாங்கம் கொடுக்கின்ற மான்யங்களை வைத்துக்கொண்டு, கடனாகவோ, உதவி மானியமாகவோ அல்லது நமக்குரிய பங்கை 2 சதவிகிதம் அல்லது 3 சதவிகிதம் அளவிலே பங்கிட்டுக் கொடுப்

13th December 1961] [Sri M. P. Subramaniam]

பதற்குத்தான் முடியுமே தவிர, வேறு அதிகப்படியாக கிடைத்து விடும் என்று எண்ணுவதிலே பிரயோஜனமில்லை. மத்திய அரசாங் கத்தினுடைய போக்கைப் பார்ப்போமானால், அதிக வருமானம் வரக்கூடிய இனங்களை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக்கொண்டு வருவதைத்தான் இன்றையதினம் பார்க்கின்றோம். அப்படிக் எடுத்துக்கொண்டால், எப்படி நம்முடைய நாட்டிலே வருமானம் பெருகும், நம்முடைய திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற முடியும்? ஆகவே, இன்றைக்கு நம்முடைய ராஜ்ய சர்க்கார் ஏதாவது திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமானால் மத்திய அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுத்தான் நிறைவேற்ற முடியுமேன்ற நம்பிக்கை யில்தான் நாம் இருக்க வேண்டியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்கூட மூன்றிலே இரண்டு பங்கு அளவுக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து கடனாக மானியம் வந்தால்தான் நிறை வேற்ற முடியுமே தவிர, மற்ற வகையிலே எந்த விதமான வழி வகையும் இல்லை. இந்த நிலைதான் நம்முடைய ராஜ்ய சர்க்காருக்கு இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், பல நேரங்களில் பார்த்திருப்பது போல், ஒவ்வொரு ராஜ்யத்திலும் தங்களுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக தங்களுக்குரிய பங்கைக் கேட்கக்கூடிய நிலைமையைத்தான் பார்க்கிறோம். இப்படி மத்திய அரசாங்கத்திடம் மானியம் வாங்குவதிலே தவறில்லை என்று சொல்லலாம். இது எப்படி இருக்கிறது என்றால், அரசாங்கத் தின் நிர்வாக இலாகா எப்படி பணி புரிகிறதோ, அதே போலத்தான் இருக்கிறது. சென்னை அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு ஜில்லாவிற்கும் 2 கோடி, 5 கோடி என்று ஒதுக்கிவிட்டு, அந்த அடிப்படையில் டெவலப்மென்ட் கவுன்சிலில் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ளுங்கள் என்று சொல்வதுபோல் இருக்கிறது. அதே நிலையில்தான் இந்த ராஜ்ய அரசாங்கமும் இயங்கிக்கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். திட்டங்கள் எல்லாம் யோசிக்கப்பட்டு, அந்த அடிப்படையிலே செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப் படுகிறது. ஆனால், புதிதாக ஒரு திட்டத்தைச் சேர்ப்பதற்கு வழி யில்லை. காரணம், ஏற்கனவேயே அவைகள் எல்லாம் யோசிக்கப் பட்டு முடிவு செய்யப்பட்டுவிட்டது. ஆகவே, இப்போது புதிதாக ஒன்றும் சேர்ப்பதற்கில்லை என்று சொல்லப்படுகிறது. அப்படி போடப்படும் திட்டங்கள் யாவும் நம்மையும் கேட்காமல், பாராளு மன்றத்தையும் கேட்காமல் தனியாக ஒரு சில நிபுணர்கள் 5 பேர், 6 பேர் அல்லது 10 பேர்கள் என்று சேர்ந்துகொண்டு, திட்டக் கமிஷன் என்று ஒன்று வைத்துக்கொண்டு, அவர்களால் செய்யப் பட்ட திட்டங்களைத்தான் நிறைவேற்ற முடியுமே தவிர, பாராளு மன்றத்திலோ அல்லது சட்டசபை அங்கத்தினர்களாலோ சொல்லப்படும் திட்டங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை யாவரும் அறிவார்கள். இதை யாவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், இதிலே ஒரு சில பாராளுமன்ற

[Sri M. P. Subramaniam] [13th December 1961]

அங்கத்தினர்களும், பிரதம மந்திரி அவர்களும் அங்கம் வகிப்ப தாகச் சொல்லாம். அது உண்மைதான். இருந்தாலும்கூட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு முழுக்க முழுக்க அதிகாரம் என்பதே இல்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதே நிலையில் இன்னும் நீடித்துக்கொண்டு போனால், இந்த நிலைமையிலே மாற்றம் ஏற்படவில்லை என்று சொன்னால், ஆங்காங்கே பல இடங்களில் கிளர்ச்சிகள் நடத்தத்தான் இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்போது முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தேசிய ஒற்றுமை என்னும் அடிப்படையிலே ஹிந்தியையும், தேவ நாகிரி லிபியையும் நிச்சயமாகத் திணிப்பார்களே தவிர, அது கட்டாயம் நடைமுறைக்கு கொண்டுவரப்படாது என்று சொல் வதற்கான நம்பிக்கை ஏற்படவில்லை. இதைக் குறித்து பல தடவை சட்டசபையிலேயும், வெளியிலேயும் இந்த அரசாங்கத்தின் சார்பாக நிதி மந்திரி அவர்கள் தமிழ் மக்களுக்கு அபயம் கொடுத்து இருந்தபோதிலும்கூட, நடைமுறையிலே இதை நிறை வேற்றுவதற்கு எவ்வித அதிகாரமும், பொறுப்பும் கிடையாது என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்த ராஜ்யத்தைப் பொறுத்த அளவிலே பொறுப்புள்ளவர்கள்தான் உட்கார்ந்திருக் கிறார்கள் என்பதை சட்டரீதியாகச் சொல்லிக் கொள்கிறேன்.

SRI M. P. SUBRAMANIAM: அது எனக்கு நன்கு தெரியும். அங்கே உள்ளவர்கள் இதை நிறைவேற்றித்தான் தீரவேண்டுமென்று சொன்னால், அது காமராஜர் அரசாங்கமாக இருந்தாலும், அல்லது நமது நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களாக இருந்தாலும், எந்த அளவுக்கு முடியும் என்பது எனக்குத் தெரியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அளவிலே நிலைமை இருக்குமானால், இத்தகைய போக்கு நிச்சயமாக ஏற்படாது என்று சொல்வதற்கில்லை. அதற்கு எத்தகைய உத்திரவாதத்தையும் இவர் களால் அளிக்க முடியாது என்பதால், இத்தகைய அபாயம் நிச்சய மாக வராது என்று சொல்வதற்கில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் அத்தகைய அபாயம் வராது என்று ஆறுதல் சொல்வார்களே தவிர, இந்த அபாயத்தைப் போக்குகின்ற வகையிலே அரசியல் சட்டத்திலே நிரந்தரமாக ஒரு மாற்றத்தை இவர்களால் செய்ய முடியாது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கடைசியாக, முக்கியமான ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த ஐந்தாண்டுகளை எடுத்துக் கொண்டாலும் சரி, அல்லது அதற்கு முன்னாலே எடுத்துக்கொண்டாலும் சரி, சட்டசபையிலே உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களும் என்னென்ன சொல்லி இருக் கிறார்கள், அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் பரவாயில்லை, இந்த சட்டசபையிலே உள்ள அங்கத்தினர்கள் கூறுகின்ற ஆலோ

13th December 1961] [Sri M. P. Subramaniam]

சனைகளை சிறிதளவுக்காவது கன்சிடர் செய்திருக்கிறார்களா, அதற்கு ஏதாவது இந்த அரசாங்கம் மதிப்புக் கொடுத்திருக்கிறார்களா அல்லது அதன்பேரில் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா, அல்லது ஏதாவது ஒரு பதிலைத்தான் அவர்களுக்கு அறிவித்திருக்கிறார்களா என்று பார்த்தால், எந்த அளவுக்கும் மதிப்புக் கொடுக்காததைத்தான் நாம் பார்க்கின்றோம். அப்படி யில்லையென்றால், மேடையிலே பேசுவதற்கும், பத்திரிகையிலே எழுதுவதற்கும், இந்த சட்டசபையிலே பேசுவதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? நான் இந்த இரண்டு பக்கத்திலே இருக்கக்கூடிய அங்கத்தினர்களையும் கேட்கிறேன்? நாம் சொல்கின்ற ஆலோசனைகளின்பேரிலே இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இதிலே காங்கிரஸ் அங்கத்தினர்களாக இருந்தாலும் அவர்கள் மனதிருப்தி அடைந்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். 1952-57-ம் ஆண்டிலே இந்த ராஜ்யத்தின் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டின் மந்திரியாக இருந்த ராமநாதபுரம் ராஜா அவர்கள் குறிப்பிட்டார்கள். கனம் அங்கத்தினர்கள் சொல்லக்கூடிய ஆலோசனைகளையெல்லாம் சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கும், அதிகாரிகளுக்கும் அனுப்பி, அவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று ஒரு உத்திரவாதத்தை அளித்தார்கள். அது அப்போதே காற்றோடு போய்விட்டது. பின்னாலே வந்த அமைச்சர்கள் அதைப்பற்றி எவ்வித அக்கறையும் காண்பித்ததாகத் தெரியவில்லை. அதேபோல் ஒவ்வொரு சமயத்திலும் கனம் அமைச்சர் அவர்கள் விவாதங்களுக்கு பதில் சொல்கின்ற நேரத்திலே, கனம் அங்கத்தினர் எல்லோரும் பல அரிய ஆலோசனைகளையெல்லாம் சொல்லி இருக்கிறார்கள், ஆனால் நேரம் இல்லாத காரணத்தால் அவைகள் ஒவ்வொன்றையும் பற்றிப் பேச முடியவில்லை, ஆனால் அவைகள் ஒவ்வொன்றுக்கும் மதிப்புக் கொடுக்கப்படும் என்று சொல்வது சம்பிரதாயமான பேச்சாகத்தான் இருந்து வருகிறது. இப்படிப் பேசப்படுகிறதே தவிர, இந்தந்த இனங்கள் சரி, இவைகள் தவறு என்று சொல்வதற்குக்கூட எண்ணம் ஏற்படுவதில்லை. அப்போது, சட்டசபை அங்கத்தினர்களுக்கு என்ன மரியாதை இருக்கிறது. மேடையிலே பேசுவதற்கும், பத்திரிகையிலே எழுதுவதற்கும், சட்டசபையிலே பேசுவதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேடையிலே பேசுவதாக இருந்தாலும், பத்திரிகையிலே எழுதுவதாக இருந்தாலும்கூட ஓரளவுக்கு மரியாதை கொடுக்கப்படுகிறது. இங்கு எவ்வித மதிப்பும் கொடுக்கப்படவில்லை என்பதை எடுத்துக் கூறினால், அதை எந்த சட்டசபை உறுப்பினர்களும் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். அதைப் போலவே தான், ஒரு அங்கத்தினர் தன் தொகுதியிலே உள்ள தனிப்பட்ட பிரச்னையைக்கூட குறிப்பிடாமல், பொதுப் பிரச்னையைப்பற்றி குறிப்பிட்டு கேட்டாலும், எழுதினாலும் அது சரியா, தவறா அல்லது நடவடிக்கை எடுக்க முடியுமா, முடியாதா என்ற தகவலைக்கூட இந்த அரசாங்கம் தெரிவிப்பதில்லை. அப்படி உயர்தர அதிகாரி

[Sri M. P. Subramaniam] [13th December 1961]

களும்கூட நடந்துகொள்கிறார்கள். இதைத்தான் கடந்த 5 அல்லது 10 வருஷங்களாக இந்த ஜனநாயக ஆட்சியிலே நாம் காண்கிறோம் என்பதை குறிப்பாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் ராமையா அவர்கள் என்னுடைய தொகுதிக்கு சுமார் 1½ அல்லது 2 வருஷத்திற்கு முன்னால் சுற்றுப் பிரயாணம் வந்தார்கள். அப்போது சுமார் 1,400 மகஜர்களை அங்குள்ள மக்கள் அமைச்சரிடத்திலே கொடுத்தார்கள். இதிலே பல பிரச்னைகள் அடங்கியிருந்தது. அதிலே குறிப்பாக, நீர்ப்பாசன வசதியைப்பற்றி 120, 150 மகஜர்கள் கொடுக்கப்பட்டன. அவைகள் ஒன்றும் கிருஷ்ணா, கோதாவரி போன்ற திட்டங்கள் அல்ல. 1, 2, அல்லது 5 லட்சம் செலவுக்குள் உள்ள திட்டங்கள் அவை. இந்தத் திட்டங்களை இன்வெஸ்டிகேட் செய்வதற்காக ஒரு டிவிஷன் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்பட்டது. இரண்டு வருஷங்களுக்கு மேலாகியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. நடவடிக்கை எடுக்கப்படுமா, எடுக்கப்படாதா என்றுகூட பதில் தெரிவிக்கவில்லை. அந்த நிலையிலேதான் இன்றைக்கு நிர்வாகம் இயங்கிக் கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போலவே, இறுதியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாகவே, இந்த அரசாங்கத்திலே பணியாற்றுகின்ற எல்லோரும் குறிப்பாக, கீழ்மட்டத்திலே வேலை செய்யக்கூடிய சிப்பந்திகளை எடுத்துக்கொண்டால், மிகவும் மோசமான நிலையிலேதான் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். சாதாரணமாக, கிராமப்புரத்திலே உள்ளவர்களை அதுவும், 60, 70 வயதானவர்களைக் கேட்போமேயானால், 10, 15 ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட, இப்போது நிர்வாகம் எப்படி இருக்கிறது என்று கேட்டால், நிச்சயமாக மிகவும் மோசமான நிலைமையை அடைந்திருக்கிறது என்று சொல்வதைப் பார்க்கலாம். இப்படி திறமைக் குறைவாக இருப்பதோடு மட்டுமல்ல, நாணயமற்றவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதை, சாதாரணமாக கிராமத்திலே அதிகாரிகள் மத்தியிலே பழக வேண்டிய நிலையிலே உள்ளவர்களைக் கேட்டால், நன்கு தெரியும். அந்த வகையிலே திறமையும், நாணயமும் அற்ற நிலைமையிலேதான் இன்றைய நிர்வாகம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, எல்லா இடங்களிலும் பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன்கள் எல்லா இடங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் பணி புரிகிற கமிஷனர், மற்ற அதிகாரிகளுடைய நிலைமையைப்பார்க்கப் போனால், அவர்களிடையே ஆளுகின்ற கட்சிக்கு தனிப்பட்ட முறையிலே பிரசாரம் செய்யவேண்டும், துணை செய்யவேண்டும், அப்பொழுதுதான் வருங்காலத்தில் 'ப்ரமோஷன்' முதலிய சலுகைகள் கிடைக்கும் என்ற மனப்பான்மை உண்மையிலேயே உருவாக்

13th December 1961] [Sri M. P. Subramaniam]

கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் அவர்களுடைய பணிகள் அமைந்திருக்கின்றன என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு மாறுன மனப்பான்மை உடையவராக இருந்தால், அங்கே உள்ள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரிய மனிதர்கள் அந்த அதிகாரிகளுக்கு தொல்லை கொடுத்து, அவர்கள் அதன் மூலம் வேறு இடங்களுக்கு மாற்றப்படுகிற நிலைமையைத்தான் பார்க்கிறோம். அந்த ஆள் பெயரை வேண்டுமானுலும் சொல்லுவேன். ஆனல் அவருக்குத்தான் ஆபத்து. ஏனென்ருல் அவர் காங்கிரஸுக்கு எதிர்ப்பு மனப்பான்மை உள்ளவர், இந்தக் கட்சியை சார்ந்தவர் என்று தெரிந்துகொண்டு அவருக்கு தொல்லை வரக்கூடிய நிலைமை ஏற்படும். அவருக்கு அதனல் நன்மை செய்வதை விடுத்து, தீமை செய்தவனுய் விடுவேன். ஆகவே, ஆளைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. ஆனல் அந்த மாதிரி நிலைமை நிச்சயம் இருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே, என்னைப் பொறுத்தவரையிலே, சட்டசபையிலே அங்கத்தினர்கள் கூறியிருக்கிற எந்த ஆலோசனைகளும் பின்னுலே நடைமுறையிலே பரிசிலனை செய்யப்பட்டு, செயல்படுத்தப்பட வில்லை, இப்பொழுது இருக்கிற அமைச்சர் அவையினல் முடியாத காரணத்தினல். பொதுவாக சொல்லப்போனல், நாட்டு மக்களுக்கு இருக்கக்கூடிய தலையாய பிரச்னைகள் கிஞ்சித்தேனும் தீர்க்கப்பட வில்லை என்பதைச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

SRI K. ANBAZHAGAN: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற இடைக்கால நிதிநிலை அறிக்கையைக் குறித்து என்னுடைய கருத்துக்களை கூறு வதற்கான வாய்ப்பு பெற்றிருப்பதற்காக மகிழ்கிறேன். இடைக் கால நிதிநிலை அறிக்கை என்று சொல்லவேண்டிய எனக்கேகூட தேர்தல் நிதிநிலை அறிக்கை என்ற கருத்து தோன்றுகிறது என்று சொன்னுல், ஒரு வேளை என்னுடைய தடுமாற்றம் அரசாங்கத்தி னுடைய எண்ணத்தை வெளிப்படுத்துகிறதோ என்று அஞ்சு கிறேன். அதுமட்டுமல்ல. உண்மையாகவே, இந்த அறிக்கை தேர்தல் காலத்து அறிக்கை . . . (கனம் ஸ்ரீ. ஸி. சுப்பிரமணியம்: அந்த எண்ணமே ஊறிப்போய்விட்டது.) அந்த எண்ணமே ஊறிப் போய்விட்டது என்று அமைச்சர் தெரிவிக்கிருர்கள். எங்களிடை யே அந்த எண்ணத்தை ஊற வைக்கிற வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது. அது மட்டுமல்ல. இந்த நிதிநிலை அறிக்கை வெளி யிடப்பட்டிருப்பது குறித்து பல்வேறு கட்சியைச் சார்ந்த நண்பர் கள் இங்கு பேசிய பின்னர், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் ஏதோ இது தேர்தலுக்காக தயாரிக்கப்பட்ட அறிக்கை என்று எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுகிருர்கள்; தேர்தலுக்காக அல்ல இந்த அறிக்கை, நாட்டை வளப்படுத்துவதற்காக என்று வாதாடுகிருர்கள். ஆனல், ஒரு அம்மையார் பேசும்பொழுது கூறினர் என்று கருதுகிறேன். இந்த அறிக்கையை குறித்து பேசும்

[Sri K. Anbazhagan] [13th December 1961

பொழுது 'வருகிற தேர்தலில் தங்களுக்கு எப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமோ என்ற காரணத்தினல் எதிர்க்கட்சிக்காரர்கள் நாடி நரம்புகள் எல்லாம் தளர்ந்து போய்விட்டன' என்று கூறினர்கள். எதிர்க் கட்சிக்கு ஏற்படுகிற பலகீனத்தை எப்படியோ கண்டு பிடித்து விடுகிருர்கள். நான் அதற்காகப் பாராட்டுகிறேன் அவர்களை. ஆனல், அதே நேரத்தில், இந்த நிதிநிலை அறிக்கை இன்றையதினம் தயாரிக்கப்பட்டிருப்பது இடைக்காலத்தில் 'கேர் டேக்கர் கவர்ன்மெண்டு' என்ற முறையில். இப்பொழுது இருக்கிற அரசாங்கத்தைத் தொடர்ந்து நடத்திச் செல்லுவதற்கு வழி வகுக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினல் அமைக்கப்படுகிற அறிக்கை என்ற முறையில் இது அமைந்திருக்கு மானல், இந்த அறிக்கையிலே புதிய திட்டங்களைப்பற்றிய கருத் துக்கள் வந்திருக்கத் தேவையில்லை. அதிலும் நமது நிதி அமைச்சர் அவர்கள் 10 ஆண்டு அமைச்சராக இருந்தவர்கள். ஏற்கனவே தேர்தலை சந்தித்தவர். மறுபடியும் தேர்தலை சந்திப்பதற்குத் தயாராக இருப்பவர். சென்ற பிப்ரவரி திங்களில் அவர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிருர்கள் நிதி அமைச்சராக இருந்து. மறுபடியும் இப்பொழுது ஒரு அறிக்கை வந்திருக்கிற நேரத்தில் புதிய திட்டங்களை அமைச்சர் அவர்கள் சேர்த்திருக்கிருர்களே, இது எதைக் காட்டுகிறது என்று கேட்கிறேன். பிப்ரவரி திங்களில் தேர்தல் வருகிறது என்று அமைச்சர் அவர்கள் நமக்குத் தெரிவிக் கிருர். மார்ச்சில் புதிய சட்டசபை கூட இருக்கிறது என்று அமைச்சர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். ஏற்கனவே ஆண்டுதோறும், மார்ச் திங்களில் நிதிநிலை அறிக்கை வழங்கப்படு கிறது என்பதும் அவர்களுக்குத் தெரியும். வருகிறவர்கள் புதிய திட்டங்கள் தீட்டலாம் என்றும் அவர் தாராளமாக ஒப்புக்கொண் டிருக்கிருர்கள். என்றாலும், பல புதிய திட்டங்களை இன்றைய தினம் வகுத்திருக்கிருர்கள். என்ன காரணம்? ஒரு வேளை முதி யோருக்கு உதவித் தொகை இந்த ஜனவரியில் தருகிருர்களோ என்று எண்ணிப்பார்த்தேன். படித்துப் பார்த்ததில் எப்ரலுக்குப் பின்னலே அது வருமே ஒழிய, ஜனவரியில் அந்தத் தொகை தரப் படப்போவதில்லை என்று தெரிகிறது. ஆசிரியர்கள் குழந்தை களுக்கும், அதேபோல் அரசாங்கப் பணியாளர்களின் குழந்தை களுக்கும் தொழில் கல்வி பயிலுவதற்கு அவர்களுக்கு கடன் தொகை கொடுத்து உதவி செய்யப்படும் என்ற ஒரு கருத்து வந்தது. இந்தக் கடன் தொகை ஜனவரித் திங்களிலிருந்து தேவைப்படுகிறதா என்று பார்த்தால், தேவைப்படுவது ஜுன், ஜுலை மாதத்தில்தான். நூறு திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொன்னர்கள். ஒரு வேளை ஜனவரியில் 100 திட்டங்கள் வருகின்றனவா என்று பார்த்தால், எப்ரல் மாதம், மே மாதம் என்று ஆரம்பித்து சொல்லிக்கொண்டே போனல், அடுத்த ஆண்டு இறுதி யில்கூட இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகிற நிலைமை ஏற்பட லாம்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இவைகள் 1962-63-க் கான திட்டங்கள்.

13th December 1961]

SRI K. ANBAZHAGAN: 1962-63-க்கான திட்டங்களைப்பற்றி இப்பொழுது அமைச்சர் சொல்லுகிறார். உண்மையாகவே காங்கிரஸ் கட்சி ஏழை மக்களைக் காப்பாற்றுகிறது, முதியோர்களைக் காப்பாற்றுவதிலே மிக அதிக அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுவதற்காகத்தான் இந்தத் திட்டங்கள்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அக்கரை இப்பொழுதாவது பிறந்ததற்காக, வருகிற தேர்தலை நான் வாழ்த்துகிறேன். 1962-ம் ஆண்டு பிப்ரவரி தேர்தல் நல்லெண்ணத்தை ஆட்சியாளர்களிடத்தில் உண்டாக்கியிருக்கிறது. இந்தத் தேர்தல் ஆண்டுக்கு ஒரு முறை வரக்கூடாதா என்று ஆசைப்படுகிறேன். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் வருமானால், பல நல்ல காரியங்களை ஆட்சியாளர் சற்று சுறுசுறுப்போடு செய்வார்கள். அதுமாத்திரம் அல்ல. இந்த அறிக்கையில் மிகத் தெளிவாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள், ஏறத்தாழ 6 கோடி சொச்ச ரூபாய் துண்டு விழும் என்று. பட்ஜெட் 1961-வது ஆண்டு பிப்ரவரித் திங்கள் நம்மிடையே வழங்கப்பட்டபொழுது தெரிவிக்கப்பட்ட கணக்குப்படி ஏறத்தாழ 2 அல்லது 2½ கோடி ரூபாய் அளவுக்குத்தான் துண்டு விழும் என்று தெரிவித்தார்கள். ஆனால், அன்றையதினம் துண்டு விழுகிற தொகை எதனால் விழுகிறது என்று தெரிவிக்கும் பொழுது, துண்டு விழுகிற தொகைக்குக் காரணம், சர்க்கார் ஊழியர்களுக்கு அதிகச் சம்பளம் தருவதை ஈடு கட்டுவதற்காக மத்திய சர்க்கார் கொடுத்துக்கொண்டிருந்த ரூ. 2½ கோடி தருவதற்கு முடியாது என்று தெரிவித்துவிட்டதுதான். அவர்கள் அப்படி தராத காரணத்தினால் ரூ. 2½ கோடி துண்டு விழுகிறது. அந்த ஆண்டுக்கு துண்டு விழும் தொகை ஏறத்தாழ ரூ. 6½ கோடி. அது மாத்திரமல்ல. அடுத்த ஆண்டுக்கு ரூ. 6·96 என்ற வகையிலே ஏறத்தாழ 7 கோடி ரூபாய் துண்டு விழும் என்று தெரிவிக்கிறார். அமைச்சர் அவர்கள் இதற்குச் சொல்லுகிற காரணம் ஊழியர்களுக்கு கொடுத்த சம்பள உயர்வை சரிக்கட்ட தர இருந்த தொகையை மத்திய சர்க்கார் நிறுத்திவிட்டதுதான். துண்டு விழுவது அதிகமாவதற்கு அதுதான் காரணம் என்று தெரிவிக்கிறார். பிப்ரவரியில் அந்தக் காரணத்தைத் தெரிவித்து, பட்ஜெட் அமைக்கப்பட்ட பின்னர் துண்டு விழுவது அதிகமாகிறது. புதிய காரணங்களைக் கண்டு பிடித்துத் தெரிவிக்கவேண்டும். புதிய காரணங்கள் திட்டத்திற்காக அதிகத் தொகை செலவழிக்கிறோம் என்பதுதான். அந்த ஒரு காரணத்தைத் தவிர, இப்படி துண்டு விழுகிற தொகை அதிகமாகிக்கொண்டே போனால், புதிய அரசாங்கத்தில் யார் வேண்டுமானாலும் வர இருக்கிறார்கள், ஒரு வேளை அமைச்சர் அவர்கள் வரவில்லை, இன்றையதினம் இருக்கிற நிதி அமைச்சர் அவர்கள் வரமுடியாது என்று கருத்துப்பட தெரிவித்துவிட்டாலும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் வந்தாலும், அவர்களுக்கு அந்தப் பொறுப்பு அதிகமாகிறது. அம்மாதிரி பொறுப்பு அதிகமாகிறபொழுது, மத்திய சர்க்காரிடமிருந்து உதவித் தொகையை போராடி பெற்றால் தவிர, ஈடு கட்ட முடியாது. அதையும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை

நான் வரவேற்கிறேன். ஆனால், அப்படி குறிப்பிட்டிருக்கிற பொழுது அதில் இருக்கிற கருத்து, அவர் மிகச் சுருக்கமாக அதை வலியுறுத்திச் சொல்ல முடியாமல் தெரிவித்திருக்கிறார். மத்திய சர்க்கார் அமைந்திருக்கிற நிதிக் குழு இந்தப் பிரச்சனைகளையெல்லாம் ஆராய்ந்து, மாநிலத்தினுடைய வருவாய் சுருங்கிப் போவதையும், மத்திய சர்க்கார் வருவாய் பெருகி வருவதையும் கணக்கிட்டுப் பார்த்து, மாநிலத்தின் அடிப்படைத் தேவைகள் வளர்ந்து வருகிற காரணத்தினால், அதிகத் தொகை தருவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம் என்று தெரிவித்தார்கள். அதிலே இருக்கிற அநீதியை அமைச்சர் அவர்கள் கண்டித்திருக்க வேண்டும். எல்லா வரி இனத்தையும் மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்ளுவது மாநில சர்க்காரின் அதிகாரத்தைப் பறிப்பதாகும். மாநில சர்க்கார் அதிகாரங்களையெல்லாம் மத்திய சர்க்கார் மேற்கொண்ட பின்னர், நாம்கூட ஏதோ 60-65 வயது முதிர்ந்தவர் போல் அவர்களிடம் உதவி கேட்கவேண்டிய அவசியத்திற்கு இந்த சர்க்கார் கொண்டுவந்து வைக்கப்படுகிறது. உதவி கேட்கிற பொழுது சில நேரத்தில் நியாயம் கிடைக்கலாம், பல நேரத்தில் நியாயம் கிடைக்கத் தவறலாம். போராடுவதற்கு வாய்ப்பும், அந்தப் பங்கு கிடைக்கவேண்டும் என்று கேட்பதற்கு உரிமையும் நமக்கு இருந்தாலும்கூட, வலியுறுத்த முடியாமல் போகலாம். ஆகவே, இப்படிப்பட்ட வரிகளெல்லாம் மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்கப்படுவதற்குப் பதில், மாநில அரசாங்கத்தினிடம் இருப்பதுதான் சிறந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மாநில அரசாங்கம் அந்த வரிகளுடைய வரவு செலவை வைத்திருக்குமானால், அந்த வரிகளிலே ஒரு பங்கை மத்திய சர்க்காருக்கு தருமானால், அது இதைவிடச் சிறப்பானது. இடையிலே இருக்கிற மாநில சர்க்கார், உண்மையிலேயே சமஷ்டி முறை என்று சொன்னாலும் சரி, சுய ஆட்சி முறை என்று வாதத்திற்குப் பேசுகிற அமைச்சர் சொல்லுகிற மாதிரி அந்தவிதப்படி எடுத்துக்கொண்டாலும் சரி, மாநில சர்க்கார் அத்தனை வரிகளையும் வசூலிக்க வேண்டும், அதிலே பங்குத் தொகை மத்திய சர்க்கார் கேட்டுப் பெறவேண்டும், அந்த முறை நீடிக்கவேண்டும், வளரவேண்டுமே தவிர, எல்லா வரி இனத்தையும் மத்திய சர்க்கார் மேற்கொண்டு 'உங்களுக்கு இவ்வளவு பங்கு, நீங்கள் நிலவரியை வசூலித்துக் கொள்ளுங்கள், விற்பனை வரியை வசூலித்துக்கொள்ளுங்கள், வருமானம் வளருகிற வரித்துறைகளெல்லாம் எங்களிடம் இருக்கட்டும்' என்று மத்திய சர்க்கார் சொல்லிவிட்டு, அதற்குப் பின்னர் நிதிக் குழு நியமித்து அதிலே ஒரு பங்கு நமக்குத் தருகிற நிலைமை இருக்குமானால், இன்றைக்கு இந்த மாநிலத்தினுடைய நிதிநிலை அறிக்கையை கொடுக்கிறபொழுது, துண்டு விழுகிற அறிக்கையைத் தான், மத்திய சர்க்காரை கெஞ்சிக் கேட்கிற அறிக்கையைத்தான்
11-30 a.m. படிக்க முடியுமே தவிர, நம்முடைய உரிமையை நிலைநாட்ட முடியாது. அதுமட்டுமல்ல. ஏற்கனவே மத்திய சர்க்கார், அமைச்சர் பேசியதை, இரண்டு வரிகளைப் படித்துக் காட்ட விரும்புகிறேன். மத்திய சர்க்கார் அமைச்சர்தான் என்றாலும்,

13th December 1961] [Sri K. Anbazhagan]

சுய ஆட்சி முறையை உணர்ந்தால், அவர் தெரிவித்திருக்கிறார். மத்திய சர்க்காரிடம் வரவர அதிகாரங்களும், அலுவல்களும் குவிந்த வண்ணமாக இருக்கின்றன. இது மக்களுக்கும் கெடுதல், சர்க்காருக்கும் கேடானது; இது ஜனநாயக போக்குக்கே வெடி வைக்கக்கூடியது என்று தெரிவித்திருக்கிறார். அந்தக் கருத்து அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுக்கும் உடன்பட்ட கருத்தாகத் தான் இருக்கும் என்று நம்புகிறேன். அந்தக் கருத்தோடு அவர்கள் டெல்லிக்குச் சென்றால், அது நாட்டின் நன்மைக்குப் பயன்படுமே தவிர, அந்தக் கருத்தை மறந்துவிட்டு மத்திய சர்க்காருக்கு அவர்கள் சென்றால், பண்டித நேருவின் அன்பும் ஆதரவும் பெற்று அவர்களை ஒரு அமைச்சராக உட்காரவைத்தாலும், அப்படிப்பட்ட உயர்ந்த இடம் கிடைத்தாலும், அந்தக் கருத்து உள்ளத்திலிருந்து நழுவி விடுமேயானால், ஏறத்தாழ டெல்லிக்குப் போகிறவர்களுக்கு ஏற்படும் "நான் சுல்தான்" என்கிற மனப்பான்மை ஏற்படுமே யானால், நாம் இருக்கிறது ஆட்சி பீடம் என்ற எண்ணம் ஏற்படுமே யானால், நீதி கிடைக்காது. அங்கே போகிறவருக்கு நான் சொல்லக் கூடியது, அவர்கள் செல்கிற இடத்தில் இந்தக் கருத்தை வலியுறுத்தி, வற்புறுத்தினால்தான், இங்கே படித்த நிதிநிலை அறிக்கை எதிர் காலத்தில் பயனுடையதாக இருக்கும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோலத்தான் அமைச்சர் எவ்வளவோ திட்டங்களைப் பற்றிச் சொல்லியிருந்தாலும், வரி போடுவதைப்பற்றிச் பேசவில்லை. இது அதற்கு சந்தர்ப்பம் இல்லை என்று போலும். இது டிசம்பர் மாதம் என்று சொல்லலாம்; வருகிற மாதங்கள் ஜனவரி, பிப்ரவரி என்றும் எனக்குத் தெரியும். ஆகவே, வரி போடுவதுபற்றிப் பேச வில்லை. ஆனால், அரசாங்கம் வரி போடுவதற்கு வழி செய்யாமல் இருக்கிறதா என்று பார்த்தால், எத்தனையோ வரிகளுக்கு வழி செய்துகொண்டு இருக்கிறது. அந்த வரி தேவையா, இல்லையா என்பது என் கருத்தல்ல, வாதம் அல்ல. மாநில அரசாங்கம் எத்தனையோ வரிகள் போடலாம். ஆனால், அவர்களே வரிகள் போடாவிட்டாலும், மாநிலத்தில் இருக்கும் பல்வேறு நகராட்சி மன்றங்கள் மூலம், பஞ்சாயத்து யூனியன்களின் மூலம், இன்னின்ன வகையான வரிகள் போடுங்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஸெஸ்களை ஏற்படுத்துவதன் மூலம். ஒவ்வொரு முனிசிபாலிடி களுக்கும், அதேபோல ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் உங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள் என்று தெரிவித் திருக்கிறார்கள். ஆறு மாதங்களுக்கு முன்பு, எட்டு மாதங்களுக்கு முன்பு கல்விக்காக இருக்கும் ஸெஸ் ஒரு சதவிகிதமாக இருந்ததை மூன்று சதவிகிதம் உயர்த்தி, வீட்டு வரியிலே, சொத்து வரியிலே உள்ளதாகச் செய்து கொள்ளுங்கள் என்று தெரிவித்திருக்கிறார் கள். மறுபடியும் அரசாங்கத்தார் தெரிவித்தார்கள், மூன்று சத விகிதம் இல்லை, ஐந்து சதவிகிதம் உயர்த்துங்கள் என்று பல இடங்களில் நகராட்சி மன்றங்களிலே அதிகப்பட்ட வரிகளை போட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை பலர் அறிவார்கள்.

[Sri K. Anbazhagan] [13th December 1961]

அதிலேயும் நகராட்சி மன்றம் அதிகமாக சுகாதார வசதிகள் செய்ய வேண்டுமென்ருல், 26 சதவிகிதம் வரி போடுகிருர்கள். அப்படிப் போட்டிருக்கிறபோது, வருமானத்தின் மீது, சொத்தின் மீது, நகராட்சி மன்றங்கள் 5 சதவிகிதம் உயர்த்த வேண்டுமென்ருல், அதை அரசாங்கமே தெரிவித்ததால், அரசாங்கம் போடும் வரி அல்லவா? நகராட்சி மன்றங்களைத் தூண்டிவிட்டு வரிபோட வைத்து, அதன் மூலம் வரும் பணத்தைக்கொண்டு நகராட்சித் திட்டங்களை நிறைவேற்றுங்கள் என்று அரசாங்கம் ஆலோசனை தெரிவித்திருக்கிருர்கள். இது அரசாங்கம் போடும் வரிதான்; அரசாங்கத்தின் ஆதரவு பெற்று விதிக்கும் வரிதான். நிதி அமைச்சர் போடவில்லை என்று சொன்னுலும், வரி போட வழி வகுத்து, ஆதரவும் தருகிருர்கள். இந்த அரசாங்கம் வரிபோடாமல் இருக்கக்கூடிய அளவுக்கு வளம் பெற்ற அரசாங்கமும் அல்ல, வேறு வழி கண்ட அரசாங்கமும் அல்ல.

அது மட்டுமல்ல. இங்கே பேசிய நண்பர் ஒருவர் பஞ்சாயத்து யூனியனில் திராவிட முன்னேற்றக் கழகத்தார் இருந்தால் அதிகமாக வரி போடுகிருர்கள், அப்படிப் போட்டுவிட்டு, அரசாங்கம் தான் அப்படிப் போடச் சொல்லியிருக்கிறது என்று தெரிவிக்கிருர்கள் என்று சொன்னுர்கள். அமைச்சருக்குத் தெரிவிக்கிறேன், அப்படிப் போடும் வரி ஏதாவது தவருக இருந்தால், தயவுசெய்து, அதை நிறுத்தி விடுங்கள், உத்தரவு போடுங்கள்; "நீங்கள் 10 சதவிகிதத்திற்கு மேல் வரி போடக்கூடாது, அல்லது 5 சதவிகிதத்திற்கு மேல் போடக்கூடாது" என்று சர்க்கார் தெரிவிக்கட்டும். அதற்கு மாருக, இதுவரையிலும் இன்னின்ன வரி போட்டு இன்னின்ன காரியங்கள் செய்யலாம் என்று ஆலோசனைகள் கொடுத்துவிட்டு, வரி போட்டவுடனே, அதை திராவிட முன்னேற்றக் கழகத்தார் செய்கிருர்கள் என்று குற்றம் சாட்டுவதும், அனுமதி கொடுத்துவிட்டு, தாங்களே அதை மறுத்துப் பேசுவதும் அழகல்ல. வரி போடச் சொல்லி, போட முடியாது என்று கடலூர் நகராட்சி மன்றம் விண்ணப்பம் அனுப்பியிருக்கிருர்கள். நகராட்சி மன்றங்களால் தெரிவிக்கப்படும் வரிகளை பொதுமக்கள் தாங்கமாட்டார்கள். அந்த நகராட்சி மன்றங்களுக்கு அரசாங்கம் ஈட்டுத் தொகை கொடுக்கவேண்டும்; மோட்டார் வெஹிகில்ஸ் டாக்ஸ் மூலமாக ரோடு வசதி செய்ய என்பதற்காக கொடுக்க வேண்டிய தொகை, 1929-ல் தீர்மானிக்கப்பட்டது. அதை மாற்றித் தீர்மானிக்கப்படாததால், எத்தனையோ நகராட்சி மன்றங்கள் இன்றையதினம் திண்டாடுகின்றன, வருமானம் இல்லாமல், அரசாங்கம் பங்குத் தொகையை அளிக்காததால். அவைகளை அளிக்க அமைச்சர் வழி கண்டு இருக்கவேண்டும். பத்தாண்டுக் காலத்தில் அமைச்சர் 1929-ல் தீர்மானித்த அந்த விகிதாசாரத்தை மாற்றி அமைக்கவில்லை; பத்தாண்டு கால அனுபவம் கிடைத்திருந்தும் அதைச் செய்யவில்லை. அமைச்சருக்கு கோவையில் வரவேற்பு, கும்பகோணத்தில் வரவேற்பு கிடைக்கிறது. ஆனுல், நகராட்சி மன்றங்கள், தங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள,

13th December 1961] [Sri K. Anbazhagan]

அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான பங்கை அவர்களுக்குக் கிடைக்கச் செய்யவில்லை அமைச்சர் என்று வருத்தத்தோடு தெரிவிக்கிறேன்.

அதே போல, சென்னை நகரத்தில் ஏறத்தாழ மத்திய சர்க்கார் ஊழியர்கள், லட்சக்கணக்கில் என்று இல்லாவிட்டாலும், ஆயிரக் கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மத்திய சர்க்கார் ஊழியர்கள், மத்திய சர்க்காருடைய அலுவலகங்கள் இங்கே இருக்கிற காரணத்தால், நல்ல உதவிகள், வாய்ப்புகள் பெற இந்த நகரம் "ஏ" பிரிவு நகரமாக உயர்வு பெறுமானால், அவர்கள் அவற்றைப் பெறமுடியும். ஆனால், இதை மத்திய சர்க்கார் "ஏ" பிரிவு நகரமாக ஏற்றுக்கொள்ளவில்லை. பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அகில இந்திய ரீதியில் பார்த்தபொழுது, 15 லட்சம் மக்களைக் கொண்டிருந்தால் "ஏ" பிரிவு நகரமாக ஏற்றுக் கொள்கிறோம் என்றார்கள். ஆனால், இங்கே 13, 14 லட்சம் மக்கள்தான் இருந்தார்கள் என்பதால், சென்னை நகரம் விடப்பட்டு விட்டது. பதினேழு லட்சம் மக்கள் பம்பாயில் இருந்ததால், அது "ஏ" பிரிவு நகரமாக்கப்பட்டது. மறுபடியும் அதுபற்றித் தீர்மானித்தார்கள். அப்பொழுது, கல்கத்தா இடம் பெறுகிறது; பம்பாய் முன்பே இடம் பெற்றுவிட்டது. ஏழு ஆண்டுகளுக்கு முன்பு டில்லி நகர ஜனத்தொகை 17 லட்சம்தான்; ஆனால், அது அகண்ட, விரிந்த டில்லியாகி, பக்கத்து வட்டாரங்களும் சேர்க்கப்பட்டு, ஏறத்தாழ 22 லட்சம் ஜனத்தொகை என்று கணக்குப் போட்டு, அதுவும் "ஏ" பிரிவு நகரமாக்கப்பட்டுவிட்டது. பம்பாய் அகண்ட பம்பாய், "பிக் பாம்பே" ஆகி, "ஏ" பிரிவாகிவிட்டது. ஆனால் சென்னை நகரம் சுருங்கிய நகரமாக்கப்பட்டது. சென்னை நகரை நகராட்சி மன்ற அளவில் மட்டும் கருதி, அந்த அடிப்படையில் மக்கள் தொகையைக் கருதி, இதிலே இருக்கும் மக்கள் தொகை 17½ லட்சம்தான், 20 லட்சம் என்று இல்லை, எனவே இதை "ஏ" பிரிவாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு வேண்டுகோள் விடப்பட்டது; காங்கிரஸ் கட்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இருந்தாலும் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதைவிட வேதனைப்படக்கூடிய, வருத்தப்படக்கூடிய, கண்டிக்கக்கூடிய நிகழ்ச்சி வேறு என்ன இருக்க முடியும்? நிதி அமைச்சர் சட்ட மன்றத்திலே ஆளும் கட்சித் தலைவராக இருப்பதாக மட்டுமின்றி, நாட்டு மக்களுக்கு பிரதிநிதியாக இருக்கிறார்கள் என்பது உண்மையானால், "ஏ" பிரிவாக சென்னை நகரத்தை ஏற்றுக்கொள்ள தாக்கீது அனுப்பியிருக்க வேண்டும். சட்ட மன்றத்திலே தீர்மானம் கொண்டுவந்து, "நீங்கள் சென்னைக்கு உயர்வு அளிக்க வேண்டும் என்று ஆதரவு அளியுங்கள்" என்று கேட்டிருக்க வேண்டும். இப்படிப் பேசும் நேரத்தில், நிதி அமைச்சர் சிந்திக்கிறார்; "நம் மாநிலத்தில் இந்தப் பிரச்சினையில் தலையிடாமல் இருந்து விடுவோம்; மத்திய சர்க்கார் "ஏ" பிரிவு ஆக்கினால், மாநில சர்க்கார் ஊழியர்களும் தங்களுக்கும் அம்மாதிரியாக வேண்டுமென்றால், அந்தக் கண்க்குக்கு எங்கே போவது. நாம் இருக்கிற வரையில் அதிகக் கடன் இல்லாமல்

வைத்துவிட்டுப் போகலாம். இதில் தலையிடாமல், புகாருக்கே இடம் இல்லாமல் செய்துவிடலாம்" என்று. இதை நான் குறிப்பிட விரும்புவது ஏன் என்றால், நம் மாநிலத்திற்கு இதில் தலையிட உரிமை உண்டு. பல பிரச்சினைகளிலும் நம் மாநிலம் பெறவேண்டிய உரிமைகளைப் பெற இந்த அரசாங்கம் தவறியிருக்கிறது என்பதைக் காட்டவே. சென்னை நகரம் "ஏ" பிரிவு ஆனால், மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு வசதிகள் ஓரளவுக்குக் கிடைக்கும்; நம் மாநில அரசாங்கத்தில் பணியாற்றுகிறவர்களுக்கும் சில வசதிகள் பெற முடியும். சின்ன வசதிகள் கேட்டால் கொடுப்பதில் தவறு இல்லை. அந்த அளவுக்குச் செய்ய அரசாங்கம் முன் வந்திருக்க வேண்டும். இதனால் இழப்பு ஏதாவது ஏற்பட்டாலும், மத்திய சர்க்காரிடமிருந்து கிடைக்கும் அளவுக்கு வற்புறுத்த வேண்டும். அதைவிடப் பெரிய பிரச்சினை மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் இடையே சம்பளம் போன்றவைகளில் ஏற்றத்தாழ்வு ஏராளமாக இருக்கிறது. அது அமைச்சருக்குத் தெரியும். அதைப் போக்க ஏதேனும் முயற்சி செய்தார்களா, அதைப்பற்றி எந்த விதத்திலாவது சிந்தித்தார்களா என்றால், இல்லை. இங்கேயே, செக்ரடேரியட்டில் இருக்கிறவர்களுக்கு அதிகச் சம்பளம்; மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு குறைந்த சம்பளம். மாநில அரசாங்க ஊழியர்களுக்கிடையே உள்ள வேற்றுமையாவது நீக்க வழி செய்யப்பட்டதா என்று பார்த்தால், அதற்கு வழிவகை ஏதுவும் வேண்டாம் என்று விட்டுவிட்டார்கள்.

சாதாரண சிப்பந்திகளிலே, அட்டெண்டராக இருப்பவர்கள் பலரும் தங்கள் வேலைகளில் உறுதி செய்யப்படவில்லை. அட்டெண்டர்கள் உடன் ஆட்களாக இருப்பதில் இருந்து கிளார்க்குகள் அளவுக்கு பணியாற்றுகிறார்கள். அவர்கள் வேலையில் நிரந்தரமாக்கப்படவில்லை. எனக்கு வந்திருக்கும் கடிதங்களை பார்த்தால், ஏறத்தாழ எட்டு ஆண்டு, பத்து ஆண்டு காலமாகியும், நிதி அமைச்சர் சுப்பிரமணியம் என்றையதினம் நிதி அமைச்சராக வந்தார்களோ, அதற்கு முதல் நாள் அட்டெண்டராக வந்தவர்கள் கூட இன்றையதினம் வரை வேலையில் உறுதி செய்யப்படவில்லை. தாற்காலிகமாகவே வேலையில் நின்றுகொண்டு இருக்கிறார்கள். அவர்களை எப்பொழுது வேண்டுமானாலும் வெளியே அனுப்பலாம். அவர்கள் ஏழைகள் தானே? அமைச்சர்களை சந்திக்க முடியுமா, கூக்குரல் போட முடியுமா, உறத்த குரலில் பேச முடியுமா? முடியாது?

SRIMATHI T. N. ANANDANAYAKI: Sir, I rise on a point of order. The Pay Commission has recommended that those who had put in a service of five years and more can be made permanent. I think the hon. Member has not gone through the Pay Commission's Report. If he has gone through it, he will not accuse the Government unnecessarily in regard to this matter.

DEPUTY SPEAKER: It is not a point of order. It is only an expression of opinion. The hon. Member may continue.

13th December 1961] [Sri K. Anbazhagan]

Sri K. ANBAZHAGAN : ஊதியத்தைப் பற்றி தீர்மானித்த குழு என்னென்ன தீர்மானித்ததோ அவைகள்கூட இன்னும் அமல் நடத்தப்படவில்லை. இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை, இன்னும் வேலை உறுதி செய்யப்படவில்லை என்பதையும் நான் பலதடவை அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்திருக்கிறேன். அப்படி வேலையிலே நிரந்தரம் ஆக்கப்படாமலேயே இன்றைய தினம் பலர் இருக்கிறார்கள். இந்த நிலைமை மாறவேண்டாமா? ஒரு வேளை 65 வயது ஆகிவிட்டால் அவர்களுக்கும் இந்த 20 ரூபாய் உண்டு என்று தெரிவிப்பார்கள். அரசியலில்கூட பல பேருக்கு 65 வயது ஆகும்பொழுது இந்த 20 ரூபாய் உதவி செய்யு மென்று நான் கருதுகிறேன். ஆனால் அந்த 20 ரூபாயும்கூட இங்கே எழுதப்பட்டிருக்கிற முறையிலே பார்த்தால் அனாதையாகி விட்ட கிழவர்களுக்குத்தான் என்று இருக்கிறது. இந்த 20 ரூபாய்க் காகவா அனாதையாகவேண்டும்? "ஆதரவில்லாமல் போய் விட்டவர்கள்" என்று சொல்வது நல்லது. உற்றார் உறவினர்கள் இருக்கிறார்கள் என்றாலும்கூட அனாதை என்ற சொல்லுக்கு இடம் கிடையாது. உற்றார் உறவினர்கள் இருந்தும் அவர்களுக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை என்றால் ஆதரவற்றுப் போய்விட்டார்கள் என்றுதான் பொருள். ஆதரவற்றவர்களுக்கு 20 ரூபாய் என்று இருக்குமேயானால் அது நல்லது. அனாதையாய் இருப்பவர்களுக்கு 20 ரூபாய் கொடுத்தாலும் போதாது. குடி இருப்பதற்கு வேண்டுமானால் மகனோடு சேர்ந்து இருக்கலாம். ஆனால் சோற்றுக்கு வழியில்லை என்றால் இந்த 20 ரூபாய் பயன் படும். நேற்றுதினம் இங்கே சில உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதுபோல அவர்கள் எல்லோருக்கும் ஒரு இல்லம் அமைத்து, அங்கே அவர்களைக் கொண்டுவந்து குடியிருக்க வைத்து, முடிந்தால் தொழில் தந்து மற்ற உதவிகளையும் தந்து காப்பாற்றினால் இந்த 20 ரூபாய் பயன்படுமே தவிர இல்லா விட்டால் அனாதை நிலையில் இருப்பவர்களுக்கு வெறும் பணம் கொடுத்தாலும் பயன்படாது. ஆதரவற்ற கிழவர்களுக்கு 20 ரூபாயும், அனாதைக் கிழவர்களுக்கு கிழவர் இல்லம் என்ற முறையில் எண்ணிப் பார்க்கவேண்டும். அதேபோல் விதவை களுடைய நிலைமையும் கவனிக்கப்படவேண்டுமென்று பலர் தெரி வித்தார்கள். இந்த நாட்டைப் பொறுத்த வரையில் அமைச்ச ரவர்கள் எண்ணிப் பார்த்து விதவைகள் ஆதரவற்றவர்களாக இருந்தால் அவர்களில் சிலர் கொடுமைக்கு ஆளாகின்ற காரணத் தினாலே, அப்படிப்பட்ட பரிதாபகரமான நிலையில் இருக்கிற விதவைகளையும் வாழவைப்பதற்கு வசதிகள் செய்யவேண்டும்.

கல்வி அமைச்சரவர்கள் திறமையைப் பற்றியும், அவர் கல்வித் துறையில் ஆற்றியிருக்கும் பணியைப் பற்றியும் பல உறுப்பினர் கள் பாராட்டினார்கள். நானும் அவருடைய திறமையைப் பாராட் டுகிறேன். ஆனால் அந்த இலாகாவினுடைய திறமையை என்னால் பாராட்ட முடியவில்லை. அவர் திறமையாகத்தான் இருக்கிறார். ஆனால் அந்தத் திறமை ஏனோ பயனற்றதாக போய்விடுகிறது. கல்வித் துறையிலிருந்து வருகிற மனுக்களும் மகசர்களும்

[Sri K. Anbazhagan] [13th December 1961

ஏராளம். அமைச்சர்கள் மேனுட்டிலிருந்து திரும்பி வந்தவுடன் ஒரு சிறந்த கருத்தை எண்ணிப் பார்த்து 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பள்ளிக்கூடத்திற்குப் போகும் பழக்க மாவது ஏற்படவேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்களுக்கு பள்ளிக்கூடம் ஏற்படுத்தலாம் என்ற யோசனையைக் கூறியிருக் கிருர்கள். அது நல்ல ஆசை. நிறைவேறினல் நான் மகிழ்ச்சி யடைவேன். அந்த நல்ல ஆசை எந்த அளவில் நிறைவேறும் என்பது நமது நாட்டிலே எவ்வளவு வசதிக் குறைவாக இருக் கிறது, சமுதாயம் எவ்வளவு பிற்போக்கான தன்மையிலே இருக் கிறது என்பதை எண்ணிப் பார்த்தால் தெரியவரும். நடுத்தர நிலைமையில் உள்ளவர்கள் இந்த அளவுக்காவது குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப முடியும். ஆனல் வீட்டிலே கஞ்சிக் குக்கூட வழியில்லாத நிலையில் இருப்பவர்கள் அனுப்ப முடியாது. ஆனல் அவர்கள் இருக்கிற இடத்திலே பள்ளிக்கூடம் அமைப்ப தற்கு நம்முடைய நிதி அமைச்சராலும் முடியாது, இன்றைய அரசாங்கத்தாலும் முடியாது, ஆனல் கட்டாயக் கல்வி என்று சொல்லுகிறபொழுது 6 முதல் 11 வயது வரையில் உள்ள குழந்தை களுக்கு என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த சிறு குழந்தை களுக்கு பள்ளிக்கூடம் என்று சொல்லுகிறபொழுது 2 முதல் 5 வயதுவரை என்று தெரிவிக்கப்படுகிறது. அப்படிப் பார்க்கும் பொழுது 5 முதல் 6 வயது வரையில் இடையிலே ஓர் ஆண்டு கணக்கிலே விடப்பட்டிருக்கிறது. குழந்தைகளின் வயதையும் 4, 5, 6 என்று மாற்றி மாற்றிச் சொல்லுகிருர்கள். எனக்கு தோன்றுவதை நான் சொல்லுவதாக இருந்தால், எல்லா இடங் களிலும் எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடிய முறையிலே நிறை வேற்ற வேண்டுமானல் குறைந்தது 3 வயதிலே தொடங்கி 5 வயது வரை குழந்தைப்பள்ளி, அதாவது விளையாடுகிறபள்ளி, 5 முதல் 6 வயது வரை ஒரு ஆண்டுக் காலம் பயிற்சி என்ற முறையில், ஆனல் கட்டாயமான பாடதிட்டம் வற்புறுத்தப்படாத நிலையில் இருக்கும்படி உயர்தரமான பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கு முன்வரலாம். இதுவும் எல்லோருக்கும் பயன்படும் என்று நம்பு வதற்கில்லை. ஓரளவுக்கு பயன்படும். சில இடங்களிலே நடத்திக் காட்டி ஒரு ஆர்வத்தை உண்டாக்க 3 வயதில் தொடங்கினல் பெற்ருேரை விட்டு பள்ளிக்கூடத்திற்குப் போகும் நிலைமை ஏற் படும்பொழுது மற்றவர்களுடன் பழகுவதற்கும் அவர்களைப் புரிந்துகொள்ளுவதற்கும் ஒரு வாய்ப்பு தோன்ற முடியும். எனக்கும் குழந்தைகள் இருக்கின்ற காரணத்தால் என்னுடைய அனுபவத்தையொட்டி இதை சொல்லுகிறேன். மூன்று வயதுக்கு முன்னல் அனுப்புவது, தாய்க்கிழவி ஒருத்தியிடம் ஒரு குழந்தை யைத் தூக்கி வளர்க்கச் சொல்லுவதற்கு ஒப்பாகுமே தவிர பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதாக இருக்காது. ஒருவேளை அமைச்சர் அவர்களுக்கு சின்னக் குழந்தைகள் இருக்கிருர்களோ என்னமோ தெரியவில்லை.

13th December 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM: பெரிய குழந்தைகள் இருந்தாலும், சின்னக் குழந்தையாய் இருந்துதான் பெரிய குழந்தையாக ஆக முடியும்.

SRI K. ANBAZHAGAN: ஆகையால் இந்தக் குழந்தைகளைப் பொறுத்தவரையில் 2 வயது என்று அமைச்சர் அவர்கள் தீர்மானித் திருப்பதை நிறைவேற்ற முடியுமா என்று ஐயுறுகிறேன்.

பொதுமக்களுக்கு ஆசை ஏற்படக்கூடிய அளவுக்கு பல கருத் துக்கள் பேசப்பட்டு வருகின்றன. ஆனால் நிலைமை எவ்வாறு இருக்கின்றது? மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவோ பெரிய கடமைகளைச் செய்வதாகச் சொல்லுகிறவர் கள் சென்ற தடவை 1961-62-ல் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் என்ற வகையில், ஒரு ஆண்டிலே செலவழிப்பதாக சொன்ன தொகை ஏறத்தாழ 174 லட்சம் என்று கருதுகிறேன். ஆனால் செலவழித்திருக்கிற தொகை திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் 137 லட்சம்தான். சொன்னதிலே 3-ல் 2 பங்குதான் செலவழித் திருக்கிறார்கள். மறுபடியும் அடுத்த ஆண்டுக்கு 217 லட்சம் ரூபாய் தாராளமாகத்தான் தெரிவித்திருக்கிறார்கள். என்ன காரணத்தினலோ அதுவும் மறுபடியும் சுருங்கத்தான் போகிறது. இப்படிப்பட்ட நிலைமை இருக்குமானல், இங்கே தரப்படுகிற பல்வேறுத் திட்டங்கள் முழு அளவுக்கு நிறைவேற்றப்படுமா, அவைகளால் முழுப்பயன் ஏற் படுமா என்று புள்ளி விவரத்தைப் பார்க்கும்பொழுது சந்தேகம் ஏற்படுகிறது. ஒருவேளை புள்ளி விவரத்தைப் பற்றி சொன்ன வுடனே, புள்ளி விவரத்தைப் பார்க்காதீர்கள், பொதுமக்களைப் போய்ப் பாருங்கள், அவர்களுடைய வாழ்க்கையிலே ஏற்பட் டிருக்கும் வளர்ச்சியைக் காணுங்கள் என்று அமைச்சரவர்கள் பேசக்கூடும். ஆனல் அதே அமைச்சரவர்கள் நான்கு ஆண்டுக் காலத்திற்கு முன்னர், நாட்டு நிலைமையைப் பற்றி பேசிய நேரத் தில், எங்களுக்கு அளித்த பதிலில் புள்ளி விவரத்தைப் பாருங்கள், நாட்டிலுள்ளதைப் பற்றி நீங்கள் பேசினல் நீங்கள் நினைப்பது போல் அது இருக்கவேண்டுமா என்றார். இப்பொழுது நாட்டு மக்களை பார்க்கச் சொல்லுகிறார். மறுபடியும் இங்கே வந்தால் என்ன சொல்லுவாரோ தெரியாது. ஆனல் அவர் போகிற இடம் பெரிய இடம்.

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் அவ்வாறு சொல்லி யிருப்பேன் என்று நினைத்துக்கொண்டு கனம் அங்கத்தினர் பேசுகிறார்.

SRI K. ANBAZHAGAN: நாலு ஆண்டிற்கு முன்பு திநி நிலை அறிக்கையின்மீது நடந்த விவாதத்தின்போது நாங்கள் புள்ளி விவரத்தை படிக்காமல் பேசுகிறோம் என்றார். ஆறு மாதத்திற்கு முன்னல் பேசும்பொழுது வெறும் புள்ளி விவரத்தை வைத்துக் கொண்டு பேசாதீர்கள், நாட்டு மக்களைப் பாருங்கள் என்று நண்பர் ப. உ. ஷண்முகம் பேசும்பொழுது சொன்னர்கள். நாட்டு

மக்களை பார்க்கலாம் என்றுதான் நான் போனேன். கடைத் தெருவிலே கேட்டால் ஒரு படி உப்பு 16 புதுக் காசுக்கு விற்கப் படுகிறது. உப்பு வாங்குவதற்கு ஏழை மக்கள் திண்டாடுகிறார்கள். எப்ரல், மே, ஜூன் மாதத்தில் ஒரு படி உப்பு 6 காசாய் இருந்தது. அதற்கு அடுத்த இரண்டு மாதங்களிலே 8 காசாக உயர்ந்தது. அதற்கு அடுத்த இரண்டு மாதத்திலே 12, 14 காசாக உயர்ந்து இப்பொழுது 16 காசாக ஏறியிருக்கிறது. பருப்பு வாங்கத்தான் ஏழைகளுக்கு வழியில்லையென்றாலும், சர்க்கரை உற்பத்தி அதிகமாகியும் ஏழைகள் வாங்கக்கூடிய நிலையில் இல்லை யென்றாலும், அப்படி அவர்கள் வாங்கக்கூடிய விலையில் கிடைக்கச்செய்ய வழியில்லை என்றாலும், இந்த உப்பு விலைகூட இவ்வாறு ஏறுகிறது என்று கேட்டால் எதிர்க்கட்சியிலே இருப்பவர்களுக்கு இப்படியெல்லாம் குறைகளைச் சொல்ல தெரியுமே தவிர எங்களது திறமையை பாராட்ட முடியவில்லை என்று எண்ணுகிறார்கள். கடைசியாக சொல்லுகிறேன், அமைச்சருடைய திறமையை நான் பாராட்டத்தான் எண்ணுகிறேன். ஆனால் ஏனோ முடிய வில்லை. ஒரு வேளை அந்தத் திறமை எனக்கு இல்லை என்று எண்ணுகிறேன்.

(Sri N. S. Ramalingam in the Chair.)

சென்னை மாநகராட்சி மன்றத்திலே நிர்வாகத்தைப் பற்றி பலர் குறை பேசியிருக்கிறார்கள். அமைச்சருக்கு அதிலே பெரும் பொறுப்பு இருக்கிறது. என்னென்ன நிர்வாகக் குறைகள் இருக்கின்றன என்பதை நல்ல நீதிபதிகளைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து அமைச்சரவர்கள் விசாரிக்க வேண்டும். மாநகராட்சி மன்றத்திலே கொடுக்கிற பணம் ஒழுங்காக செலவழிக்கப்படுகிறதா என்று ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். அமைச்சரவர்கள் கேள்வி நேரத்தில் பேசும்பொழுது, மாநகராட்சியில் சிறுபான்மையாயிருக்கிற கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களை பெரும்பான்மையினர்போல் கருதிக்கொண்டு தேர்தலிலே போட்டியிட்டு அதன் மூலமாக மாநகராட்சி மன்ற நிர்வாகத்தை குளறுபடியாக்குகிறார்கள், அவர்கள் ஜனநாயகத்தை மறந்து விட்டார்கள் என்று பேசினார்கள். நிதி அமைச்சர் அவர்கள் எல்லாவற்றையும் பொறுப்போடுதான் தவறாகப் பேசுவார்கள் என்று நினைத்தேன். ஆனால் இப்பொழுது பொறுப்பைக்கூட மறந்துவிட்டு பேசிவிட்டார்கள் என்று எண்ணுகிறேன். சென்னை மாநகராட்சி மன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தார் 45 பேரும், அக்கழகத்தின் ஆதரவாளராக இருக்கக்கூடியவர் ஒருவரும், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த நாலு பேரும், அவர்களால் ஆதரிக்கப்பட்ட இரண்டு பேரும், இரண்டு கட்சியும் சேர்ந்த காரணத்தினால் ஏறத்தாழ 52 பேரைக்கொண்டு முதல் தடவையாக மேயர் தேர்தலில் வெற்றி பெற்றனர்.

கனம் அமைச்சர் அவர்களுக்கு இந்தக் கணக்கு நன்றாகத் தெரியும் என்று நான் நம்புகிறேன். முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் 45 பேர்கள், அவர்களுடைய ஆதரவு பெற்றவர்

13th December 1961] [Sri K. Anbazhagan]

ஒருவர் ஆக 46 பேர்கள். முப்பத்தேழு பேர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சி இரண்டாவது மேயர் தேர்தலில் எந்த ஜனநாயக அடிப்படையில் முன்னேற்றக் கழகத்துடன் போட்டியிட்டது என்பது தெரியவில்லை. அப்பொழுது நிறுத்தி வைத்தவருடைய பெயரை வேண்டுமானாலும் சொல்லுகிறேன். முன்னேற்றக் கழக சார்பில் நிறுத்தி வைக்கப்பட்டவரின் பெயர் அப்துல் காதர். காங்கிரஸ் கட்சியின் சார்பில் நிறுத்தி வைக்கப்பட்டவரின் பெயர் சுல்தான் மொய்தீன் என்பவர். நாற்பத்தாறு பேர்கள் கொண்ட கட்சியை எதிர்த்து 37 பேர்கள் கொண்ட கட்சி எந்த ஜனநாயக தத்துவ அடிப்படையில் போட்டியிட்டது என்பதை அறிய விரும்புகிறேன். இன்றைக்கு முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் எண்ணிக்கை குறைந்து போய்விட்டது என்றும் எந்த ஜன நாயக அடிப்படையில் போட்டியிட்டார்கள் என்றும் கேட்கிறார். இன்றைக்குக் கூட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் 37 பேர்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய ஆதரவு பெற்றவர் ஒருவர் ஆக 38 பேர்கள் இருக்கிறார்கள். இந்தக் கணக்கு கனம் நிதி அமைச்சருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அவருக்குக் கணக்குத் தெரியாமல் இல்லை. இத்துடன் ஏற்கெனவே கழகத்தில் இருந்துவிட்டு மற்றக் கட்சிக்குப் போய் கழகத்திற்கு வாக்களிக்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்தவர்கள் பத்து பேர்கள், அவற்றில் இருவர் திரும்பி கழகத்திற்கே வந்து விட்டார்கள். ஆக 38-ம் 2-ம் ஆக 40 பேர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் 35 பேர்கள். நகர முன்னணியைச் சேர்ந்தவர்கள் அதாவது காங்கிரஸ் ஆதரவு பெற்றவர்கள் 11 பேர்கள், ஆக 46 பேர்கள்தான். இந்த நிலைமயில் முன்னேற் கழகம் போட்டியில் இறங்கியது ஜனநாயக அடிப்படையில் இல்லையா என்று கேட்கிறேன். ஆரம்பத்தில் காங்கிரஸ் கட்சியில் 35 பேர்கள்தான் இருந்தார்கள். நகர நல முன்னணியில் உள்ள 11 பேர்கள், ஆக 46 பேர்கள்தான். இந்த நிலைமையில் முன்னேற்றக் டார்கள். அப்படி போட்டியிட்டபோது எந்தக் கொள்கை அடிப்படையில் போட்டியிட்டார்கள். எந்த ஜனநாயக தத்துவ அடிப்படையில் போட்டியிட்டார்கள். எப்படியாவது எதிருங்கள், எதிருங்கள். நன்றாக எதிருங்கள். சிறுபான்மையினருடைய ஆதரவினால் எதிர்க்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அவர்களே பதினோறு பேர்கள் கொண்ட நகர நல முன்னணியைச் சார்ந்த சிறுபான்மை கட்சியினருடைய ஆதரவு கொண்டு எதிர்த்தார்கள். இது எந்த ஜனநாயக தத்துவத்தின் அடிப்படையில் இருக்கிறது? காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் அகில உலகத்தில் இருப்பவர்கள், சிறுபான்மையிலுள்ளவர்கள் போட்டியிட்டால் ஊழல்தான் ஏற்படும் என்று சொன்னார்கள். அவர்கள் அப்படியே போட்டி போடட்டும். இப்படிச் சொன்னவர்கள் நகர முன்னணியுடன் சேர்ந்து போட்டியிட்டதை உணரவேண்டும். அப்படி அவர்களுடன் ஆதரவு பெற்று போட்டியிட்டு வெற்றி பெற்றால் அந்த வெற்றியைக் கொண்டாடலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் வெற்றி பெறவில்லை. தோல்விதான் ஏற்பட்டது. இந்த நிலைமையில் உங்களுடைய நிதி நிலை

[Sri K. Anbazhagan] [13th December 1961

அறிக்கையிலுள்ள நல்ல கொள்கைகளைச் சொல்லி வரப்போகிற தேர்தலில் வோட்டுக் கேளுங்கள், எவ்வளவு வாக்குகள் கிடைக்கிறது என்று பார்ப்போம். அதிலுள்ள குறைகளை எடுத்துச் சொல்லி நாங்கள் வாக்குகளைக் கேட்கிறோம். அப்படி நாங்கள் கேட்டு பார்க்கிறோம் எங்களுக்கு அதிகமான வாக்குகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது, என்பதை கனம் அமைச்சருக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கடைசியாக கனம் அமைச்சரை பாராட்டவில்லை என்று எண்ணுகிறீர்கள். எப்படிப் பாராட்டுவது என்று எனக்குத் தெரியவில்லை. அவரை பாராட்ட வேண்டும் என்று தான் நான் விரும்புகிறேன். இந்த நாட்டின் விடுதலைக்கு பாடுபட்டவர் அவர். அவர் பல்லாண்டு வாழ்ந்து வாழ்க்கையை நடத்த வேண்டும். இந்த விடுதலை அடைந்த நாட்டில் அவர் பல்லாண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்தி அவர் பல்லாண்டு இனிது வாழ வேண்டும் என்று மறுபடியும் அவருக்கு நல்வாழ்வு வாழ்த்தி என் உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

* **SRI V. K. RAMASWAMY MUDALIYAR :** மிஸ்டர் சேர்மன் ஸார், இந்த 1962-63 இடைக்கால நிதி நிலை அறிக்கையை கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். இதில் வருவாயைப் பற்றி பார்த்தால் 1960-61-க்கு 92 கோடி ரூபாயும், 1961-62-ல் 89.69 கோடி ரூபாயும், 1962-63-ல் 92.71 கோடி ரூபாயும் என்று காட்டப்பட்டிருக்கிறது. இதில் செலவு பங்கைப் பார்த்தால் 1960-61-க்கு 96.7 கோடி ரூபாய், ரிவைஸ்ட் பட்ஜெட் 96 கோடி ரூபாய் 1962-63-ல் 100 கோடி ரூபாய் வரையில் காட்டியிருக்கிறது. ஆனால் அதில் துண்டு விழுவது 696 லட்சம், ஆகக் கூட 96 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது என்று கண்டிருக்கிறது. இப்படி சுமார் ஏழு கோடி ரூபாய் துண்டு விழுவதை எப்படிச் சரிக்கட்டப் போகிறார்கள், அதற்கு எல்லாம் ஏதாவது வழி செய்யப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றியெல்லாம் இதில் காணப்படவில்லை. கடன் நம்முடைய மாகாணத்திற்கு அதிகமாக இருக்கிறது. வருடா வருடம் சர்க்கார் கடன் வாங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அது தவிர வட்டிக்கு வேறு கடன் கொடுத்திருக்கிறார்கள். இப்படி இருக்கும்போது இந்த ஏழு கோடி ரூபாய் துண்டு விழுவதை எப்படிச் சரிக்கட்டப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. இதைப் பற்றி கனம் நிதி மந்திரி அவர்கள் திட்டவட்டமாக ஒன்றும் சொல்லவில்லை. அதற்கு என்று ஏதாவது வரி போடப்போகிறார்களா என்றும் தெரியவில்லை. தேர்தல் வருவதால் அதைப்பற்றி சொல்லவில்லையோ என்றுகூட தோன்றுகிறது. தேர்தலுக்குப் பிறகு வரப்போகிற மந்திரி சபைக்கு இது ஒரு குழப்பத்தை உண்டு பண்ணக் கூடியதாக இருக்கிறது. இதைத்தான் எல்லோரும் சொல்லுகிறார்கள். அதையே நானும் ஆதரிக்க வேண்டியதாக இருக்கிறது.

தவிர அநேக நல்ல திட்டங்களையெல்லாம் இதில் சமர்ப்பித்திருக்கிறார்கள். பல நல்ல திட்டங்களைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். தேர்தலுக்கு முன்னால் இப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் காட்டியிருப்பதைப் பார்த்தால் ஒருக்கால் தேர்தலுக்காகக் கொண்டுவரப்பட்ட திட்டமோ என்று சொல்லக்கூடியதாக இருக்கிறது. அவற்றில் ஓல்ட் ஏஜ் பென்ஷன் **(Old-age pension)** திட்டம் இருக்கிறது. அதன் மூலம் மாதம் ஒன்றுக்கு 65 வயதானவருக்கு இருபது ரூபாய் கொடுப்பதாக இருக்கிறது. இதை எப்படி கொடுக்கப் போகிறார்கள், வயதானவர்கள் என்று எப்படி கண்டு பிடிக்கப்போகிறார்கள், 65 வயது ஆகி விட்டது என்று எப்படிக் கண்டு பிடிக்கப் போகிறார்கள். இதை எப்படி விநியோகம் செய்யப்போகிறார்கள், இதை எப்பொழுது முதற்கொண்டு அமுலுக்குக் கொண்டுவரப்போகிறார்கள், இதைப் பெற்றுக்கொள்ளக் கூடியவர்கள் எத்தனை பேர்கள் இருப்பார்கள் நம்முடைய மாகாணத்தில் இவற்றிற்கெல்லாம் புள்ளி விவரங்கள் கொடுக்கப்படவில்லை. இதைப் பற்றி சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். இவர்கள் சர்டிபிகேட் வாங்கவேண்டுமென்று சொன்னால் எப்படி வாங்குவது என்றெல்லாம் சொல்லப்படவில்லை. இதை அமுலுக்குக் கொண்டுவரும்போது எவ்வளவோ கஷ்டங்களையெல்லாம் உண்டு பண்ணும். இருந்தபோதிலும் இந்த பென்ஷன் சர்ட்டிபிகேட் வாங்குவதற்கு அவர்களுக்கு ஒரு நிரந்தரமான ஏற்பாடு செய்ய வேண்டும். இதன் காரணமாக லஞ்ச ஊழல்கள் எல்லாம் ஏற்படும். அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. இதற்கெல்லாம் சர்க்கார் என்ன செய்யப்போகிறார்கள் என்பதெல்லாம் தெரியவில்லை. இத்துடன் நமது ராஜ்யத்திலுள்ள கடை நிலை ஊழியர்களுடைய கதி என்ன என்பதும் தெரியவில்லை. அதாவது மாதம் இருபது ரூபாய்க்குக் குறைவாக பென்ஷன் வாங்கக்கூடியவர்களுக்கு ஏதாவது பரிகாரம் உண்டா என்பதும் தெரியவில்லை. இவர்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுதுள்ள விலைவாசியின் உயர்வால் அவர்களும் எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கும் ஏதாவது செய்ய வேண்டும். என்பதை தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கும் புள்ளி விவரம் வேண்டும். இவைகளுக்கு எல்லாம் எவ்வளவு தொகையாகும் என்பதையெல்லாம் சற்று யோசித்துச் சொல்ல வேண்டும். அத்துடன் இவைகளை நல்ல முறையில் சீக்கிரத்தில் அமுல் நடத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக உபாத்தியாயர்கள். இவர்கள் வேலை பார்க்கும் போதே இறந்து விட்டால் அவர்களுக்கு ஏதோ கொடுக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. அந்த வகையில் என்ன செலவு ஆகும் என்பதையும் சொல்ல வேண்டும். இதன் ஆக்சுவல் காஸ்ட் என்ன ஆகும் என்பதைச் சொல்லவேண்டும். அதேமாதிரிதான் என்.ஜி.ஓ.-க்களுடைய குழந்தைகளுக்கு டெக்னிகல் கல்விச் சலுகை. இதற்கும் புள்ளி விவரம் கொடுக்கவில்லை. இ

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [13th December 1961

சம்பந்தமாக எவ்வளவு செலவாகும் என்பதையும் சொல்ல வேண்டும். இதற்கெல்லாம் வேண்டிய புள்ளிவிவரங்கள் கொடுக்கப்படவில்லை. அதெல்லாம் சர்க்காருக்கு தெரிந்திருக்க வேண்டும். இதையெல்லாம் எப்படி சரிக்கட்டப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. இதைப்பற்றியெல்லாம் பட்ஜெட்டில் திட்டவட்டமாகச் சொல்லவில்லை.

நிற்க, சென்ட்ரல் டாக்ஸ் ஷேரை எடுத்து பார்த்தால் 1960-61-ல் 10.6 கோடியும் காட்டப்பட்டிருக்கிறது. அதில் ரிவைஸ்ட் பட்ஜெட் 17.61 என்று காட்டப்பட்டிருக்கிறது. இந்த பட்ஜெட் ப்ரோவைட் பண்ணியிருப்பது 18.11 கோடி. சென்ட்ரல் டாக்ஸி லிருந்து நமக்கு அதிகமாக வந்ததாகத் தெரியவில்லை. இதைக் கண்டு ரொம்பவும் வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. இதைப் பற்றி கனம் செட்டி நாடு ராஜா அவர்கள் வருத்தத்துடன் தெரிவித்தார்கள். அதாவது பாராளுமன்றத்தில் நமது உருப்பி னர்களும் சரி, நமது அமைச்சர்களும் சரி, சரிவர சண்டையிட்டு நமக்கு வேண்டிய நிதியை வாங்கி வரவில்லை என்று வருத்தத் துடன் அடிக்கடி தெரிவித்து வருகிறார். முக்கியமாக நமது
12-00 noon. வருமானம் அதிகமாக ஆகிக்கொண்டிருக்கும் இந்த சமயத்தில் அதாவது மத்திய அரசாங்கத்திற்கு நம்முடைய ராஜ்யத்தி லிருந்து கிடைக்கும் வருவாய்களும் அதிகமாகிக் கொண்டிருக் கும் தருணத்தில் அவர்கள் ஏன் நம்முடைய ராஜ்யத்திற்குத் தருகிற பங்கை அதிகமாக்கக் கூடாது? நம்முடைய ராஜ்ய சர்க்கார் அதிகமான தொகையை மத்திய அரசாங்கத்திடமிருந்து வாங்காததன் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். எல்லா ராஜ்யங்களிலிருந்தும் மத்திய அரசாங்கத்திற்கு வருமானம் வந்துகொண்டிருக்கிறது. அதுபோல் நம்முடைய ராஜ்யத்திலிருந்தும் வருஷா வருஷம் அவர்களுக்கு அதிகமான வருமானம் போய்ச் சேர்ந்துகொண்டிருக்கிறது. ஆனால், நமக்கு அவர்கள் தரும் பங்குத் தொகை ஒரே அளவில் நின்றுகொண் டிருக்கிறது; கொஞ்சமேனும் அதிகப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவிக்கவேண்டி யிருக்கிறது.

ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் இனத்திலும் நமக்கு அதிகம் வர வில்லை. அனேக ப்ராஜெக்ட்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணம் விஸ்தாரமாகச் செலவிடப்பட்டிருக்கிறது. முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பணம் அனேகவிதத்தில் செல வழித்து அனேக பொருள்கள் வாங்கும்போது, அதன்மூலம் கிடைக்க வேண்டிய வருவாய்கள் குறைவாக இருப்பதற்கு தவறுதல் காரணமா, நழுவல் காரணமா என்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். பதினைந்து கோடி ரூபாய்தான் நிரந்தரமாக இருக்கிறது. ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் இனத்தில் எந்தவிதமான உயர்வும் காணாமல் இருப்பது வருந்தத்தக்கது. நாட்டில் பணப் புழக்கம் (மனி ஸர்க்குலேஷன்) அதிகமாக இருக்கிறது. ஒவ்வொரு திட்டத்தின் கீழும் அதிகமாக பணம் செலவிடப்

13th December 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

படுவதால் பணப் புழுக்கம் அதிகமாக இருக்கிறது. சேல்ஸ் டாக்ஸ் வசூலிப்பதில் ஏதாவது லீகேஜ், நழுவல் இருக்கிறதா என்பதைப் பரிசிலிக்க வேண்டும். சௌக்கிகளும் ஏற்படுத்தி, அனேக உத்தியோகஸ்தர்களைப் போட்டிருந்தாலும், இதிலே வருவாய் அதிகப்படுவதாகத் தெரியவில்லை. இதன் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் நடத்துவதன் மூலம் 1960-61-இல் இருபது லட்சம் ரூபாய் வருமானம் வந்திருந்தது. இப்பொழு திருக்கும் புள்ளி விவரத்தைப் பார்த்தால், 18 லட்ச ரூபாய்தான் வருவாய் வரும் என்று போட்டிருக்கிறது. இதுவும் குறைவதற் குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. தேசிய மயமாக்கி நிர்வகிக்கும்போது ஏதாவது லீக்கேஜ், நழுவல் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். நாளுக்குநாள் பஸ் பிரயாணிகள் அதிகமாகிக் கொண்டிருக்கிறார்கள். நாமும் படிப்படியாக ஒவ்வொரு பகுதிக்கும் பஸ்களை விட்டுக்கொண்டிருக்கும் தருணத் தில் 1960-61-ம் ஆண்டில் 20 லட்சம் ரூபாய் வருமானம் வந்திருக் கும்போது, அடுத்த ஆண்டில் 18 லட்சம் ரூபாய்தான் கிடைக்கும் என்று போட்டிருப்பதற்குக் காரணம் என்ன, இந்தக் குறைவுக் குக் காரணம் என்ன என்பதைச் சர்க்கார் பரிசீலனை செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

'மைனர் இர்ரிகேஷன்'-ஐப் பற்றி ஒவ்வொரு தடவையும் நான் இந்தச் சட்டமன்றத்தில் பேசியிருக்கிறேன். இந்தத் துறைக்குப் போதுமான தொகை ஒதுக்கவில்லை. ஒதுக்கிய பணமும் சரிவர செலவு செய்யப்படவில்லை. உணவு உற்பத்தி இலாகா (**Food Production Department**) என்று தனியே நியமித்திருந்தபோதிலும், அவர்களுக்கு வேண்டிய சலுகை கொடுக்காததன் காரணமாக, உத்தியோகஸ்தர்கள் போதுமான அளவு போடாததன் காரண மாக, அதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. இந்த இலாக்காவி லுள்ளவர்கள் நல்ல முறையில் பணியாற்றி வந்தபோதிலும், இந்த நிர்வாகத்தில் அடிக்கடி 'இன்டர்பிரன்ஸ்' இருப்பதன் காரண மாக வேலை சரிவர நடக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இது பற்றியும் எஸ்டிமேட் கமிட்டியார் தங்களுடைய ரிப்போர்ட்டிலே சொல்லியிருக்கிறார்கள். இந்த இலாகாவுக்கு வேண்டிய இன்ஜினீர் களைப் போட்டு, மைனர் இரிகேஷன் வேலைகளை நல்ல முறையில் அவர்கள் எடுத்து நிறைவேற்றும்படியான வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

பஞ்சாயத்துக்களுக்குச் சில பொறுப்புகளைக் கொடுத்த போதிலும், ஏரி மராமத்துக்கு ஏக்கரொன்றுக்கு 1-¼ முதல் 1-½ ரூபாய்க்குமேல் செலவு செய்ய முடியாது என்று ஒரு கட்டுப்பாடு செய்திருப்பதன் காரணமாக உணவு உற்பத்திப் பெருக்கம் தடைப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. பஞ்சாயத்துக்குப் போதுமான வருமானம் இல்லை. அரசாங்கத்தின் திட்டப்படி 100 ஏக்கர் உள்ள ஒரு கிராமத்திற்கு ரூ. 400 முதல் ரூ. 500 வரைதான்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [13th December 1961]

செலவழிக்கலாம், அதற்குமேல் செலவழிக்க முடியாது. இந்தத் தொகையைக் கொண்டு ஏரிகளை நல்ல முறையில் மராமத்து செய்யமுடியுமா என்று சர்க்கார் கவனித்துப் பார்க்கவேண்டும். Food ப்ரொடக்ஷன் இலாகாவினரே மைனர் இரிகேஷன் இலாகாவிலுள்ள வேலைகளையும் ஒப்புக்கொண்டு ஏரிகளை ஆழப் படுத்தியும் முக்கியமான மராமத்து வேலைகளையும் உடனடியாகச் செய்தால்தான் உணவு உற்பத்தி அதிகமாகும்; இல்லாவிட்டால் உணவு உற்பத்தி மிகவும் பாதிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

லோகல் போர்ட்ஸ் க்ராண்ட் என்ற வகையில் டோல் காம்பன்ஸேஷனுக்குப் பதிலாக மாட்சிங் க்ராண்ட் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நபர் ஒன்றுக்குச் சராசரி நாற்பது நயே பைசே வீதம் லோகல் போர்ட்ஸ் க்ராண்ட் கொடுக்கப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை போதுமானதாக இல்லை. அனேக கிராமங்களில் ரோடு வசதி குறைவு. சுகாதார வசதியும் குறைவு. இன்னும் அனேக வசதிகள் குறைவாக இருக்கின்றன. இதற்கெல்லாம் தற்போது ஒதுக்கியிருக்கும் தொகை போதாது. இன்னும் அதிகமாகக் கொடுக்கவேண்டும். 'ஈக்வல் க்ராண்ட்' கொடுப்பதைப் பற்றி சர்க்கார் சற்று யோசிக்கவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் கொஞ்சம் சரிக்கட்டும்படியாக இருக்கலாம். வடாற்காடு, சேலம், செங்கற்பட்டு போன்ற வரண்ட மாவட்டங்களில் இதானது முடியாத காரியம். இந்த வரண்ட மாவட்டங்களைப் பொறுத்த வரையில், போதுமான வசதியை உயர்த்திக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் ரோடு வசதி, சுகாதார வசதி, இன்னும் மற்ற வசதிகள் எல்லாம் கிராமங்களிலே ஏற்பட ஏதுவாக இருக்கும்.

'ஆக்சுவல் டெவலப்மென்ட் எக்ஸ்பென்டிசர் (Actual development expenditure) இரண்டு வருஷங்களுக்குள் 10 கோடி ரூபாய் வரையில் அதிகமாகியிருக்கிறது. இவ்வளவு அதிகமாக வேண்டியதன் காரணம் என்ன? கம்யூனிடி டெவலப்மென்ட் ப்ராஜெக்ட்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கெல்லாம் செலவினங்கள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. பஞ்சாயத்து யூனியன்கள் இயங்கிக்கொண்டு வரும்போது, கம்யூனிடி டெவலப்மென்ட்டின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையை எப்படிச் செலவழிக்கப் போகிறார்கள்? இதற்கு அதிகத் தொகை ஒதுக்கியதன் காரணம் என்ன என்று அமைச்சர் அவர்களை நான் கேட்க விரும்புகிறேன். கம்யூனிடி டெவலப்மென்ட் நிர்வாகங்களில் அனேகவித குறைகள் இருந்தன. அவைகளைப்பற்றி இந்தச் சட்டசபை முன்பாக அனேக அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த நிர்வாகத்தைச் சரிவர நடத்தி அது நல்ல முறையில் பணியாற்ற வகை செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கின்றேன்.

13th December 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

கல்வி இலாகாவுக்கு முன்பு 18 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டது. இப்பொழுது 23 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. கம்யூனிடி டெவலப்மென்ட்டுக்கு நான்கு கோடியிலிருந்து ஆறு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. கல்வி இலாகாவானது நல்ல முறையில் பரிபாலிக்கப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். அரசாங்கத்தின் கல்விக் கொள்கை (கவர்ன்மென்ட் எடுகேஷனல் பாலிஸி) அடிக்கடி மாறிக்கொண்டே வருகிறது. 1947-48-இல் ஒருவிதக் கொள்கையும், 1957-ல் ஒரு மாதிரிக் கொள்கையும், 1961-ல் ஒருவிதக் கொள்கையும் அனுசரிக்கப்பட்டு, இப்படியாக அனேக மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. அடிக்கடி மாறுதல்கள் வந்துகொண்டிருப்பதன் காரணமாக மக்களிடம் ஒருவிதமான அதிருப்தி ஏற்படுகிறது. 11-வது ஸ்டாண்டர்டு வருவதா இல்லையா என்ற பிரச்னை, இலவசக் கல்வி, மொழிப் பிரச்னை—ஆங்கிலமா, இந்தியா, பிரதேச மொழியா—இவைகளிலெல்லாம் rethinking வேண்டும். செகண்டரி எடுகேஷனைப் பொறுத்த வரையில் அடிக்கடி கொள்கை மாறுவதன் காரணமாக நிர்வாக சூழல்கள் ஏற்படுகின்றன. போதுமான ஆசிரியர்கள் கிடைக்காத குறை ஒரு புறம் இருக்கிறது. அனேக உயர்தரப் பள்ளிகளில் ஸயன்ஸ் உபாத்தியாயர், கணக்கு உபாத்தியாயர், நியமிக்கப்படவில்லை. எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது வகுப்பு வரையில் கூட ஸயன்ஸ் உபாத்தியாயர், கணக்கு உபாத்தியாயர் நியமிக்கப்படாமலிருப்பதைப் பார்க்கிறோம். இம்மாதிரியான சில கஷ்டங்கள் இருக்கின்றன. நாம் பள்ளிக்கூடங்களை விஸ்தரித்துக் கொண்டே போகிறோமே தவிர தரத்தைப் பார்ப்பது இல்லை. சம்பளம் போதுமானதாக இல்லாமையினால் திறமையான ஆசிரியர்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே வெகுவாகத் தரம் குறைந்துவிட்டது என்பதே என் அபிப்பிராயம்.

பேசிக் எஜுகேஷனை எடுத்துக்கொண்டு பார்க்கப் போனாலும் கூட காந்தியடிகள் சொன்னது ஒன்று. ஆனால் இப்போது நடக்கிறது ஒன்று. என்னைப் பொறுத்தவரையில் இந்த ஆதாரக் கல்வியைப் பற்றி எனக்கு நம்பிக்கையில்லை. அதில் ஏராளமான பணம்தான் விரயமாகிறது. இதிலும் rethinking இருக்க வேண்டும். இந்த முறையையே அடியோடு கைவிட சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் கல்வியைப் பொறுத்தவரையில் ஏழாவது, எட்டாவதுவரை படித்துவிட்ட எல்லாப் பிற்போக்கான சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பொருளாதாரத் துறையில் மேம்பாடடைய தொழில் கல்வி போதிக்கப்படவேண்டும். நிறைய டிரேட் ஸ்கூல்ஸ் இருக்கவேண்டும். அதன் காரணமாக பாலிடெக்னிக்கலை அதிகப்படுத்த வேண்டும்.

பாடப் புத்தகங்களை சர்க்காரே வெளியிடுவது என்ற கொள்கையை நான் ஆதரிக்கவில்லை. அதனால் தரம் குறைந்துவிடும். தனியாரிடமே அந்தப் பொறுப்பை விட்டு நல்லமுறையில்,

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [13th December 1961

குறைந்த விலையில் பாடப் புத்தகங்கள் வரும்படி செய்யவேண்டும். அரசாங்கமே வெளியிடுவது என்ற கொள்கையைக் கண்டிப்பாகக் கைவிட்டுவிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளியில் படிக்கிற மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்குவது சம்பந்தமாக ஒரு உத்தரவு இருக்கிறது. நூறு ரூபாய்க்கு மாதச் சம்பளம் குறைவாக உள்ளவர்கள் குழந்தைக்கு இலவசக் கல்வி என்று இருக்கிறது. நூறு ரூபாய் என்பது இந்தக் காலத்தில் 20 ரூபாய்க்குத்தான் சமானம். ஆகவே மாதம் 300 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரை வாங்கக்கூடியவர்களுடைய பிள்ளைக்கும்கூட இந்தச் சலுகையை விஸ்தரிக்க வேண்டும். இதையும் கனம் அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். மத்திய சர்க்காரானது நமக்குத் தொகை கொடுப்பதாகச் சொல்கிறார்கள். திடீரென்று நிறுத்திவிடுகிறார்கள். இப்படி திடீரென்று வாபஸ் பெற்றுக்கொண்டால் நாம் என்ன செய்வது? பினான்ஸ் கமிஷன் இதைப் பரிசீலனை செய்து நமக்குத் தரும் என்றால் எப்போது இது வரும்? நமக்குப் போதுமான அளவு வருமா? வராவிட்டால் நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்.

முக்கியமாக மெடிகல், பப்ளிக் ஹெல்த் என்ற பிரிவில் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை மிகவும் குறைவு. அதை அதிகமாக்கவேண்டும். விவசாயத்திற்கும் போதுமான தொகை ஒதுக்கப்படவில்லை. நூற்று எண்பது லட்சம் ரூபாய் ரூரல் வொர்க்சுக்கு என்று போடப்பட்டிருக்கிறது. அது ரொம்பவும் குறைவு. அதையும் உயர்த்தவேண்டும். முக்கியமாக விவசாயத்திற்கு அதிகமாக உயர்த்தாவிட்டால் போதுமான உணவு உற்பத்தியாகாது. இன்னும் விவசாயிகளுக்கு மின்சாரத்திற்காக ஆன்யுவல் மினிமம் என்று இருக்கக்கூடிய சார்ஜை கண்டிப்பாக ரத்து செய்துவிட வேண்டும். அதனால் அவர்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். பம்பு செட்டுகள் வைத்திருக்கிறார்களே தவிர கிணறுகளில் ஜலம் இருப்பது இல்லை. ஆகவே இதை தீர்க்காலோசனை செய்து ஆன்யுவல் மினிமம் என்பதையே ரத்து செய்யவேண்டும் என்று சொல்கிறேன்.

இன்னும் முக்கியமாக நம்முடைய சர்க்காரிலே சிப்பந்திகள் செலவு எவ்வளவு என்று கொடுக்கப்படவில்லை. வருஷம் ஒன்றுக்கு மூன்றில் ஒரு பங்காவது—அதாவது 30 கோடி ரூபாயாவது ஆகும் என்று நான் நினைக்கிறேன். சிப்பந்திகள் சம்பளம் ஒரு பக்கம் அதிகமாய்க்கொண்டே போகிற தருணத்தில் நிர்வாகம் நல்லமுறையில் நடக்கின்றதா என்பதைப் பற்றிப் பார்க்கவேண்டும். எங்கே பார்த்தாலும் லஞ்ச ஊழல். பேப்பர்கள் போனால் சரிவர வருவதே இல்லை. இதன் காரணமாக கிராமவாசிகள் மிகவும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் இதைப்பற்றி அநேகமாக எல்லா சட்டசபை அங்கத்தினர்

13th December 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

களும் கூடச் சொன்னார்கள். இந்த ஊழல்களைத் தடுப்பதற்கு ஏதாவது செய்யவேண்டும். நிர்வாகத் திறனை அதிகப்படுத்த ஏதாவது செய்யவேண்டும்.

தவிர தொழிற்சாலைகள் என்று எவ்வளவுதூரம் நாம் ஏற்படுத்தினாலும், கனரகத் தொழில்கள் இங்கு வரவேயில்லை. நமக்கு மூலப் பொருள்கள் மிகவும் அவசியம். இரும்பு எவ்வளவு அதிகமாக நமக்குக் கிடைக்கிறதோ அவ்வளவுக்குத்தான் அதிகமாகத் தொழில்கள் வளர முடியும். அதிலே 'டிரான்ஸ்போர்ட் பாட்டில் நெக் ப்ராப்ளம்' வேறு இருக்கிறது. போதுமான ரயில்வே வாகன்கள் வசதி நமக்குக் கிடைக்கவில்லை. உப்பு மூட்டைகள் கூட ஏராளமாகத் தேங்கிக் கிடப்பதாக நமது சார்மென் அவர்கள் சொன்னார்கள். இந்தமாதிரியாக ரயில்வே போக்குவரத்து சாதன வசதி நமக்குத் தடையாக இருப்பதை நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஒரு பக்கம் நமது சர்க்கார் சிப்பந்திகளைப் போட்டு ஜியலாஜிகல் சர்வே நடத்தி வந்தாலும் இது போதுமான விரைவில் நடைபெறுவதில்லை. போதுமான உத்தியோகஸ்தர்களும் கிடையாது. இதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். இன்னும் குளம் 'ஸில்ட்' எடுப்பது சம்பந்தமாக நாம் சூப்பிரண்டெண்டிங் என்ஜினியர் ஸ்டாப் எல்லாம் போட்டு பரிசீலனை செய்கிறோம். அது ஆமை வேகத்தில்தான் போகிறதேயொழிய துரிதமாக நடைபெறவில்லை. காவேரி, மேட்டூர் பகுதியில் இந்தப் பிரச்சனையை துரிதமாகக் கவனிக்கவேண்டும், டாம் போடுவது அவசியமா இல்லையா என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். அதோடு வடக்கே போனபோது பக்ராநங்கல் முதலிய திட்டங்களைப் பார்த்தோம். அங்கே கனல் சிமின்டினாலேயே லைனிங் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியே இங்கும் செய்ய யோசிக்க வேண்டும்.

அப்படிப் போடுவதால் வாட்டர் வேஸ்டேஜை தடுக்க முடியும். பரம்பி குளத்தில் லைனிங் செய்து வருகிறார்கள். அது மெச்சத்தக்கது. மேட்டூர் கனல் போன்றவைகளிலும் துரிதமாக லைனிங் செய்யவேண்டும். அதனால் வாட்டர் வேஸ்டேஜைத் தடுக்கலாம். ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பரம்பிக்குளத் திட்டம் நல்ல முறையில் நிறைவேற்றப்படயிருக்கிறது. அதற்கு வேண்டிய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்பர் பெரியாறு, பாலாறு போன்றவைகளையும் முடிவாக பரிசீலனை செய்து நாம் ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். நீர்ப்பாசனத் திட்டங்களை எவ்வளவு துரிதமாக எடுத்து நிறைவேற்றுகிறோமோ அதற்குத் தகுந்தபடிதான் உணவு உற்பத்தியையும் துரிதமாக பெருக்க முடியும். மத்திய சர்க்காரிடம் வாதாடி இன்டர் ஸ்டேட் போர்ட்ஸ் நிறுவி தண்ணீர் சர்ப்ளஸாக இருக்கக்கூடிய பெங்காலிலிருந்து தண்ணீரைக் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும். ஸோனல் கௌன்ஸிலில் இதுபற்றி விவாதம் நடக்கிறது என்று கூறினாலும் அது ஆமை வேகத்தில்தான் போகிறது. ஆக, கால

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [13th December 1961

தாமதம் ஏற்படுவதால் மக்களுக்கு அதிருப்தி ஏற்படுகிறது. சென்ட்ரல் போர்ட் மாதிரி நிறுவி இன்டர் ஸ்டேட் வாட்டர் தகராறுகளைத் தீர்க்க ஏதாவது வழி செய்யவேண்டும். எங்கள் பிராந்தியத்தில் இந்த ஆண்டு மழையேயில்லை. ஒரு தாலுகாவில் பாதியிடத்தில் மழையில்லாது இருக்கிறது. ரெவன்யூ ஆபீஸர், கலெக்டர் எல்லோரும் சுற்றிப் பார்த்து வருகிறார்கள். ஆகவே, இந்த பஞ்சப் பிரதேசங்களுக்கு செய்ய வேண்டிய உதவிகளை சீக்கிரமாக செய்து கொடுக்கவேண்டும். பின்னர், விலைவாசி உயர்வு பற்றி சொல்லப்பட்டது. அதுபற்றி சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் அல்லது எடுக்கப்போகிறார்கள் என்பதுபற்றி திட்டவட்டமாகச் சொல்லவேண்டும். உப்பு விலை ஏற்றத்தைப் பற்றியும் சொன்னார்கள். நாளுக்கு நாள் பொருள் களின் விலைகள் ஏறிக் கொண்டே போகிறதே தவிர குறையக் காணவில்லை. ஆகவே விலைவாசிகளைக் குறைப்பதற்கு ஏதாவது வழியுண்டா என்பதுபற்றி சர்க்கார் தீர்க்க ஆலோசிக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். கண்ட்ரோல் போட்டால் விலை ஏறுகிறது, கண்ட்ரோல் இல்லாமல் செய்வதா, கண்ட்ரோல் போட்டால் என்னென்ன கெடுதல்கள் வரும் என்றெல்லாம் சிந்தித் துப் பார்த்து விலைகளைக் குறைப்பதற்கு வழி தேடவேண்டும். பெப்ரவரி 15-க்கு மேல் தேர்தல் நடக்கப் போகிறது. அது "ப்ரீ அண்ட்ஃபேர் எலெக்‌ஷனாக" (free and fair election) நடக்கவேண்டும். ஊழல்கள் இருக்கக்கூடாது. சர்க்கார் உத்தி யோகஸ்தர்கள் எப்படி நடக்கவேண்டுமென்று உத்தரவு போட் டிருக்கிறார்கள். ஆளும் கட்சியினருக்கு சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று முக்கியமாக போலீஸார் கருதுகிறார்கள். அப்படிச் செய்தால் மக்களிடம் அதிருப்திதான் வளருமே தவிர அது ஆளும் கட்சியினருக்கு நன்மை செய்வதாகாது. ஆகவே, "ப்ரீ அண்ட்ஃபேர் எலெக்‌ஷன்" நடைபெறுவதற்கு அமைச்சர் கள் பிரத்தியேக கவனம் செலுத்தவேண்டும். சர்க்கார் இதற்காக ஒரு சீனியர் ஆபீஸரைப் போட்டு அப்போதைக்கப்போது வருகிற குறைகளை நிவர்த்தி செய்யவேண்டும். மற்ற குறைகளைப் பற்றி அநேகர் சொன்னார்கள். தேர்தல் நன்கு நடைபெற ஆவன செய்யவேண்டும்.

(Deputy Speaker in the Chair.)

நிதியமைச்சர் அவர்கள் பத்து ஆண்டுகளாக பைனான்ஸ் டிப்பார்ட்மென்ட் பொறுப்பை ஏற்றெடுத்து நன்கு பணியாற்றி வருகிறார்கள் என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது. அவர் கள் கடைசியாக இந்த பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள். அநேகவித திட்டங்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் சமர்ப்பிக்கப்படுவதைவிட இது நன்றாக அமைந்திருக்கிறது. நானே அதுபற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த பட்ஜெட்டை எந்தளவு நல்ல முறையில் சமர்ப்பிக்கப்படவேண்டுமோ அந்தளவில் சமர்ப்பித்திருக்கிறார் கள் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

13th December 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த பத்தாண்டுகளிலே பட்ஜெட் விவாதத்திற்கு பதில் சொன்னதை விட இந்த ஆண்டு பதில் சொல்வதில் ஒரு சங்கடமான நிலைமை இருப்பதை நான் உணருகிறேன். அதற்கு முக்கிய காரணம், எதிர்ப்பும் தாக்குதல்களும் இருப்பதற்குப் பதிலாக பொதுவாக பாராட்டுதல்கள் இருந்ததுதான் அதற்குக் காரணம். எப்பொழுதுமே எதிர்ப்புக்கும் தாக்குதல்களுக்கும் பதில் சொல்வது சுலபம். பாராட்டுதல்களுக்கு பதில் சொல்வது ரொம்ப கடினமான காரியம். ஒருசில தாக்குதல்கள் இருந்தாலும் கூட, அந்த தாக்குதல் முறையில் இன்று நான் பதில் சொல்வதற்கில்லை. ஆகவேதான் ஒரு சங்கடமான நிலைமை என்று கூறினேன். இந்த பட்ஜெட் விவாதத்தில் இரண்டு கட்சித் தலைவர்கள் பங்கு கொள்ளவில்லை என்பது எனக்கு ஒரு குறை. கல்யாணசுந்தரம் அவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் உடல் நிலை காரணமாக இங்கு பங்கெடுத்துக் கொள்ள முடியவில்லை. நான் இங்கிருக்கக் கூடிய அங்கத்தினர்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கிறேன் என்று சொல்ல விரும்புகிறேன். அவர்களது உடல்நிலை கூடிய சீக்கிரம் நன்றாகி பொது வாழ்க்கையில் தொடர்ந்து பணியாற்றக் கூடிய நிலை ஏற்படவேண்டுமென்ற எங்கள் எண்ணத்தை தெரிவித்துக் கொள்வதுடன், எனக்கு கடவுள் பேரில் நம்பிக்கையிருப்பதால் நான் கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன். இன்னொரு தலைவர் இதைவிட முக்கியமான பணியாக வெளியேயிருக்கிற காரணத்தினால் அவர்கள் இங்கு வந்து பங்கெடுத்துக் கொள்ள முடியவில்லை. இன்னும் இரண்டு நாட்கள் இருக்கின்றன. அதற்குள்ளாகவாவது வந்து அவர்களது கருத்துக்களைத் தெரிவிப்பார்கள் என நம்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கைபற்றி எதிர்கட்சிகளிலிருந்து குற்றம் சொல்லக்கூடிய முறையில் சொன்னது, இது ஒரு தேர்தல் அறிக்கைபோல் இருக்கிறது என்று, அல்லது தேர்தல் விளக்க அறிக்கைபோல் இருக்கிறதென்று, பலர் குறிப்பிட்டார்கள். அவ்வாறு குறிப்பிட்டதே இந்த அறிக்கைக்கு ஒரு பாராட்டு என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஏனெனில் இது மக்களுக்கு நல்லது செய்யக்கூடிய ஒரு அறிக்கையாக இருக்கக்கூடிய காரணத்தினால், இதில் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய பல திட்டங்கள் இருக்கக்கூடிய காரணத்தினால் இதை தேர்தல் விளக்க அறிக்கை என்றோ தேர்தல் நிலை அறிக்கை என்றோ உணர்ந்து சொன்னாலும் அல்லது குழப்பத்தால் சொன்னாலும் இவ்வாறு குறிப்பிட்டதில் இருந்து இதில் பல நல்ல திட்டங்கள் அடங்கியிருக்கின்றன என்பதை ஓரளவு அவர்கள் ஒப்புக் கொண்டமாதிரியாகிறது. தேர்தல் பக்கத்தில் இருக்கும் போது இந்த அறிக்கையில் இவ்வளவு திட்டங்களை சேர்த்திருப்பானேன், மக்களிடம் ஓட்டு பெறுவதற்காக இவை சேர்க்கப்பட்டதென்று குறிப்பிட்டார்கள். எப்பொழுதுமே ஒரு சர்க்கார் எல்லா மக்களுடைய ஆதரவையும் பெறுவதற்கு நல்ல காரியங்களைத்தான் செய்யவேண்டும். அப்படி எடுத்துக்

[Sri C. Subramaniam] [13th December 1961]

12-30 p.m. கொண்டால், இன்றைக்கு மட்டுமல்ல, திட்டங்கள் கொண்டு வந்தது. முன்னால் தேர்தல் முடிந்த பிறகு, முதல் வருஷத்திலிருந்து பார்த்தால்கூட பல புதிய இதைப் போன்ற திட்டங்களை, மக்களுடைய க்ஷேம நலனை வளர்க்கக்கூடிய திட்டங்களை, வருஷத்திற்கு வருஷம் புதிய புதிய திட்டங்களை புகுத்திக் கொண்டு வருவதைப் பார்க்கலாம். அப்படித்தான் செய்துகொண்டு வருகிறோம். அதே தொடர்ச்சியாகத்தான் இதுவும் இன்றைக்கு வந்திருக்கிறதே தவிர, மீதி ஆண்டுகளிலே ஒன்றுமே இல்லாமல், ஒன்றுமே செய்யாமல் ஏதோ இந்த தேர்தலுக்காக மட்டும் புதிய திட்டங்களை கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னால், அப்போது ஏதாவது குற்றச்சாட்டிற்கு இடமிருக்கலாம். ஆகவே, இன்றைக்கு நான் கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், சென்ற ஐந்தாண்டுகளின் நிதி நிலைமை அறிக்கைகளைப் பாருங்கள். அப்படி ஒவ்வொரு ஆண்டின் நிதி நிலைமை அறிக்கையைப் புரட்டிப் பார்ப்பீர்களானால், பல முக்கியமான திட்டங்களை, புதிய புதிய திட்டங்களை ஒவ்வொரு ஆண்டும் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்து வந்திருக்கிறோம் என்பதைப் பார்க்கலாம் என்பதைத்தான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அந்த முறையிலே பல திட்டங்களை அவ்வப்போது கொண்டு வந்திருக்கும்போது, தேர்தலுக்காக மட்டும் என்று சொல்வது தவறான கருத்தாகும். ஏன், சில சமயங்களில் எப்போது நல்ல காரியங்கள் செய்தாலும்கூட, அது மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்காக என்று குற்றம் சொல்லக்கூடியவர்களும் நம் நாட்டிலே இருக்கிறார்கள். எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது, பெரிய வெள்ளம், புயல் ஏற்பட்டு மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய காலத்திலே, நம்முடைய முதன் மந்திரி அவர்கள் சிரமத்தைப் பாராமல் மக்களிடையே சென்று பல நல்ல காரியங்களை செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும்போதுகூட, இதெல்லாம் தேர்தலுக்காக என்று அன்றைக்குக் குற்றம் சொன்னவர்களும்கூட இருக்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது, அவர்களுக்கு இந்த முறையிலே சர்க்கார் நன்றாக இயங்குகிறது என்று சொல்ல வேண்டுமானால், மக்களைப் போதுமான கஷ்டத்திற்கு ஆளாக்கி, அவர்களுடைய விருப்பு வெறுப்பைப் பெற்றால்தான், அதைப் பார்த்து சர்க்கார் நல்ல முறையிலே நடக்கிறது என்று திருப்தி அடைவார்கள். ஆனால், நாமோ மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்காக நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். அப்படிச் சொல்வது, எதிர்க் கட்சிக்காரர்களுக்கு சிறிது கஷ்டமாக இருக்கிறது. ஆகவேதான் அவர்கள் இந்தத் தேர்தலை முன்னிட்டு, இந்த ஒரு பென்ஷன் திட்டமே வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படிச் சொன்னால், நாமும் சொல்ல முடியும், விதவைகளுடைய ஓட்டைப் பெறுவதற்காகத் தான் இதிலே விதவைகளையும் சேர்க்க வேண்டுமென்று சொல்கிறார்கள் என்று சொல்லலாம். இதைத் தமாஷுக்காகத்தான்

13th December 1961] [Sri C. Subramaniam]

சொல்ல முடியும். ஆனால் அந்த எண்ணத்தோடு சொல்ல வில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. இந்த பென்ஷன் திட்டத்திலே இன்னும் யார் யாரைச் சேர்க்கலாம், யார் யாருக்கு மேலும் உதவலாம் என்பதை உணர்ந்துதான், கஷ்டப்படக் கூடியவர்களுக்கு உதவலாம் என்பதற்காகத்தான் இதைச் சொன்னார்கள். ஆனால், வெகு சுலபமாகச் சொல்லி விடலாம், ஏதோ வருகின்ற தேர்தலை உத்தேசித்துதான் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று (சிரிப்பு). இது சிரிக்கக்கூடிய விஷயமல்ல. தமாஷுக்கு எதை வேண்டுமானாலும் சொல்லிவிடலாம். ஆனால் அந்த முறையிலே நான் இதை எடுத்துக் கொள்ளவில்லை. இன்னும் பலர் கஷ்டப்படக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையையும் பரிசீலனை செய்து, இன்னும் யார் யாரை யெல்லாம் இந்தத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ளலாம், இன்னும் சிறந்த முறையிலே இந்தத் திட்டத்தை தொடர்ந்து நடத்தலாம் என்ற அளவில் கூறப்பட்டுள்ள யோசனையாகவே நான் எடுத்துக் கொள்கிறேன். ஆகவே, இதை தேர்தலை ஒரு குறிக்கோளாகக் கொண்டு, கொண்டு வந்திருக்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. இன்றைக்கு இந்த அடிப்படையில் சென்ற ஐந்தாண்டுகளில் நாம் சாதித்துள்ள சாதனைகளை வைத்துக்கொண்டு தேர்தலிலே நிற்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை எதிர்க் கட்சிக்காரர்கள் ஓரளவுக்கு ஒப்புக் கொள்கிறார்கள். ஆகவே, இப்போது இந்த கடைசி நேரத்திலே வந்து இந்தத் திட்டங்கள் மக்களுக்கு உதவும் வகையிலே போடப் பட்டுள்ளது என்பதை நான் ஓரளவுக்கு பெருமையோடு சொல்லிக் கொள்ள முடியும். ஆகவே, இந்த மாதிரி வந்திருப்பதை தேர்தல் அடிப்படையிலே வந்திருக்கிறது என்று சொல்வது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படித் திட்டங்களை நிறைவேற்றும்போது, அடுத்த ஆண்டிலே நிறைவேற்றுவதற்குள்ளத் திட்டங்களை அடுத்து வரும் சர்க்காருக்கு விட்டுவிடலாமே என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி அடுத்த சர்க்காருக்கு விட்டுவிடுகின்ற முறையிலே அங்கத்தினர் பேசும்போது, இந்தக் கட்சி அரசாங்கம்தான் அடுத்தும் இருக்கப் போகிறது என்று பொருள்பட பேசினார்கள். இப்படிப் பேசிய கனம் அங்கத்தினர் சசிவர்ணத் தேவர் அவர்கள், அடுத்த ஆண்டுக்கு என்னென்ன வரி போடப் போகிறார்கள் என்பதையும் சொல்லிவிடக்கூடாதா என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆகவே, சசிவர்ணத் தேவர் அவர்கள் இதை உணர்ந்துதான் பேசுகிறார்கள் என்பது நன்றாக தெரிகிறது. அடுத்த தேர்தலுக்குப் பிறகு என்ன நிலைமை ஏற்படப்போகிறது, எந்தக்கட்சி இருக்கப் போகிறது என்ற அடிப்படைகளை உணர்ந்துதான் இப்படி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது ஒருபுறமிருக்க, சில திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இப்போதிலிருந்தே அதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்தால்தான், 1-ம் தேதி ஏப்ரலுக்குப் பிறகு நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு முடியும். திட்டங்களை நிறுத்தி வைத்து, அதற்குப் பின்னாலே பரிசீலனை செய்து முடிவு

செய்து கொள்ளலாம் என்று சொன்னால், திட்டங்களை பின்னால் நிறைவேற்றுவதிலே காலதாமதமாகி விடும். அந்த அடிப்படை யிலே பரிசீலனை செய்ததில், அடுத்த ஆண்டிலிருந்து அமுலுக்கு கொண்டு வரவேண்டிய கல்வித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இப்போதே அதற்கான முடிவு செய்து, அதற்கான காரியங்கள் செய்வதற்கு நாம் இன்றைக்கு வழி செய்திருக்கிறோம். அந்த முறையிலேதான் பல புதிய திட்டங்களை இந்த இடைக்கால அறிக் கையிலே சேர்க்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, இந்த பட்ஜெட்டைப் பற்றி பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அதிலே எனக்கிருந்த ஒரு ஆசை நிறை வேறாமல், இந்தப் பதவியிலிருந்து விலகிக் கொள்ள இருக்கி றோமே என்று எனக்கு ஒரு வருத்தமும்கூட. உங்களுக்குத் தெரியும், கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் 100 ரன்கள் எடுத்தால்தான் அதிலே அவர்களுக்கு ஒரு திருப்தி ஏற்படும். 99 ரன்கள் எடுத் தாலும்கூட, அதிலே ஒரு திருப்தி கிடையாது. அதைபோல எனக்கு ஒரு ஆசை இருந்தது. நம்முடைய ராஜ்யத்தின் பட்ஜெட்டை 100 கோடி அளவுக்கு கொண்டு வரவேண்டுமென்று. அதை என்னுடைய காலத்திலேயே ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணினேன். ஆனால், 99 கோடியே 67 லட்சம் என்ற அளவுக்குத் தான் இப்போது வந்திருக்கிறது. அடுத்த ஆண்டாக இருந்தாலும், 100-க்கு மேலாகி விடும். இப்போது இருக்கக்கூடியது 100-க்கு சற்று குறைவாக இருக்கிறது என்பதுதான். ஆனால், ஸ்ரீ கல்யாண சுந்தரம் அவர்கள் குறிப்பிடுவதுபோல், இதுவே முழு பட்ஜெட் டாக, மே, ஜூன் மாதத்தில் வரும்போது 100 கோடிக்கு அதிகமாக இருக்குமென்பதிலே சந்தேகமில்லை. இன்றைக்கு இந்த அளவுக்கு செலவினம் உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், பல்வேறுத் திட்டங்களை, பணிகளை நம்முடைய ராஜ்யத்திலே ஏற்படுத்தி, அவைகள் நடைபெற்று வருகின்றன என்பதை நாம் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. கல்வியை மட்டும் நாம் எடுத்துக் கொள்வோமேயானால், அடுத்த ஆண்டிற்கு 23 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு பெரிய அளவிலே இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நம்முடைய முன் னேற்றத்திற்கே அடிப்படையானது கல்வித் திட்டம்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே அதற்கு 23 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதிலும், இதற்கு ஏற்படக் கூடிய செலவினம் மேலும் மேலும் உயர்ந்துகொண்டே போகும் என்பதிலே சந்தேகம் கிடையாது. இப்படி உயர்ந்து கொண்டு போவது மட்டுமல்ல அதற்குத் தகுந்த பலனும் நமக்கு கிடைக்கும் என்பதிலே சந்தேகமில்லை. கல்வியின் தரமும் மேலும் மேலும் உயர்ந்து, அப்படிப்பட்ட கல்வியின் மூலமாக வாழ்க்கைக்குப் பயன்தரக்கூடிய சக்தியை நம்முடைய வருங்கால தலைமுறையினர் அடைவார்கள். அத்தகைய முறையிலே கல்வித் திட்டம் அமை வதுதான் மிகவும் அவசியமாகும். வெறும் கல்வியை மட்டும்

13th December 1961] [Sri C. Subramaniam]

வளர்த்தால், அதிலே எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. ஆகவே, எப்படிப்பட்ட கல்வி பொருத்தமாக இருக்கும் என்பதை நாம் முதலிலே கருத்தில் கொள்ளவேண்டும். வெறும் கல்வியை வளர்ப்பதினால் மட்டும் சமுதாயம் வளர்ச்சி அடைந்துவிட முடியாது. அப்படி வளர்ச்சி அடைந்து விடுமென்று சொன்னால், நம்முடைய நாட்டிலே கேரளாவை எடுத்துக் கொண்டால், அப் போது அங்கு எந்தவிதமான குறையுமே இருக்கக்கூடாது. அந்த ராஜ்யம் மற்ற ராஜ்யங்களை விட சௌகரியமாக இருக்கவேண்டும். ஆனால் நாம் இன்றைக்கு என்ன பார்க்கிறோம். பல சிக்கலான பிரச்னைகள்தான் அங்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு கல்வியை வளர்க்க வேண்டுமென்று சொல்லும்போது, எப்படிப் பட்ட கல்வியை, எந்த முறையிலே வகுக்க வேண்டும், எப்படி எப்படி யெல்லாம் வகுத்தால் அது நாட்டில் சக்தியை வளர்க்க முடியும் என்பதை யெல்லாம் ஆராய்ந்துதான் முடிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர் கள், இந்தக் கல்வித் திட்டத்திலே அவ்வப்போது மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அடிக்கடி மாறுதல் ஏற்படவேண்டியது அவசியம் என்பதை வலி யுறுத்திச் சொல்லிக் கொள்ளுகிறேன். மாறுகின்ற உலகத்தில், மாறுகின்ற சூழ்நிலையில் ஏதோ ஒரு நிலையில் ஆரம்பித்துவிட்ட கல்வித் திட்டத்தை தொடர்ந்து நடத்திக்கொண்டே போக வேண்டும், மாறுதல் செய்யக்கூடாது என்றால், அதனால் நன்மை ஏற்படாது. மாறுகின்ற சூழ்நிலைக்கேற்ப, நம்முடைய அனுப வத்தை வைத்துக்கொண்டு, உலகத்தில் மற்ற சமுதாயத்தில் ஏற்படுகிற அனுபவத்தை வைத்துக்கொண்டு, அவ்வப்போது வேண்டிய மாறுதலை செய்வதற்கு நாம் தயங்கக்கூடாது என்பதை நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பல விஷயங்களில் சரியான மாறுதல்களை சரியான காலத்தில் செய்யாத காரணத்தினால், பல கல்விப் பிரச்னைகள் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் உணர்கிறோம். பின்னாலே வருகிறவர்களும் பழைய கல்வி மந்திரி போட்ட திட்டத்தையே நாம் நிறைவேற்றி வைப்போம் என்று கருத்துப்பட இருந்து விடாமல், நல்ல முறையில் பரிசீலனை செய்து அவ்வப்பொழுது அவசியமான மாறுதல்களைச் செய்ய முன்வருவார்கள் என்று நம்புகிறேன். அந்த நிர்வாகத்தை இன்னும் குறைகள் இல்லாமல் சிறந்த முறையிலே நடத்தவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித் தார்கள். எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, நிர்வாகம் மேலும் மேலும் திருந்துவதற்கு இடம் இருக்கிறது, மேலும் திருத்திக்கொள்ள இடம் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். அந்த முறையிலே திருத்திக்கொண்டு போவது தான் நம்முடைய நாட்டிற்கு நன்மை பயக்கும், அது மிகவும் அவசியம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு கல்வி அபிவிருத்திக்கான திட்டங்களிலே அதிகமாகச் செலவு செய்திருக்கிறோம்.

[Sri C. Subramaniam] [13th December 1961]

அதுமாதிரி சுகாதார வசதிகளை எடுத்துக்கொண்டால், அதுவும் வருஷா வருஷம் அதிக அளவிலே உயர்ந்து கொண்டே போகிறது. அதுவும் சென்ற 2, 3 ஆண்டுகளாக கணக்கிட்டால், சுகாதார, வைத்திய வசதிகளுக்காக நாம் அதிகமாக செலவு செய்து கொண்டு வந்திருக்கிறோம். அதன் மூலம் பல வசதிகள் மக்களுக்கு பரவலாக கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கல்வி ஒரு சிலருக்கு மட்டும் அல்லாமல், பலருக்கும் என்று கூட அல்லாமல், எல்லோருக்குமே என்ற முறையில் திட்டம் போடப் பட்டிருக்கிறது. அதேபோல்தான் வைத்திய வசதியைப் பொறுத்தவரையிலும், இன்றைக்கு ஒரு சிலருக்கு என்று இல்லாமல், பலருக்கும் என்ற அளவில் வந்திருக்கிறது. பலருக்கும் என்று மட்டும் அல்லாமல், எல்லோருக்கும் என்ற நிலையை அடை வதற்கு நாம் திட்டம் போட்டு வேலை செய்துகொண்டிருக்கிறோம். அதிலும் முக்கியமாக, கிராமப் பகுதியிலுள்ள மக்களுக்கு வசதி யாக, கிராமப் புறங்களில் வைத்தியசாலைகள் எந்த அளவுக்கு பெருகி இருக்கின்றன என்பதை நாம் கொஞ்சம் எண்ணிப்பார்க்க வேண்டும். முன்பிருந்த வைத்தியசாலைகள் ஒரு பக்கம் இருக்க, இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 144 'ப்ரைமரி ஹெல்த் செண்டர்ஸ்' ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. முன் பெல்லாம் டாக்டர்கள் இல்லை என்ற குறை இருந்துகொண்டிருந் தது. ஆனால், அவர்களுக்கு அதிக ஊக்கம் கொடுப்பதற்கு ஓரளவு ஊதிய உயர்வு அளித்தபிறகு, இன்றைக்கு எல்லா இடங்களிலும் டாக்டர்கள் கிடைத்து, அவர்கள் நல்ல முறையில் பணியாற்றிவரக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டு திட்ட கால முடிவுக்குள் 372 வட்டார வளர்ச்சிப் பகுதிகளிலும் இம் மாதிரி சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தி, அதன் மூலம் இன்றைக்கு கிராம மக்களுக்கு வசதி ஏற்பட இருக்கிறது என்பதை நாம் நன்றாக உணரவேண்டும். கல்வி அபிவிருத்தி எந்த அளவில் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க, எத்தனை பேர்கள் பள்ளிக்கூடத்திற்கு போகிறார்கள். எத்தனை பேர்கள் படித்தவர்களாக இருக்கிறார்கள் என்ற கணக்கை வைத்துச் சொல்லுகிறோம். அதேமாதிரி சுகாதார வசதி, வைத்திய வசதி எந்த அளவிற்கு பெருகி இருக்கிறது என்பதை எந்தக் கணக் கிலிருந்து சொல்ல முடியும் என்றால், முன்பு மக்களுடைய சராசரி வயது என்ன இருந்தது, இப்பொழுது சராசரி வயது என்ன இருக்கிறது என்பதைப் பார்த்துத்தான், சுகாதார வசதி வைத்திய வசதி எந்த அளவுக்குப் பெருகி இருக்கிறது என்று சொல்ல முடியும். சுகாதார வசதியுடன் உணவு வசதியினுடைய அளவும் எந்த அளவுக்கு பெருகி இருக்கிறது என்பதைப்பற்றி கணக்குப் போட்டுப் பார்க்கவேண்டும். அவ்வாறு கணக்குப் போட்டுப் பார்த்ததில், சுதந்திரம் அடைவதற்கு முன்னால் சராசரி வயது 27 ஆக இருந்தது, 1960-61-ல் 47-ஆக உயர்ந்திருக்கிறது. அதுவும் சென்ற 5 ஆண்டுகளிலே கணிசமாக சராசரி வயது 15 ஆண்டு களுக்கு மேலே உயர்ந்திருக்கிறது என்று நமக்கு கணக்கு கிடைத் திருக்கிறது. ஆகவே, மக்களுக்கு புதிய வசதிகள் செய்து

13th December 1961] [Sri C. Subramaniam]

கொடுக்கக்கூடிய முறையிலே சுகாதாரத் துறையிலும் வைத்தியத் துறையிலும் கணிசாமன அளவுக்கு இன்றைக்கு நாம் அதிகமாக செலவு செய்து வருகிறோம். அதன் காரணமாக வருஷா வருஷம் நம்முடைய வரவு செலவின் அளவை உயர்த்திக்கொண்டே போகிறோம். அதே மாதிரி போக்குவரத்து சாதனங்களை அபிவிருத்தி செய்வதிலும், மற்ற எல்லா துறைகளிலும் அபி விருத்திக்கு ஏற்பாடு செய்வதற்கு இன்றைக்கு நாம் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். அதனால் இன்றைக்கு மொத்தச் செலவு மதிப்பீடு 99 கோடி ரூபாய் அளவுக்கு, கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் அளவுக்கு வந்திருக்கிறது. அந்த அளவுக்கு மக்களுக்கு செய்யக்கூடிய பணிகளை விஸ்தரித்திருக்கிறோம் என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு பணிகளை விஸ்தரித்துக்கொண்டு போகும்பொழுது, செலவு அதிகமாகும்பொழுது, வரி இனங்களை எந்த அளவுக்கு உயர்த்தியாகவேண்டும் என்பதைப்பற்றி கவலை கொள்ளுவது இயற்கை. அதைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீ. ராமசுவாமி முதலியார் அவர்கள் துண்டு விழுவதைப்பற்றி குறிப்பிட்டார்கள். இப்பொழுது நடப்பு ஆண்டிலே ரூ. 6 கோடிக்கு மேல் துண்டு விழுகிறது. வருகிற ஆண்டுக்கு துண்டு விழுகிற தொகை ரூ. 6.96 கோடி அல்லது 7 கோடி ரூபாய் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். அந்த அளவுக்கு துண்டு விழுவதைப் பற்றி நாம் கவலை கொள்ளாமல் இருக்கமுடியாது என்பதைப்பற்றி நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதே சமயத்தில் இம்மாதிரி துண்டு விழும் பொழுது, ரெவின்யூ கணக்கில் துண்டு விழும்பொழுது, அந்தப் பணத்தையெல்லாம் ஒரு சமயம் கடன் வாங்கி வைத்து ரெவின்யூ கணக்கில் செலவழித்து விட்டோமா என்று கருத்துப்படும்படி சிலர் பேசினார்கள். இன்றைக்கு பட்ஜெட் தயாரிக்கும்பொழுது, பட்ஜெட் தயாரிப்பதற்கு ஒரு அடிப்படை முறையை வகுத்துக் கொள்ளுவது மிகவும் அவசியம். அந்த அடிப்படையில் வரவு செலவுத் திட்டத்தை அமைப்பதன் மூலம்தான் நாம் நல்ல முறையில் திட்டங்களை நிறைவேற்ற முடியும். ரெவின்யூ கணக்கில் இருக்கக்கூடிய தொகையை ரெவின்யூ வரவின் மூலம்தான் சரிக் கட்டவேண்டும். பட்ஜெட்டை அவ்வாறு தயாரிக்காமல், கடன் வாங்கி அல்லது வேறு வகையில் அதைச் சரிக்கட்டுவது என்று சொன்னால் சரியல்ல. ரெவின்யூ வகையிலே ஏற்படக்கூடிய செலவினங்களை, அன்றாட செலவினங்களை, வருடா வருடம் வரக்கூடிய வருமானத்தை வைத்துக்கொண்டு சரி செய்யக்கூடிய முறையில் நாம் பட்ஜெட்டை சரிக்கட்டவேண்டியது மிகவும் அவசியம் என்பதை நான் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ளுகிறேன். அதைத் தான் நமது லட்சியமாக வைத்துக்கொள்ள வேண்டும். அதைத் தான் பட்ஜெட் போட்டு செலவு செய்வதற்கு ஒரு முறையாக வைத்துக்கொள்ளுவது மிகவும் அவசியம். அப்படி சரிக்கட்டுவது வருஷா வருஷம் இருக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை. குறிப்பிட்ட காலத்தில் அதாவது ஐந்து வருஷங்களில், அல்லது பத்து வருஷங்களில், இப்பொழுது ஐந்தாண்டுத் திட்டம் போடுகிற

[Sri C. Subramaniam] [13th December 1961

காரணத்தினால், ஐந்தாண்டுகளுக்கு உள்ளாக, ரெவின்யூ வரவும், ரெவின்யூ செலவும் சரியாக இருக்கக்கூடிய முறையில் நாம் திட்டமிடமுடியும். அதுவே போதுமானதாக இருக்கும். அந்த முறையில் பார்க்கிறபொழுது, நான் பணியேற்ற பிற்பாடு, வரவு செலவு திட்டத்தை தயாரிப்பதற்கான பொறுப்பை ஏற்ற காலத்திலிருந்து, இதுமாதிரி அன்றாட ரெவின்யூ செலவினங்களுக்கு ரெவின்யூ வரவிலிருந்து இல்லாமல், வெளியிலே இருந்து செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி கணக்குப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். அப்படி பார்க்கும்பொழுது அவ்வாறு இல்லை. ரெவின்யூ இனங்களிலே இருந்துதான் அன்றாட செலவுகள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு ஆண்டுகளிலும் இந்த அளவுக்கு துண்டு விழுந்தாலும்கூட, சென்ற ஐந்தாண்டுகளிலே அதற்குப் போதுமான ரிசர்வ் நிதியை நாம் ஒதுக்கியிருக்கிறோம் என்பதை இன்றைக்கு சொல்லிக்கொள்ளுகிறேன். வெவ்வேறு இனங்களில் அந்தக் காலத்தில் ஒதுக்கி வைத்தோம். அதைக் காண்பிக்கும்பொழுது வேறு சிக்கல்கள் ஏற்படுகிற காரணத்தினால், வெவ்வேறு முறைகளிலே ஒதுக்கி வைத்திருக்கிறோம். 6 கோடி ரூபாய் நடப்பு ஆண்டில் துண்டு விழுகிறது, 7 கோடி ரூபாய் அடுத்த ஆண்டில் துண்டு விழுகிறது என்று சொன்னாலும், கடைசியில் பார்க்கும்பொழுது சுமார் 3 கோடி அளவுக்கு இருக்கும் என்று நாம் கணக்குப் போடுவதற்குக் காரணம், ரெவின்யூ கணக்கில் நாம் கணிசமாக ஓரளவுக்கு மிச்சப்படுத்தியிருக்கிறோம் என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதே மாதிரி கணக்குப் பார்க்கும்பொழுது சென்ற ஐந்து ஆண்டுகளை எடுத்துக்கொண்டால், 1956-57-ல், ரூ. 63 லட்சம் துண்டு விழுந்தது, 1957-58-ல் ரூ. 341 லட்சம் மிச்சம் ஆயிற்று. 1958-59-ல் ரூ. 159 லட்சம் மிச்சம். 1959-60-ல் ரூ. 53 லட்சம் மிச்சம். 1960-61-ல் ரூ. 94 லட்சம் மிச்சம். மொத்தம் கணக்குப்பார்த்தால், 63 லட்சம் ரூபாய் துண்டு விழுவதைக் கழித்துவிட்டால், ரூ. 5,84,00,000 ரெவின்யூ கணக்கில் மிச்சம் ஏற்பட்டிருக்கிறது சென்ற ஐந்து ஆண்டுகளிலே. அது மாத்திரமல்ல. கடனைக் கொடுப்பதற்காக வருஷத்திற்கு 5 சதவிகிதம், 10 சதவிகிதம் ஒதுக்க வேண்டும் என்று சட்ட ரீதியாக இருக்கிறது. அதற்கு மேலே ரெவின்யூ கணக்கில் ஒதுக்கியிருக்கிறோம். 1958-59-ல் ரூ. 199 லட்சம், 1959-60-ல் ரூ. 240 லட்சம், 1960-61-ல் ரூ. 300 லட்சம் அதாவது ரூ. 7,39,00,000 ரெவின்யூ கணக்கில் ரிசர்வ் நிதி ஒதுக்கியிருக்கிறோம். மொத்தக் கணக்கில் பார்க்கிறபொழுது ரூ. 13,33,00,000 ரெவின்யூ கணக்கில் மிச்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால், இப்பொழுது ரெவின்யூ கணக்கில் ரூ. 13 கோடி அளவுக்கு துண்டு விழுந்தாலும்கூட, ஏதோ கடன் வாங்கிய தொகையை அன்றாட செலவுகளுக்காக உபயோகப்படுத்திவிட்டதாக யாரும் சொல்ல முடியாது. என்னால் கூடியவரையில் இந்த ஐந்து ஆண்டுகளில், வரவுக்கும், செலவுக்கும் அதிகமாக செலவு செய்துவிடாமல், வருவாயை அனுசரித்துத்தான் செலவு செய்து வந்திருக்கிறோம், என்பதைத்

13th December 1961] [Sri C. Subramaniam]

தான் இந்தச் சபையில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எனக்கு அடுத்து இந்தப் பொறுப்பை ஏற்கிறவர்களும் அடுத்த ஐந்து ஆண்டுகளிலே, வருஷத்திற்கு வருஷம் சரிக்கட்ட முடியா விட்டாலும், 5 ஆண்டுகளை எடுத்துக்கொண்டால், ரெவின்யூ செலவும் ரெவின்யூ வரவும் சரியாக இருக்கிறது என்ற முறையில் திட்டங்களை வகுப்பதன் மூலம் காரியங்களைச் சரியாகச் செய்து கொண்டு போக முடியும். இல்லாவிட்டால், கடன் வாங்கி அன்றாடச் செலவு செய்தால், அது பட்ஜெட் செய்வதில் சரியான முறை இல்லை. அப்படி அன்றாடப் பணிக்குச் செய்தால், அது வரும் தலைமுறைக்கு, அதிகப் பளுவாக ஆகிவிடும். கடன் வாங்கு வது பற்றியும் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். தேர்தல் வருவதனால், கனம் சின்னதுரை அவர்களும் கடன் வாங்குவதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். குறைபாடுகள் என்று சொல்வதாக இருந்தால், விவாதத்தில் பங்குகொள்ளும் அங்கத்தினர்கள், அதிலும் முக்கியமாக தலைவர்கள் இந்த மாதிரி விவாதத் திற்குப் பதில் சொல்லும்போது சபையில் இருப்பதுதான் பார்லிமெண்ட் சம்பிரதாயம். பேசி விட்டு, "நான்பாட்டுக்குப் போய் விடுகிறேன்; எனக்கு ஏதோ வேலையிருக்கிறது" என்று சொல்வதானால், அது சரியில்லை. பதிலைக் கேட்க இருப்பதுதான் மிகவும் அவசியம். தொடர்ந்து இந்த சபையில் நல்ல மரபுகளை ஏற்படுத்த வேண்டும் என்ற காரணத்தினால் அதைச் சொல்கிறேன். அடுத்த ஆண்டில் வரும்போது அதை அங்கத்தினர்கள் மனதில் வைக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். பேசும் அங்கத் தினர்கள் எல்லோருமே இருப்பதுதான் பொருத்தம்; அதிலும் முக்கியமாகத் தலைவர்கள் இருப்பது மிகவும் பொருத்தமானது, அவசியமானதும்கூட. கனம் சின்னதுரைக்கு வேறு வேலைகள் இருக்கலாம். ஆனால், அதை ஒதுக்கிவைத்துவிட்டு, சபையில் இருப்பதுதான் அவசியம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அவர்கள் சொன்னார்கள் கடன் வாங்குவது பற்றி. கடன் வாங்குவதில் நாம் வரையறுத்துக் கொள்ள வேண்டும். ரெவின்யூ செலவுக்காக கடன் வாங்கி செலவு செய்வது என்பதோ அல்லது கடன் வாங்கி செலவழிக்க வேண்டியதற்கு ரெவின்யூ தொகையிலிருந்து அதிகமாகச் செலவழிப்பது என்பதோ முடியாது. ஏனென்றால், கடன் வாங்குவது என்பது, "காபிடல் அக்கௌண்ட்ஸ்" என்று சொல்லக்கூடிய, மூலதனச் செலவுகளுக் காக. அதற்காகத்தான் கடன் வாங்குகிறோம். மூலதனச் செலவு களெல்லாம் இன்றைக்கே உபயோகப்படுத்தப்பட்டு, அழிந்து போகக் கூடியது அல்ல. அவை தொடர்ந்து தலைமுறை தலைமுறை யாக இருக்கும், தொடர்ந்து நடக்கும். அப்படிப்பட்ட பணி களுக்கு ரெவின்யூ கணக்கிலிருந்து செலவு செய்வதானால், அது இப்பொழுது இருக்கும் சந்ததியாரை பிற்கால சந்ததிக்காக அதிகம் தியாகம் செய்யவேண்டும் என்று சொல்லும் முறையில் அமையும். மூலதனச் செலவினங்களுக்கு வரி போட்டு முழுவதும் செலவழிக்க வேண்டும் என்றில்லாமல், கடன் வாங்கி வட்டி கட்டக் கூடிய முறையில் மூலதனச் செலவுகளைச் செய்வதே சிறந்த முறை

[Sri C. Subramaniam] [13th December 1961

யாகும். அவ்வாறு பார்த்தால், நாம் செய்வது சரி என்று தெரியும். கடன் முழுவதுமே மூலதனச் செலவுக்கு செயல்படுத்தி விட்டு, வரியே போடாமல் இருந்தால் என்னவாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்கள். கனம் சசிவர்ணத் தேவரும் கடன் வாங்குவதைப் பற்றிச் சொன்னார்கள். (குறுக்கீடு.) அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இதையெல்லாம் எந்த அளவுக்குச் சொல்லலாம் என்று வரையறுத்துக் கொண்டுதான் சொல்கிறேன். சில விஷயங்களைச் சொல்லாவிட்டால், அவை அவசியமில்லை என்ற காரணத்தால் விட்டுவிடுகிறேன். அளந்து பார்த்துத்தான் சொல்கிறேன். ஆகவே, இன்றைக்குக் கணக்குப் பார்த்தால், எந்த அளவுக்குக் கடன் வாங்குகிறோம், எந்த அளவுக்கு மூலதனச் செலவுகள் செய்கிறோம் என்று பார்த்தால், அது சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்களைப் பார்த்தால் விளங்கும். கடன் எவ்வளவு, நமக்கு ஏற்படக்கூடிய "அஸெட்ஸ்" எவ்வளவு என்பதைப் பற்றி கணக்குப் போட்டு வைத்திருக்கிறோம். அது அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஐந்து வருஷங்களிலே, கடன் வாங்கி இருப்பதைவிட மூலதன அஸெட்ஸ் ரூ. 75 கோடி அளவுக்கு அதிகமாக ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று புள்ளிவிவரங்கள் மூலமாகத் தெரிகிறது. ஆகையினால், கடன் வாங்கி வருஷா வருஷம் செலவுகளுக்கு உபயோகிக்கவில்லை. இன்னொன்றையும் பார்க்க வேண்டும். அதற்கும் கணக்குப் போட்டு வைத்திருக்கிறோம். ரூ. 8 கோடி அளவுக்கு கடனுக்கு வட்டி கட்டி வருகிறோம் என்றால், வட்டி அளவுக்கு வருமானம் இருக்கிறதா என்று பார்த்தால், நாம் வட்டி கட்டுவதற்கு மேலாகவே, வேறு இனங்களிலிருந்து நமக்கு வட்டிவருகிறது என்பதை, வருமானம் வருகிறது என்பதை மனதில் வைத்துக் கொள்ளலாம். அப்படிப் பார்க்கும்போது நமக்கு வட்டிமூலமாக வருவது ரூ. 7.9 கோடி, வாங்கியிருக்கும் தொகைக்கு வட்டி ரூ. 6.96 கோடிதான். ஆகையினால், நாம் வாங்கும் கடனுக்கு வட்டி எப்படிக் கட்டப் போகிறோம், வரி போட்டு கட்டப் போகிறோமா என்றால், இல்லை. நாம் கொடுத்திருக்கும் கடன்கள், எலெக்ட்ரிசிடி போர்டுக்கு, முனிசிபாலிடிகளுக்கு, இண்டஸ்ட்ரீஸ்களுக்கு என்று வெவ்வேறு இனங்களில் கொடுத்திருக்கிறோம். ஆகவே, அந்த வகையில் வட்டிக் கணக்குப் பார்த்தால், நமக்கு நாம் கொடுக்கும் அளவுக்குமேல் வட்டி வருகிறது. நான் வருவாய் இனங்களைச் சொல்லவில்லை. ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட்டிலிருந்து வருவாய் வருகிறது; அக்ரிகல்சரிலிருந்து, பாரஸ்டிலிருந்து வரக்கூடிய வருவாயைக் கணக்கெடுக்கவில்லை. இதிலே, வருவாய் இனங்களும் அதிகமாக வேண்டும் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். விவசாயத் துறையிலிருந்து அல்லது பஸ் போக்குவரத்திலிருந்து கிடைக்கக்கூடிய வருவாய் ஒரு பக்கம் இருக்க, வேறு இனங்கள் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்கள், விற்பனை வரியைப் பற்றி, அது வர வரக் குறைந்து வருகிறது என்று குறிப்பிட்டார்கள். கணக்குப் பார்த்தால் அவர்கள் சொல்வது சரியில்லை என்பது விளங்கும். அதை அவர்களே உணர்

வார்கள். அது வருடாவருடம் உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது. குறைந்ததாகக் கணக்கில்லை. இன்றைக்கு (ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார்: ரூ. 21 கோடி.) ஆம், அவர்களே கணக்கு வைத்திருக்கிறார்கள். அது ரூ. 11 கோடியிலிருந்து, இந்த ஐந்து வருஷத்தில், 21 கோடி அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அப்படி உயர்ந்திருக்கிறது என்று சொல்லும்போது, அது நாட்டிலே ஏற்பட்டு இருக்கக்கூடிய வளத்தையும் பிரதிபலிக்கிறது என்பதை உணருகிறோம். வியாபாரம், மக்கள் பொருள்களை வாங்குவது இவையெல்லாம் உயர்ந்திருக்கிறது. ஆகையினால், 11 கோடியிலிருந்து, 21 கோடி அளவுக்கு இன்றைக்கு வரியின் வருவாய் உயர்ந்திருக்கிறது. ஆனால் வரி விகிதம் அதிகமாகி விடவில்லை; சில இனங்களில் குறைத்துக்கூட இருக்கிறோம். ஆகவே, இதனால், வியாபாரம், மக்கள் பொருள்கள் வாங்குவது அதிகரித்திருக்கிறது. அப்படியென்றால், மக்கள் வாங்கும் சக்தி ஓரளவு உயர்ந்திருக்கிறது என்பதை மனதில் வைக்கவேண்டும்.

விவசாயத் துறையில் வருமானம் அதிகமாக வரவில்லை என்று சொல்லப்பட்டது. உண்மை. இதற்கு முன்பு கணக்கிலே விவசாயத்திற்காக மத்திய சர்க்காரிலிருந்து வந்த தொகையை, மானியத்தை வருமானமாகக் காட்டி இருந்தோம். ஆனால், இன்றைக்கு ஒரு துறைக்கு தனி மானியம் என்று சொல்லாமல், பொதுவாக மானியமாகக் கொடுத்து விடுவதால், அந்தந்தத் துறைகளில் குறைந்தாற்போல் காணப்படும். மேலும், விவசாயம், தொழில் முதலான துறைகளில் முன்பு இருந்ததைவிட குறைவாக வருமானம் தோன்றுகிறது என்றால், மானியங்களை அந்த அந்த துறையில் வருவாய் என்று காணாமல், வேறு இடத்தில் போட்டிருக்கிறது. இப்பொழுது காட்டிலாகாவை எடுத்துக் கொண்டால், கணிசமான அளவில் உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. பஸ் போக்குவரத்து பற்றிச் சொன்னார்கள். அதில் போதிய வருமானம் வருகிறது என்றாலும், வருடா வருடம் புதிய பஸ்கள் வாங்கியும், தேய்மான நிதியும் ஒதுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்தத் துறையில் ரூ. 2 லட்சம் குறைவு என்றால், வரும்படி குறையவில்லை. நான் சொன்ன இனங்களுக்குப் போக, நிகர லாபம் குறைவாக இருக்கிறது. பொதுவாக லாபத்தை மட்டும் பார்த்தால், வருடாவருடம் உயர்ந்துக் கொண்டே வந்திருக்கிறது. அதே சமயத்தில் கடன் வாங்கி திட்டங்களை நிறைவேற்றும் முறையிலும் ஓரளவுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் பணியாற்றி வந்திருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏதோ வெறும் புள்ளி விவரங்களைப் பார்த்து விட்டு திருப்தி அடையக்கூடாது என்பதைப் பற்றி அன்பழகன் குறிப்பிட்டார்கள். அதை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன். வெறும் புள்ளி விவரங்களை மட்டும் பார்க்கமுடியாது. புள்ளி விவரங்கள் இல்லாமலும் புரிந்து கொள்ளவும் முடியாது. இரண்டையும் வைத்துத்தான் நிலைமையைப் பார்க்கவேண்டியதாய் 1-00 p.m.

இருக்கிறது. அந்த முறையில் பார்க்கும்பொழுது ஒவ்வொரு துறையிலும் கணிசமான அளவுக்கு நாம் முன்னேற்றமடைந்திருக் கிறோம். நம்முடைய நாட்டிற்கு அடிப்படையாய் இருக்கக்கூடிய கல்வி, விவசாயம், தொழில், தொழிலுக்காக வழங்கக்கூடிய மின் சாரம், போக்குவரத்து சாதனங்கள் இவைகளையெல்லாம் எடுத்துப் பார்க்கும்பொழுது சென்ற பத்து ஆண்டுகளிலே நாம் கணிசமான அளவுக்கு முன்னேறியிருக்கிறோம் என்பதைக் குறித்து நாம் ஓரளவு திருப்தி அடையலாம். ஆனால் அது போதுமானதல்ல. இன்று நாம் பல திட்டங்களை ஆரம்பித்து இருக்கிறோம். ஆரம்ப கட்டத்தில் இருந்துக்கொண்டே, நமக்கு மேல் முன்னேற்றம் அடைந்திருக்கக்கூடிய பல நாடுகளின் வளர்ச்சியை அடிப்படை யாகக் கொண்டு இன்னும் அந்த அளவுக்கு நாம் வரவில்லையே என்ற முறையில் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இது எப்படியிருக்கிறது என்றால், இரண்டாவது வகுப்பில் படிக்கும் பையன், பத்தாவது வகுப்பில் படிக்கும் பையனுக்கு தெரிந்தளவு தனக்கு விஷயங்கள் தெரியவில்லை என்று அங்கலாய்த்துக் கொள் வதுபோல் இருக்கிறது. சுதந்திரம் பெற்றபிறகு நாம் இரண்டு திட்டங்களைத்தான் நிறைவேற்றியிருக்கிறோம். இந்த இரண்டு திட்டங்களை நிறைவேற்றுவதிலே நமக்கு பல சங்கடங்கள் ஏற் பட்டன. நமது நாட்டிலே மக்கள் நெரிசல் அதிகம். பிறநாடு களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது நம்முடைய தமிழ் நாட் டிலே ஒரு சதுர மைலுக்கு அதிகமான மக்கள் இருக்கிறார்கள். நாம் அதிக அளவு முன்னேறாததற்கு மற்றொரு காரணம் பல ஆண்டுகளாக நாம் அரசியல் அடிமைகளாக இருந்து மற்றவர் களால் சுரண்டப்பட்டோம். அதனால்தான் இன்றைக்கு நமக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வாறு இருந்தும் சென்ற பத்தாண்டுகளிலே நாம் முன்னேறியிருப்பதை கணக் கிட்டுப் பார்த்தால் நாம் பெருமைப்படக்கூடிய அளவுக்கு முன் னேறியிருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. "ஒன்றும் சாதிக்க வில்லை, ஒன்றும் சாதிக்கவில்லை" என்று பேசிக்கொண்டேயிருந் தால் நாம் தன்னம்பிக்கை இழந்தவர்களாக ஆகிவிடுவோம். தன்னம்பிக்கை இருப்பவர்கள்தான் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியும். "ஒன்றும் சாதிக்கவில்லை" என்று சொல்லுவ தால் நாம் தன்னம்பிக்கையை இழப்பதோடு மட்டுமல்லாமல் மக்களுடைய தன்னம்பிக்கையையும் இழப்பதற்கு வழி செய் கிறோம். அந்த முறையிலே பிரசாரம் செய்வதோ, அல்லது பத்திரிகைகளில் எழுத முற்படுவதோ நாம் திட்டங்களை நிறை வேற்றுவதை பாதிக்கும் என்பதை இந்த சட்டசபை முன்பு தெரி வித்துக் கொள்கிறேன். அந்த அடிப்படையிலே இதைப்பற்றி யோசித்துப் பார்க்கவேண்டுமென்று எல்லோரையும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திட்டங்களை நிறைவேற்றுவதிலே, குறிப்பாக இரண்டு ஐந் தாண்டுத் திட்டங்களை நாம் ஓரளவுக்கு வெற்றிகரமாக நிறை வேற்றியிருக்கிறோம் என்பதற்கு இன்றைக்கு புள்ளி விவரங்கள்

13th December 1961] [Sri C. Subramaniam]

கொடுக்கப்பட்டிருக்கின்றன. மதிப்பிட்ட 152 கோடி ரூபாய்க்கு பதிலாக இன்று நமது தமிழ் நாட்டு அரசாங்கம் சுமார் 187½ கோடி ரூபாய் அளவுக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அதே முறையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் கொடுத்த அளவுக்கு மேலே நிறைவேற்ற முடியும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பித்த இந்தக் குறுகிய காலத்திற்குள்ளே சுமார் 4 கோடி ரூபாய் அதிகமாக செலவழித்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். கடைசியாக வருகிற மார்ச்சு மாதத்திலே கணக்கு போடும் பொழுது இன்னும் ஒரு கோடி அதிகமாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அடுத்த ஆண்டு 55 கோடி ரூபாய் செலவு செய்யவேண்டுமென்று சொல்லும்பொழுது இன்னும் 5 கோடி ரூபாய் சேர்த்து கிட்டத்தட்ட 60 கோடிக்கு வரும். ஆகவே திட்டம் ஆரம்பித்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே சுமார் 110 கோடிக்குப் போய்விடும். மேலும் மேலும் செலவு அதிகரித்துக் கொண்டே போகும் என்பதில் சந்தேகமில்லை. அதே வேகத்தில் போனால் மூன்றாவது திட்டம் 291 கோடியில் நிற்காமல் அதற்கு மேலே போகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குமேலே போகவேண்டுமென்று சொன்னால் அதற்கான வசதிகளை பெறுவதற்கு தொடர்ந்து முயற்சி செய்து கொண்டு வரவேண்டும். அதிலே எந்தவிதமான வீண் விரயமும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியம். அந்த முறையிலே பல திட்டங்களை நிறைவேற்ற நாம் இன்று முயற்சித்து வருகிறோம். ஆரம்பத்தில் இருக்கக்கூடிய ஒரு சில குறைபாடுகளை கனம் அங்கத்தினர் அன்பழகன் சுட்டிக் காட்டினார். அதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கெங்கு குறைகள் இருக்கின்றனவோ அதை கனம் அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னால்தான் அந்தத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஒரு சிறிய குறையாயிருந்தாலும் எடுத்துச் சொல்கிறார்களே என்று மனதில் படும். ஊக்கமாக வேலை செய்வார்கள். ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரீஸ்களுக்காக திட்டம் போட்டதில் சுமார் 137 லட்சம்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று கணக்குக் கொடுத்தார்கள். அதிலே குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். தொழில் துறையிலே இந்தமாதிரி குறைவு ஏற்படுவது இதுதான் முதல் தடவை. இதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், இந்த சிறு தொழில்களுக்காக பல இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து வரவழைத்து அந்தத் தொழில்களை அமைக்கவேண்டியிருக்கிறது. காலாகாலத்தில் இயந்திரங்கள் வந்து சேர்ந்தால் போட்ட அளவுக்கு திட்டத்தை நிறைவேற்ற முடியும். ஆனால் அப்படி காலாகாலத்தில் இயந்திரங்கள் வரவில்லையென்று சொன்னால் இந்தப் பணத்தை செலவழித்துவிட முடியாது. அதனால் கணக்கு குறைகிறது. இருப்பினும் காலாகாலத்தில் இயந்திரங்கள் வருவதற்கும் ஏற்பாடு செய்தாகவேண்டும். அப்படி வராதது ஒரு குறைதான் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். குறிப்பாக

தொழில் துறையில் பல கட்டிடங்களை கட்டிவைத்து விட்டு இயந்திரங்கள் வரவில்லையென்று சொன்னால் தொழில் ஆரம்பித்து விட முடியாது. அந்த அளவுக்கு கட்டிடங்களின் மீது செலவழித்த பணம் "டெட் காபிடல்" ஆகப் போய்விடுகிறது. இதை மாற்றி அமைக்க வேண்டும். அதேமாதிரித்தான் ஒரு அணைக்கட்டு கட்டி வாய்க்காலில் தண்ணீர் போகும்பொழுது குடியானவர்கள் தயாராக இல்லையென்று சொன்னால் அதை ஒரு சிறந்த திட்டமாக கருத முடியாது. ஏதோ பணிகளைச் செய்து கொண்டு வருகிறோம் என்றுதான் கருத முடியும். திட்ட அடிப்படையிலே பல பணிகளைச் செய்யும்பொழுது ஒன்றுக்கொன்று பிணைந்து இருக்க வேண்டும். அதோடு அத்தியாவசியமான தேவைப்பொருள்கள் காலாகாலத்தில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மின்சார உற்பத்தியில்லையென்று சொன்னால் போட்ட திட்டம் நடக்காது. தேவையான அளவுக்கு மின்சாரத்தை வைத்துக் கொண்டு தொழில் வளர்ச்சி ஏற்படவில்லையென்று சொன்னால் அதுவும் நல்ல முறையில் திட்டம் போட்டதாக கருத முடியாது. ஆகவேதான் ஒன்றுக்கொன்று இணைப்பாய் இருக்க வேண்டும். அந்த முறையிலே ஏற்பாடு செய்தால்தான் வீண் விரயம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியும். அதற்காகத்தான் பலமுறைகளை நாம் கையாண்டு வருகிறோம். மூன்று மாதத்திற்கு ஒரு முறை நிறைவேற்றப்படும் திட்டங்களை பரிசீலனை செய்து அதிலே குறைபாடுகள் இருந்தால் திருத்திக் கொள்வதற்கு ஏற்பாடு செய்கிறோம். இது மாதிரி சில தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன என்பதை நான் உணருகிறேன். அந்தக் குறைகளை நீக்குவதற்கு நாம் ஏற்பாடு செய்து கொண்டே போக வேண்டும். அந்த முறையில்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் வெற்றிகரமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாக மூன்று துறைகளைப்பற்றி கவனிக்க வேண்டும். கல்வித் துறையைப்பற்றி நான் ஏற்கனவே சொல்லி விட்டேன். விவசாயத் துறை, தொழில் துறை இவைகளைப்பற்றி சில கருத்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத் துறையைப் பொறுத்தவரையில் போதுமான அளவு ரசாயன உரம் கிடைக்கவில்லை என்று பல அங்கத்தினர்கள் அதை ஒரு பெரும் குறையாக எடுத்துச் சொன்னார்கள். நாம் திட்டம் போட்டது சரியாக இல்லை என்பதற்கு இதை ஒரு உதாரணமாக எடுத்துச் சொல்லலாம். முதலிலே ஐம்பதினாயிரம் டன் வரவழைத்தபோது அந்த உரத்தை "நீ எடுத்துக் கொள்ள வேண்டும்" என்ற முறையிலே குடியானவர்களிடத்திலே பிரசாரம் பண்ண வேண்டிய நிலைமை இருந்தது. ஆனால் இன்றைக்கு ரசாயன உரத்தின் பலனை குடியானவர்கள் உணர ஆரம்பித்து விட்டதால் இன்னும் அதிகமாக வேண்டும் என்று கேட்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை நாம் முன் கூட்டியே ஆராய்ந்து பல ரசாயன உற்பத்தி தொழிற்சாலைகளை அமைத்திருந்தால் நல்லது. இங்கே சிந்திரி தொழிற்சாலையைப்

13th December 1961] [Sri C. Subramaniam]

பற்றி பேசுகிறோம். அந்த சிந்திரி தொழிற்சாலை ஆரம்ப காலத்தில் தொழில்துறை அமைச்சர் ஸ்ரீ. சியாமா பிரஸாத் முகர்ஜி அவர்கள் தொழில் அமைச்சராக இருந்தார்கள். ஒரு லட்சம் அல்லது 1½ லட்சம் டன் உற்பத்தி செய்வதற்கு திட்டம் போடப்பட்டது. பின்னர்தான் அது இரட்டிக்கப்பட்டது. அப்பொழுது நான் பார்லிமெண்டில் அங்கத்தினராய் இருந்தேன். இந்த சிந்திரி தொழிற்சாலையிலே முழு உற்பத்தி ஏற்பட்டால் நம்முடைய தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்து அந்நிய நாடுகளுக்கு ஏற்று மதி செய்யலாம் என்று அவர் சொன்னார். அப்பொழுது நாமும் அது சரிதான் என்று நினைக்கக்கூடிய நிலையில் இருந்தோம். எந்த அளவுக்கு அது தவறான கருத்து என்பதை இப்பொழுதுதான் உணர ஆரம்பித்திருக்கிறோம். இந்த ரசாயன உற்பத்தி தொழிற் சாலைகள் பெரிய அளவில் ஏற்படவேண்டுமென்பதற்காக தனியார் துறையிலும் இதை வைத்துக் கொள்ளலாம் என்ற அளவுக்கு நாம் இப்பொழுது ஏற்பாடு செய்து வருகிறோம். நெய்வேலியில் உரத் தொழிற்சாலைக்கு தேவையான இயந்திரங்களும்கூட வந்து அந்தத் தொழில் வேகமாக நிறைவேற்றப்பட்டு வருவதை நாம் பார்க்கப்போகிறோம். இன்னும் பல உர உற்பத்தி தொழிற்சாலை களையும் நம்முடைய ராஜ்யத்திலே ஏற்பாடு செய்யப்போகிறோம். அத்துடன் நீர்ப்பாசனத்தைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். எந்த அளவில் நம் மாகாணத்தில் நிறைவேற்ற முடியுமோ அந்த அளவு நிறைவேற்றியாகி விட்டது. இருக்கக்கூடிய ஆற்று நீரை யெல்லாம் உபயோகப்படுத்துவதற்கு வேண்டிய திட்டங்களை யெல்லாம் எடுத்து நிறைவேற்றியாகி விட்டன. அவற்றை யெல்லாம் ஓரளவு உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இனிமேல் இதர ராஜ்யங்களிலுள்ள உபரி நீரை எடுத்து உபயோகப்படுத்திக்கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் தான் எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்கு வேண்டிய முயற்சி களும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கு காரசாரமாக பேசி விட்டால் மட்டும் அதைக் கொண்டு வர முடியாது. அவர் களுடன் நல்ல முறையில் பேசி அதிகமாக நீர் பெருவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக் கிறது. அதற்கு வேண்டிய முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப் பட்டு வருகிறது. அந்த அளவில் இப்பொழுது பரம்பிக்குள திட்டம் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. அண்டை ராஜ்யங் களுடன் நல்ல முறையில் பேசிதான் அவற்றை இங்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதிலும் அங்கு உபரியாக இருக்கக்கூடிய தண்ணீரைத்தான் இங்கு கொண்டு வர முடியும். அவர்களுக்கு உபயோகம் இல்லாமல் வீணைப் போகக்கூடிய தண்ணீரைத்தான் நாம் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டும். விருப்பு வெறுப்பு இல்லாமல் சிநேக மனப் பான்மையில் பேசித்தான் கொண்டு வரவேண்டியதாக இருக்கிறது. இங்கு சப்தம் போட்டு பேசி விட்டால் மட்டும் கொண்டு வந்து விட முடியாது. இங்கு கேள்விகள் கேட்பதன் மூலமும், சப்தம் போடு வதன் மூலமும் கொண்டு வந்து விட முடியாது. இவர்களிடம்

[Sri C. Subramaniam] [13th December 1961

இருக்கக்கூடிய நியாயத்தை எடுத்துச் சொல்லித்தான் கொண்டு வரவேண்டும். அவர்களுக்கு நியாயத்தைச் சொல்லி அவர்களுக்கு போதுமான தண்ணீர் எடுத்துக்கொண்ட பிறகு மீதமுள்ள தண்ணீரைத்தான் இங்கு திருப்பி விடச் சொல்ல வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகளைத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அடிக்கடி கனம் முத்தையா செட்டியார் அவர்கள் காவேரி ஆற்று தண்ணீரைப்பற்றி சொல்லிக்கொண்டு வருகிறார். அப்படிச் சொல்லிக்கொண்டு வருவதோடல்லாமல் தாம் அடிக்கடி சொல்லிக்கொண்டு வருவதாகவும் ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாக தெரியவில்லை என்றும் புகார் சொல்லிக்கொண்டே இருக்கிறார். உடனடியாக எடுத்துக்கொண்டு நிறைவேற்றக்கூடிய திட்டம் அல்ல காவரி திட்டம். அவ்வளவு சுலபமாக முடித்துவிடக்கூடிய திட்டம் அல்ல அது. மைசூர் அரசாங்கத்திற்கும் நமக்கும் பொதுவாக இருக்கக்கூடிய திட்டம் அது. அவர்களுக்கும் நமக்கும் இதற்கு முன் ஏதோ ஒரு உடன்பாடு இருக்கிறது. அதன்படிதான் நாம் காவிரி தண்ணீரை எடுத்துக் கொள்ள வேண்டும். அதனால் உடனடியாக அந்த திட்டத்தை எடுத்து நடத்தக்கூடியதாக இல்லை. மைசூர் அரசாங்கத்துடன் கலந்து பேசி அதற்கு ஒரு முடிவு காண வேண்டியதாக இருக்கிறது. அவர்களுடைய தேவைக்கு அதிகமாக இருக்கக்கூடிய தண்ணீரைத்தான் நாம் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் இங்கே கொண்டு வந்த தண்ணீரை அங்கு மறுபடியும் கொண்டு போக முடியாது. கிருஷ்ணா, கோதாவரி நீரைப் பற்றியும் சொன்னார்கள் அவர்களுக்கு தேவையில்லாமல் சமுத்திரத்திற்குப் போகக்கூடிய தண்ணீராக இருந்தால் அதை எடுத்துக்கொள்வதற்கு நாம் முயற்சி செய்யலாமேயொழிய அவர்களுக்கு உபயோகப்படக் கூடிய தண்ணீரை நாம் எடுத்துக்கொள்வது என்பது முடியாது. அவர்களுக்கு உபயோகப்பட்ட பிறகு கீழே இருக்கக்கூடிய நமக்கு அது கிடைக்கும். அது சம்பந்தமான இப்பொழுது சமீபத்தில் வெள்ளம் வந்ததை வைத்துக்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசனை செய்து கொண்டிருக்கிறோம். ஐந்து வருஷத்திற்கு ஒரு தடவையோ அல்லது பத்து வருஷத்திற்கு ஒரு தடவையோ வெள்ளம் வந்தால் அப்பொழுது தண்ணீரை தேக்கி வைத்துக் கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அது இப்பொழுது பரிசீலனையில் இருந்து வருகிறது. அதனால்தான் இப்பொழுது ஹோகநகல்லில் ஒரு அணை கட்டலாமா என்று யோசனை செய்துகொண்டு வருகிறோம். அது தான் இப்பொழுது பரிசீலனையில் இருந்து வருகிறது. அதைப் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். இது சம்பந்தமாக சமீபத்தில் பார்லிமெண்டில்கூட கேள்வி கேட்கப் பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது என்றும் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. நாமாகவே எடுத்து நடத்தக்கூடிய திட்டம் அல்ல அது. இதைப்பற்றி மைசூர் அரசாங்கத்துடன் கலந்து பேச வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சிகளை நாங்கள் எடுத்துக்கொண்டு வருகிறோம். அங்கு நீர்

13th December 1961] [Sri C. Subramaniam]

தேக்கத்தைக் கட்டினல் உபரி தண்ணீரை தேக்கி வைப்பதோடு கூட அதன் மூலமாக ஏழு லட்சம் கிலோவாட் மின்சாரம்கூட உற்பத்தி செய்யலாம் என்றும் சொல்லப்படுகிறது. அதனுல் இந்த அணைக்கட்டு திட்டத்தை நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொண் டிருக்கிருேம் என்பதை கனம் அங்கத்தினர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இவற்றையெல்லாம் விருப்பு வெறுப்பு இல்லாமல் நல்ல முறையில்தான் பேசி முடிக்க வேண்டியதாக இருக்கிறது. அதிகமாக கூச்சல் போட்டு பேசினல் மட்டும் போதாது. கேள்வி கேட்டுவிட்டால் மட்டும் போதாது. நல்ல முறையில் அவர்களுடன் பேசி அவர்களுக்கு உபரியாக இருக்கக் கூடிய தண்ணீரைக் கொடுங்கள் என்று கேட்டுத்தான் செய்ய வேண்டியதாக இருக்கிறது.

அது மட்டுமல்ல இன்னும் விவசாய உதவி பெருவதற்கு விவசாயக் கல்லூரிகளை அமைக்க வேண்டும் என்றும் சொன்னுர் கள். கால்நடை கல்லூரிகளையும் அமைக்க வேண்டும் என்றும் யோசனை சொன்னுர்கள். அதற்கெல்லாம் வேண்டிய நடவடிக் கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுதான் வருகிறது. சாதாரணமாக விவசாயப் படிப்பு படித்து விட்டால் மட்டும் போதாது. படிப்பில் தான் இருக்கிறது என்று அநேகர் நினைத்துக்கொண்டிருக் கிருர்கள். விவசாயிகளுடைய பிள்ளைகள்தான் நல்லமுறையில் விவசாயம் செய்ய பயிற்சி பெற வேண்டும். அவர்களுக்குத்தான் ஊக்கம் அளிக்க வேண்டும். எப்படி தொழில் பயிற்சி பெற்ருல் நல்ல முறையில் அந்த தொழிலை நடத்த முடிகிறதோ அதே போன்று தான் விவசாயமும். விவசாயமும் ஒரு தொழில் என்றே கருத வேண்டியதாக இருக்கிறது. படிப்பு இல்லாமல் நல்ல விவசாயம் செய்ய முடியாது என்று மேல் நாடுகளில் கண்டு பிடித் திருக்கிருர்கள். யந்திரங்களை ஓட்டுவதற்கு எப்படி பயிற்சி பெற வேண்டியதாக இருக்கிறதோ அதைப்போலவே விவசாயம் செய் வதற்கும் பயிற்சி அவசியம் வேண்டியதாக இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு விவசாயினுடைய பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுக்க அங்கங்கே பயிற்சி நிலையங்களை ஏற்படுத்த வேண்டியதாக இருக் கிறது. அந்த அளவில் அங்கங்கே ஒவ்வொரு தாலுகாவிலும் விவசாய பயிற்சிப் பள்ளிகளை அமைக்க வேண்டும் என்று தோன்று கிறது. அந்த முறையில் விவசாயத்தை நல்ல முறையில் செய்ய முற்பட வேண்டும். அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழி ஏற்படும் என்றும் தோன்றுகிறது. அதற்கு அனுசரணையாக கூட்டுறவு திட்டங்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. இதைப் பற்றி முக்கியமாக கனம் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் தெரி வித்தார்கள். இவ்வளவு செய்தும் விலைவாசிகள் திடீரென்று உயருகிறதே என்று தெரிவித்தார். சில சமயங்களில் விலை கம்மி யாகிறதே என்றெல்லாம் கேட்டார். விலை அதிகமாக ஆகிறது என்றவுடன் அந்த பண்டத்தை உற்பத்தி செய்ய முற்படுகிருர்கள். அப்பொழுது எல்லோரும் ஒரே பண்டத்தை உற்பத்தி செய்யும் போது விலை குறைந்து போய் விடுகிறது. இதனுல் விவசாயி

[Sri C. Subramaniam] [13th December 1961

கஷ்டப்படுகிருன். இதற்குத்தான் கூட்டுறவு முறை அவசியம் என்று சொல்லப்படுகிறது. அதிகப்படியாக உற்பத்தியாகும் போது வியாபாரிகள் அவற்றை குறைந்த விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டு பிற்பாடு அதிக விலைக்கு விற்கிருர்கள். இதுவும் ஒரு காரணமாக இருக்கிறது விலைவாசிகளின் உயர்வுக்கு. இதை தடுப்பதற்குத்தான் கூட்டுறவு முறை அவசியம் என்று சொல்லப் படுகிறது. சாதாரணமாக வெல்ல விலை உயருகிறது என்று சொன்னல் உடனே எல்லா விவசாயியும் கரும்பு உற்பத்தி செய்ய ஆரம்பித்து விடுகிருர்கள். அப்பொழுது விலை குறைந்து போய் விடுகிறது. அதனல் விவசாயி கஷ்டப்படுகிருன். அதனல் விவ சாயிகளுக்கு குழப்பம் ஏற்படுகிறது. அதைப்போலவே மஞ்சள் விலை உயர்ந்து விட்டால் உடனே எல்லோரும் மஞ்சள் பயிரிட ஆரம்பித்து விடுகிருர்கள். மஞ்சள் அதிகமாக விளைச்சல் இருந்தால் அடுத்த வருஷம் விலை குறைந்து போய் விடுகிறது. இத் துடன் வியாபாரிகள் வேறு இதற்கு காரணமாக இருக்கிருர்கள். ஆகவேதான் அரசாங்கமே கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உற்பத்திப் பொருள்களையெல்லாம் வாங்கி அவற்றை தகுந்த விலைக்கு விற்க முன்வரவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படிக் கூட்டுறவு மூலம் வியாபாரம் செய்தால்தான் இதை சாதிக்க முடியும். ஆகவே கூட்டுறவு முறை மிகவும் அவசியம். அதற்குத்தான் அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது. ஆகவேதான் கிராமங்களில் கூடங்கள் கட்டிக்கொண்டு வருகிருர்கள். உற்பத்தியாகக்கூடிய பொருள்களை அங்கு சேமித்து வைக்க பிறகு அவைகளை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விற்க முயற்சி எடுத்துக்கொண்டு வருகிருர்கள்.

உற்பத்தி விஷயத்தில்கூட நமது ராஜ்யம் அதிகமான உற் பத்தியை செய்திருக்கிறது. அதைக்கண்டு நாம் பெருமைப்பட வேண்டியதாக இருக்கிறது. கணிசமான அளவில் உயர்ந்திருக் கிறது. அப்படியே தொடர்ந்து இருப்பதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நாம் தொழில் துறையில் கணிசமான அளவில் முன்னேற்றமடைந்திருக்கிறேம். மற்ற நாடுகளைப் பார்த்து இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் ரொம்பவும் பின்தங்கியதாக இருப்பதாகத்தான் தோன்றும். ஆரம்பத்தில் இருப்பதை கவனத்தில் எடுத்துக்கொண்டால் அதிகமாக முன்னேற்றமடைந் திருக்கிறேம் என்றுதான் தோன்றும். படிப்படியாக முன்னேறக் கூடிய நிலைமையை நாம் அடைந்திருக்கிறேம். சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளிலே தொழில் துறையில் நாம் பெருமை கொள்ளக்கூடிய அளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறேம் என்பதைக் குறித்துப் புள்ளி விவரங்கள் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. புள்ளி விவரமும் கொடுத்திருக்கிறேன். நாட்டைச் சுற்றியும் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன். சென்னை நகரப் பகுதியைப் பார்த்தாலும் சரி, கோயமுத்தூர் பகுதியைப் பார்த்தாலும் சரி, மதுரைப் பகுதியைப்

13th December 1961] [Sri C. Subramaniam]

பார்த்தாலும் சரி, மூன்று பகுதிகளோடு மட்டுமல்லாமல் மற்றப் பகுதிகளிலும் தொழில்களை வளர்க்க நாம் ஏற்பாடு செய்து வருகிறோம்.

அது மட்டுமல்ல. தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கும் மின்சாரத்திற்கு நாம் முதல் இடம் கொடுத்திருக்கிறோம் என்பதையும் நான் வலியுறுத்திச் சொல்கிறேன். சமீபத்தில் நமது நாட்டுப் பிரதம மந்திரி பண்டித நேரு அவர்கள் பேசும்போது, நாட்டினுடைய அபிவிருத்திக்கு அடிப்படையாக இருப்பது மின்சாரம் (பவர்) என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நல்லவேளையாக நாம் இதை முன்னமேயே உணர்ந்து சென்ற ஆண்டில் 50 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கியிருந்தும், 75 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் கணிசமான அளவுக்கு நாம் தொகை ஒதுக்கியிருப்பது மின்சாரத் திட்டங்களுக்காகத்தான். நாம் ஒதுக்கியிருப்பது மட்டுமல்ல. மத்திய அரசுத் துறையிலேகூட நெய்வேலியில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அதிகப் பணம் செலவழிக்க வேண்டும் என்று அவர்கள் அதற்காகத் தொகை ஒதுக்கிச் செலவழிக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது, மூன்றாவது திட்டக் காலத்திலே வேறு எந்த ராஜ்யத்திலும் ஏற்படாத அளவுக்கு மின்சார உற்பத்தி நம்முடைய ராஜ்யத்தில் ஏற்பட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதன் மூலமாக தொழில் வளர்ச்சிக்கும் நாம் இன்றைக்கு ஏற்பாடு செய்து வருகிறோம். தொழில் வளர்ச்சி என்று சொல்வது வெறும் மூலதனத்தை வைத்துக்கொண்டு மட்டுமல்ல. மூலப் பொருள்களை வைத்துக்கொண்டு மட்டுமல்ல. வெவ்வேறு கட்டத்தில் மக்கள் தேவைப்படுகிறார்கள். நிர்வகிக்கக் கூடியவர்கள், தொழில் நிபுணர்கள், இன்ஜினீர்கள், தொழிலாளர்கள் இவர்களெல்லோரும் தேவைப்படுகிறார்கள். இவர்களுக்கு ஏற்ற பயிற்சி கொடுப்பதற்கும் அந்த அந்தக் கட்டத்திலே ஏற்பாடு செய்து வருகிறோம். திட்டமிட்ட தொழிற் பயிற்சி எந்த அளவுக்கு ஏற்படுகிறதோ அந்த அளவுக்கு தொழில் வளர்ச்சியும் ஏற்படும். தொழில் படிப்பையும் நாம் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதற்காக முயற்சி எடுத்து வந்திருக்கிறோம், அந்த முறையில் முன்னேற்றம் அடைந்து வந்திருக்கிறோம் என்பதைப்பற்றி யாரும் சந்தேகப்படவேண்டிய அவசியமில்லை.

தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு போக்குவரத்துச் சாதனங்களும் நமக்கு ஏற்படவேண்டியதாக இருக்கிறது. முக்கியமாக, ரயில் பாதைகள் நமக்குப் போதுமான அளவு வரவில்லை என்று குறை கூறுகிறார்கள். ரயில் பாதைகள் அமைப்பதிலும் முயற்சி செய்து வருகிறோம். நாம் நல்ல வேளையாக ரயில் போக்குவரத்தையே பெரிதும் நம்பியிருக்கவில்லை. ரோடு போக்குவரத்துச் சாதனங்களைப் பெருக்கிக்கொள்வதிலே, ரோடுகள் அமைப்பதிலே, மற்ற ராஜ்யங்களில் இருப்பதைவிட நாம் ஓரளவு முன்னணியில் இருக்கிறோம் என்பதைப் பார்க்கிறோம். நான்

வெளிநாடுகளில் ஓரளவு சுற்றுப் பிரயாணம் செய்து, அங்குள்ள நிலைமைகளைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். நான் பார்த்த அளவில் சொல்கிறேன். அங்கு ரயில் போக்குவரத்தானது பின்னல் போய்க்கொண்டிருக்கிறது. ரோடு போக்குவரத்துதான் முக்கியமாக அதிகப்பட்டு, இருக்கும் ரயில் பாதைகளையும் பிடுங்கும் நிலைமை ஏற்பட்டு வருகிறது. அந்த அளவுக்கு ரோடு போக்குவரத்து அபிவிருத்தி அடைந்து வருகிறது. நம் நாட்டைப் பொறுத்தவரையில் நாம் அந்த நிலைமைக்கு வரவில்லை. .ரோடு போக்குவரத்தும் அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைப் பார்க்கிறோம். இதை நான் சொல்லும்போது ரயில் அவசியம் இல்லை என்று நான் கருதுவதாக நீங்கள் வைத்துக் கொள்ளக்கூடாது. ரோடு போக்குவரத்துச் சாதனங்களுக்குத் தான் முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். ரோடு போக்குவரத்திலும் நாம் அதிகக் கவனம் செலுத்தி, தொழில்களுக்கு நல்ல முறையில் போக்குவரத்துச் சாதனைகள் உதவி செய்யக்கூடிய முறையில் திட்டமிட்டு வேலை செய்து வருகிறோம்.

Sri M. KALYANASUNDARAM: அதற்கு ரயில்காரர்கள் இடைஞ்சல் பண்ணுமல் இருக்கவேண்டும்.

The Hon. Sri C. SUBRAMANIAM: ரோடு போக்குவரத்தை நாம் அதிகப்படுத்திக் கொண்டு வருகிறபோது, அது ரயிலுக்குப் போட்டியாக வருவதாகச் சொல்லி ரயில்வே இலாகாக்காரர்கள் அதற்குத் தடையாக இல்லாமலிருந்தாலாவது பரவாயில்லை என்று கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொல்கிறுர்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து அந்தக் கருத்தை வலியுறுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த முறையில் நாம் தொழில் துறையில் முன்னேறுவதற்காக முயற்சி செய்து வருகிறோம். இவ்வாறு பல்வேறு துறைகளில் முன்னேறி இந்த லட்சியத்தை அடைய விரும்புகிறோம் என்பதை மனதிலே வைத்துக்கொண்டு அதற்கேற்ற பணியை நாம் செய்தாக வேண்டும். அதைப்பற்றித்தான் கன்யாகுமரி அங்கத்தினர் திரு. ராமசாமி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். நாம் ஒரு க்ஷேமநல சர்க்காராக இருந்து, சோஷலிச சமுதாயத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம். சோஷலிச சமுதாயம் இப்போதே அமைந்துவிட முடியாது. அதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். அதை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் பாதையிலே மக்களுக்கு விரிவாக எந்த எந்த வசதிகளை ஏற்படுத்த வேண்டும், அந்த வசதிகளைப் பெருக்கிக்கொள்ளக்கூடிய வகையில் மற்ற பணிகளையோ திட்டங்களையோ ஏற்படுத்தவேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்துகின்றேன். அந்த அடிப்படையிலே இதிலே சொல்லியிருக்கும் பல திட்டங்கள், வாழ்க்கை வசதி பெருதவர்களுக்கு சலுகை கொடுக்கக்கூடிய முறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நம் நாட்டில் வாழ்க்கை வசதி பெருத

13th December 1961] [Sri C. Subramaniam]

வர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். அப்படித் தாழ்வான நிலையில், கீழான பொருளாதார நிலையில், பலவீனர்களாக இருக்கக் கூடியவர்களுக்குப் போதிய அளவு சலுகை கொடுக்கக்கூடிய முறையில்தான் அவர்களுக்கான சில திட்டங்கள் ஆரம்பமாகச் செய்யப்படுகின்றன.

கனம் அங்கத்தினர் திரு. அன்பழகன் அவர்களும், மற்ற கனம் அங்கத்தினர்களும்—இந்தப் பகுதியிலும் அந்தப் பகுதியிலும்—பேசினார்கள். இதில் குறிப்பிட்டிருக்கும் திட்டம் போதுமா? என்றும் அவர்கள் கேட்டார்கள். உதாரணமாக எடுத்துக் கொண்டால், முதியோர்களுக்கு உதவித் திட்டம் இருக்கிறது. அதைக் குறித்துப் பேசும்போது, '20 ரூபாய் போதுமா? 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டும் கொடுத்தால் போதுமா? கண் இழந்தவர்களுக்கு மட்டும் கொடுத்தால் போதுமா? 60 வயதுக்குக் கீழ் இருப்பவர்கள் என்ன ஆவது?' என்றெல்லாம் கேட்கப்பட்டது. இதுவரையில் அதுபோன்ற ஒரு திட்டமே கிடையாது. இப்பொழுது ஒரு ஆரம்பம் செய்கிறோம். இது மேலும் மேலும் விரிவாகிக்கொண்டே போகும். பத்து ஆண்டுகள், 15 ஆண்டுகளுக்குள்ளாக நாட்டிலே யாராக இருந்தாலும், அவர்களுக்கு அடிப்படையான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன, தேவை பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது என்ற நிலைமையை ஏற்படுத்தவேண்டும். அதற்கு ஆரம்பமாகத்தான் இது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முதியோர்களுக்கு உதவி கொடுப்பது என்ற முறையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. 65 வயதுக்கு மேற்பட்டு யார் யார் வசதி அற்று இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் உடனடியாக வசதி செய்ய வேண்டுமென்று சுலபமாகச் சொல்லிவிட முடியும். அதற்கு நிதி வசதி இருக்கிறதா என்பது ஒரு புறமிருக்க, இதை எப்படி நிர்வகிப்பது என்பதிலும் கஷ்டங்கள் இருக்கின்றன. இப்பொழுது ஆரம்பமாகச் செய்கிறோம். இதிலே ஏற்படும் அனுபவத்தை வைத்துக்கொண்டு மேலும் மேலும் விரிவாக்கக்கூடிய முறையில் நாம் பணியாற்றிக்கொண்டு போவது மிகவும் அவசியம்.

தொழில் படிப்புப் படிக்கின்றவர்களுக்கு வட்டி இல்லாமல் கடன் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அரசாங்க உத்தியோகஸ்தர்களின் குழந்தைகளுக்கு மட்டுமல்ல; ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு மட்டுமல்ல; எல்லா ஏழைக் குழந்தைகளுக்குமே இந்த வசதியைச் செய்து கொடுக்கவேண்டுமென்பது லட்சியம். ஆரம்பமாக இது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கனம் அங்கதினர் திரு. சதாசிவம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள், நாட்டுக்கு முதுகெலும்பாக இருக்கும் விவசாயிகளின் குழந்தைகளுக்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டும் என்று. அவருடைய கருத்தை நான் வரவேற்கின்றேன். நான் இதை உடனடியாக விஸ்தரிப்புச் செய்யாவிட்டாலும், அடுத்த முழு பட்ஜெட் இங்கு சமர்ப்பிக்கும் போது, ஏழை விவசாயிகளுடைய குழந்தைகளுக்கும் இந்தத்

திட்டத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று கருத்தை எனக்குப் பின்னல் வருகிற நிதி அமைச்சர் ஒத்துக்கொள்வார் என்று நம்பு கின்றேன். அந்த நம்பிக்கையோடு உறுதியளிக்கிறேன். அடுத்து வருகிறவரைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவு என்னுடைய உறுதியைச் சொல்ல விரும்புகிறேன். எல்லாத் தொழில் படிப் புக்கும் கடன் வழங்கும் திட்டத்தை ஏழை விவசாயிகளுடைய குழந்தைகளுக்கும் விஸ்தரிப்பதற்கு என்னுடைய அளவில் உறுதி சொல்வதோடு, இந்த உறுதியை, அடுத்து வருகிறவர்கள் நிறை வேற்றுவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. விவசாய மக்களுடைய குழந்தைகள் வெறும் விவசாயத்தையே நம்பிக்கொண்டிருக்கவேண்டும், நிலத்தையே நம்பிக்கொண்டிருக்க வேண்டும் என்ற நிலை இல்லாமல், அவர்கள் புதிய புதிய துறை களில் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இது நல்ல முறையில் உதவும் என்ற காரணத்தால், ஆசிரியர் களுக்கும் அரசாங்கப் பணியாளர்களுக்கும் அடுத்தபடியாக விவசாயக் குடும்பங்களில் இருக்கும் குழந்தைகளுக்கும் இதை விஸ்தரிப்பது என்பதை உடனடியாக ஒப்புக்கொள்ள முடியும். அதோடு மட்டும் நின்றுவிடாமல், அடுத்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எல்லா ஏழைக் குழந்தை களும் இம்மாதிரி படிப்புக்குப் போகும்போது கடன் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற முறையில் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாம் இத்தகைய திட்டங்களைப் போட ஆரம்பித்தவுடனே, 'ஏன் இந்த அளவுக்கு இருக்கவேண்டும்? ஏன் இன்னும் அதிக மாக்கக்கூடாது?' என்று கேட்பது இயற்கை. அதைப்பற்றி யாரும் தவருகச் சொல்ல முடியாது. ஒரு குறையை நீக்கவேண்டு மென்று சொல்லும்போது, அந்த குறையினுடைய அளவு தெரிய ஆரம்பித்துவிடுகிறது. குறையைக் கவனிக்காமலே இருக்கும் போது அதை விட்டுவிடுவோம். அந்தக் குறையைத் தீர்க்க வேண்டுமென்று ஆரம்பிக்கும்போது, சிறிய அளவிலே ஆரம்பிக் கும்போது, குறையினுடைய அளவு தெரிய ஆரம்பிக்கிறது. ஆகவே, எடுத்து இருக்கும் நடவடிக்கை போதாது என்ற நிலைமை ஏற்படுகிறது. அதுவும் ஒரு நல்ல அறிகுறிதான். நாம் செய்த திலேயே எல்லாம் சரியாய்ப் போய்விட்டது, இதற்குமேல் செய்ய வேண்டிய அவசியமில்லை என்ற மனே நிலை ஏற்பட்டுவிட்டால், தொழில் வளர்ச்சி தடைப்படும். நாம் இன்றைக்கு எடுத்திருக்கும் முயற்சி ஓரளவுதான். இதைப் பெருக்கவேண்டும் என்பதைப் பற்றி கனம் அங்கத்தினர் பலரும் உணர்ந்திருப்பது நல்ல அறிகுறி என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த முறையில் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை இங்கு சமர்ப்பித்திருப்பதைப் பொதுவாக இங்கிருக்கும் எல்லா கனம் அங்கத்தினர்களும் 'இது பரவாயில்லை' என்று சொல்லக்கூடிய அளவுக்காவது வரவேற்று, ஓரளவு இதை ஒப்புக்கொண்டிருப்பது திருப்தியை அளிக்கிறது. எனக்குப் பின்னல் வருகின்றவர்கள் இதைத் தொடர்ந்து—கனம் அங்கத்தினர்களுக்குத் திருப்தி

13th December 1961] [Sri C. Subramaniam]

அளிப்பது மட்டுமல்ல, நம்முடைய தமிழ்நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும் திருப்தி அளிக்கும் முறையில், எல்லா மக்களுக்கும் இருக்கும் குறைகள் மேலும் மேலும் நீங்கி வருகிற முறையில் பணியாற்றுவார்கள் என்று நம்புகிறேன். எல்லாக் குறைகளும் எந்தக் காலத்திலும் தீரப் போவதில்லை. இப்பொழுதிருக்கும் குறைகள் தீர்ந்தாலும் புதிய குறைகள் தோன்றிக்கொண்டுதான் இருக்கும். ஆனால், குறைகள் மேலும் மேலும் தீர்ந்துக்கொண்டிருக்கின்றன என்ற முறையில் எனக்குப் பின்னால் வரக்கூடியவர்கள் பணியாற்ற வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இந்தச் சட்டசபை பல்வேறு திட்டங்களுக்கு—முன்னேற்றத் திட்டங்களுக்கு—இத்தனை ஆண்டு காலமாக ஆதரவாக இருந்ததுபோல் தொடர்ந்து வருகிற திட்டங்களுக்கும் ஆதரவு அளிக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது. அந்த முறையில் இந்தச் சபையும் பணியாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னொன்று நான் பொதுவாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இந்த அளவு நாம் பல்வேறு துறைகளில் வெற்றி பெற்றிருக்கிறோம் என்றால், அது மந்திரி சபைக்கு ஒரு சிறப்பு அல்ல, அதிகார வர்கத்திற்கும் சிறப்பு அல்ல, சட்டசபைக்கும்கூட ஒரு சிறப்பு அல்ல, தமிழ் மக்களுக்குத்தான் அத்தனை சிறப்பும் உள்ளது. அதன் காரணமாகத்தான் கணிசமான அளவுக்கு முன்னேறியிருக்கிறோம். ஆகவே, மக்கள் எந்த அளவு உயருகிறார்களோ அந்த அளவுக்கு நம்முடைய பணி மேலும் மேலும் சிறக்கும், சிறந்துகொண்டே போகும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றேன். நான் சமர்ப்பித்திருக்கும் திட்டத்தை, அடுத்த ஆண்டு மே, ஜூனிலே இன்னும் விரிவு படுத்துவதற்கும், இதில் ஏதாவது சிறு குறை இருந்தால் அதை நீக்குவதற்கும் இன்னும் சில சிறப்புக்களை இந்தத் திட்டத்தில் ஏற்படுத்துவதற்கும் நம் பின்னால் வரும் வாரிசுகள் முயல்வார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கின்றேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. 1–30 p.m.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. STATUTORY RULES AND ORDERS.

414. Notification issued with Government Memo. No. 19464-U/61-8, Revenue, dated 31st October 1961 amending the rules, published with notification S.R.O. No. A-1033 of 1960 at pages 76 and 77 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 16th February 1960 regarding exchange, sales, etc., of inam lands. [*Laid on the table of the House under section*, 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act* 22 *of* 1959.)].

[13th December 1961

415. Notification issued with G.O. No. 1736, Public (General-M), dated 19th October 1961 amending the Public Department Notification S.R.O. No. A-415 of 1958, dated the 11th January 1958, published at pages 150-164 of Part I of *Fort St. George Gazette*, dated 22nd January 1958 regarding introduction of Tamil in Government offices, as official language. [*Laid on the table of the House under Section* 6 *of the Madras Official Language Act*, 1956 (*Madras Act XXXIX of* 1956)].

416. Notification issued with G.O. Ms No. 1757, Public (Services-A) Department, dated 21st October 1961 amending the Madras Public Service Commission Regulations, 1954, published with Public (Services) Department Notification No. 50, dated the 5th May 1954, at pages 759–768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954, as subsequently amended. [*Laid on the table of the House under Article* 320 (5) *of the Constitution of India*)].

B. Reports, Notifications and other papers.

*278. Notification issued with G.O. Ms. No. 3539, Home, dated 11th October 1961, amending the Madras Prevention of Cruelty to Animals Rules, 1940, published with Home Department Notification No. 1227, dated the 28th September 1940 at page 1445 of Part I of the *Fort St. George Gazette*, dated the 12th November 1940 as subsequently amended, the same having been previously published as required under sub-section (1) of section 15 of the Prevention of Cruelty to Animals Act, 1890 (Central Act XI of 1890).

279. Notification issued with G.O. Ms. No. 5650 Industries, Labour and Co-operation (Labour), dated 22nd September 1961 amending the Madras Industrial Disputes Rules, 1958, published with the Industries, Labour and Co-operation Department Notification S.R.O. No. A-8258, dated the 18th December 1958, Part I of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 27th December 1958, the same having been previously published as required by sub-section (1) of section 38 of the Industrial Disputes Act, 1947 (Central Act XIV of 1947).

280. Notification issued with G.O. Ms. No. 282, Health, dated 2nd February 1961, amending the Rules for the registration of vital statistics in local areas, published with the late Public Health Department Notification No. 303, dated the 15th August 1938, at pages 311–318 of Part I-A of the *Fort St. George Gazette*, dated the 25th April 1939 as subsequently amended under section 20 of the Madras Registration of Births and Deaths Act, 1899 (Madras Act III of 1899).

13th December 1961]

281. Notification issued with G.O. Ms. No. 2657, Public Works, dated 19th October 1961 amending the Madras Electricity (Supply) Finance Rules, 1958, published with Public Works (Electricity) Department Notification S.R.O No. A-5944 of 1958, dated the 9th September 1958 at pages 1 to 7 Part I of the *Fort St. George Gagette*, Extraordinary, dated the 10th September 1958, the same having been previously published as required by sub-section (1) of section 78 of the Electricity (Supply) Act, 1948 (Central Act LIV of 1948).

282. Fifteenth Report (Second Assembly) of the Committee on Estimates on Education Department.

283. Preliminary Report of the Committee of Privileges on the 'Obstruction Case'.

* Laid on the table of the House on 12th December 1961.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[13th December 1961

APPENDIX I.

[*Vide* answer to Starred Question No. 2295 asked by Sri T. S. Ramaswami, at the meeting on the Legislative Assembly held on 13th December 1961, page 621 supra.]

(*a*) *The statement below the quantities of fertilizers distributed during the year 1961–62 up to September 1961 and during the last five years in terms of Ammonium Sulphate regarding nitrogenous fertilizers.*

(All figures in metric tonnes.)

District.	1956–57 *Total in terms of A.S.*	1957–58 *Total in terms of A.S.*	1958–59 *Total in terms of A.S.*	1959–60 *Total in terms of A.S.*	1960–61 *Total in terms of A.S.*	1961–62 *up to September 1961. Total in terms of A.S.*
Chingleput (including Madras).	9,191	9,242	10,973	12,640	9,138	2,896
North Arcot	13,519	15,114	13,964	14,109	5,982	3,431
South Arcot	7,700	5,639	8,146	8,209	7,250	4,153
Thanjavur	10,238	13,619	18,251	20,748	17,564	6,223
Tiruchirappalli	12,014	11,998	13,837	10,468	5,854	1,643
Madurai	8,154	4,678	2,518	3,836	4,684	2,604
Ramanathapuram ..	3,307	2,135	3,484	4,817	3,343	1,372
Tirunelveli	12,783	10,790	14,112	12,348	7,997	3,356
Salem	4,613	5,425	5,987	5,533	5,528	2,496
Coimbatore	12,036	8,661	11,491	13,477	11,252	3,057
The Nilgris	116	162	234	209	54	142
Kanyakumari	522	3,028	3,215	3,533	2,936	1,183
Manure Mixing Firms ..	31,707	22,599	31,538	33,011	23,890	17,023
Total	1,25,90[illegible]	1,13,090	1,37,750	1,42,938	1,05,472	49,579

Note.—A.S. = Ammonium Sulphate.

(*b*) The Package Programme was started in April, 1960. The additional quantities of fertilizers supplied to the Thanjavur District specially for the Package Programme is given below:—

	April 1960 *to March* 1961 *in Tons.*	*April* 1961 *to September* 1961 *in Tons.*
Nitrogenous fertilizers in terms of Ammonium Sulphate	2,830	5,259
Superphosphate	2,356	2,261

All fertilizers are given on loan basis and there is no foreign aid or subsidy given by the State for the use of fertilizers.

APPENDIX II.

[Vide answer to Starred Question No. 2315 asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 13th December 1961, at page 633 supra.]

Statement showing the particulars of prisoners who died in jails in Madras State since September 1961, cause for their death and terms of their sentence.

Serial number and name of Jail.	*Name of convict.*	*Cause of death.*	*Term of sentence.*
(1)	(2)	(3)	(4)
1 Central Jail, Coimbatore	Rangan *alias* Ghinnan *alias* Raman *alias* Subban.	Acute gastro enteritis	Rigorous imprisonment for 6 months.
2 Do.	Subbaraya Mudali	Actue diarrhoea alias Dehydration. (Died in Government Headquarters Hospital.)	Rigorous Imprisonment for 2 months and fine Re. 1 in default 3 days rigorous imprisonment.
3 Do.	Makaliammal	Natural death	Remand prisoner.
4 Do.	Kaliannan *alias* Thara	Diabetes Mellitus (Died in Government Headquarters Hospital.)	Rigorous Imprisonment for 2 months and fine Rs. 5 in default regorous imprisonment for 1 week on each count. Sentence to run concurrently.
5 Do.	Kanda Novithan	Acute gastro enteritis. (Died in Government Headquarters Hospital.)	Rigorous Imprisonment for 2 months and fine Rs. 1 in default 2 days rigorous imprisonment on each count. Sentence to run concurrently.
6 Do.	Karuppa Goundan	Acute Caronary Thrombosis ..	Rigorous Imprisonment for 2 months and fine Rs. 20 in default 2 weeks Rigorous Imprisonment.
7 Central Jail, Salem	Nanjappa Goundan	Peptic Ulcer	Three years.

Statement showing the particulars of prisoners who died in jails in Madras State since September 1961, *cause for their death and terms of their sentence*—cont.

Serial number and name of Jail. (1)	*Name of convict.* (2)	*Cause of death.* (3)	*Term of sentence.* (4)
8 Central Jail, Madurai	Gopi Nair	Advanced Pulmonary Tuberculosis complicated by chronic enteritis and debility.	Rigorous Imprisonment for 6 months.
9 Do. ..	Madaswamy Thevar	Chronic Bronchied Ashtma ..	Rigorous Imprisonment for 4 months.
10 Central Jail, Tiruchirappalli	Shanmugham	Coronary Thrombosis	Rigorous Imprisonment for 6 weeks.
11 Do.	Perumal	Pulmonary Edema with Haemophysis	Rigorous Imprisonment for 3 months.
12 Do. ..	Muthu Goundan	Coronary Thrombos's	Life.
13 Central Jail, Vellore	Kulpanai *alias* Ramaswami ..	Carcinoma Cheak (Cancer.)	Rigorous Imprisonment for 2 months.
14 Do. ..	Rajaram Naidu	Acute Pulmonary Edema ..	Do.
15 Do. ..	Bangaru Chetty	Coronary Thrombosis	Rigorous Imprisonment for 1 month.
16 Do. ..	Kannan *alias* Kandaswamy ...	Pulmonary Edema	Do.

TRUTH ALONE TRIUMPHS

STATE LEGISLATURE, MADRAS LIBRARY 23 JUN 1962